# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 137 பங்குனி 29ஆம் நாள் வியாழக்கிழமை 12 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### வானூர்தி விபத்தில் 257 பேர் உயிரிழப்பு

*அல்ஜீரியாவில் துயரம்*

வடஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் இராணுவ வானூர்தி » 23

### மே முதலாம் திகதி விடுமுறை இல்லை

கொழும்பு, ஏப். 12
பன்னாட்டுத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே மாதம் முதலாம் திகதி அரசால் அறிவிக்கப்பட்டி » 23

### அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்

*அமைச்சர் ராஜித*

கொழும்பு, ஏப். 12
வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் உள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். இவ்வாறு அமைச்சரும் » 23

### சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குள் வெளி வியாபாரிகளுக்கு இடமில்லை

*சபையின் கன்னி அமர்வில் தீர்மானம்*

(விரிவு -பக்:8)

## ரணிலை ஆதரிக்க

# தமிழ்க் கூட்டமைப்பு எந்தவொரு நிபந்தனையும் விதிக்கவில்லை

## இப்படிச் சொல்கிறார் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன



கொழும்பு, ஏப்ரல் 12
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு நிபந்தனையும் விதிக்கவில்லை. 2015ஆம் ஆண்டு முன்வைத்த கோரிக்கையை தற்போது மீண்டும் முன்வைத்துள்ளார்கள். அவ்வளவுதான். அந்தக் கோரிக்கைகளில் குறிப்பிடப்பட்ட » 23

### இரண்டாவது வாகன 'பெமிட்டுக்கும்' விண்ணப்பிக்கும் வடக்கு அமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் மருத்துவர் ஜி.குணசீலன், இரண்டாவது வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித் துள்ளதாக, பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு, கொழும்பு அரசு சிறப்பு அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக » 23

### காணிகளைப் பறித்தெடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

*வலி.வடக்கு காணி விடுவிப்புத் தொடர்பில் கேள்வி எழுப்பிய செய்தியாளர் மீது ராஜித பாய்ச்சல்*

கொழும்பு, ஏப். 12
வடக்கில் பொது மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். தெற்கு மக்களின் காணிகளை இராணுவம் அபகரித்தால் அவர்கள் வெறுமனே இருப்பார் » 23

### முல்லை மீனவர்கள் குடாக் கடலில் மாயம்

(விரிவு - பக்:2)

### வடக்கு மாகாண முதல்வர் பதவிக்கு டக்ளஸும் கண்

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவது குறித்து ஆலோசித்து வருவதாக, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணசபையின் ஆயுள் காலம் எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் நாளுடன் முடிவடைய » 23

### அரசிலிருந்து சு.கவினர் 16பேரும் விலகினார்கள்

*நேற்றிரவு அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 12
ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் கூட்டு அரசிலிருந்து » 23

### யாழ்ப்பாண பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு 16இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாண மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16ஆம் திகதி » 23

see more news in
newuthayan.com

### ஐ.தே.கவுடன் போட்டியிட்டு அதிர்ஷ்டத்தில் நானாட்டானை கைப்பற்றியது கூட்டமைப்பு

*முசலி ஐ.தே.க. வசமாகியது*

மன்னார், ஏப். 12
நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகள் திருவுளச்சீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை தோற்கடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியது. முசலிப் பிரதேச சபையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறி » 23

### சிலைகளுக்காக கன்னி அமர்வில் நேரம் செலவிட்ட யாழ். மாநகர சபை

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ்ப்பாண நகர் உள்ளிட்ட மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பேசாது, சிலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலேயே, பெரும்பாலான உறுப்பினர்கள், அதிக நேரத்தைச் செலவிட்டனர்.
மாநகர சபையின் கன்னி அமர்வு மாநகர முதல்வர் இ.ஆர்னோல்ட் தலை » 23







# பதில் முதலமைச்சராக சர்வேஸ்வரன் பதவியேற்பு



யாழ்ப்பாணம், ஏப்.12
வடக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் நேற்றுப் பதவியேற்றார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இருவார ஆன்மீகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார். அதையடுத்து பதில் முதலமைச்சராக க.சர்வேஸ்வரன் நேற்று வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரே முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார். (ற-7)



# தொழிலாளர் நலன்சார்ந்து அரசு செயற்பட வேண்டும்

## ம.வி.மு பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.12
**தேசிய அரசு எவ்வளவு காலம் ஆட்சியில் இருக்குமென்பது எமக்குத் தெரியாது எனினும் இந்த அரசு ஆட்சியில் இருக்கும் காலம் வரையில் சாதாரண பொதுமக்கள் மற்றும் தொழிலாளர் நலன்சார்ந்து செயற்பட வேண்டும்.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.
பத்தரமுல்லையிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
அரசு தொழிலாளர் நலன்சார்ந்து செயற்பட வேண்டும் என்பதை இம்முறை மே தின கூட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தும்.
ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினரும், கடந்த காலங்களில் தொழிலாளர்களை கொலை செய்ததோடு, அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டனர்.
மே தினங்களை கொண்டாடுவதற்கு அந்தக் கட்சிகளுக்கு எவ்வித தகுதியும் இல்லை. மே தினத்துக்கு பன்னாட்டு ரீதியில் தொழிலாளர்களை பிரதிநிதித்துப் படுத்தும் சிவப்பு கொடியை அந்தக் கட்சிகள் புறக்கணித்துவிட்டு, தங்களது கட்சிக் கொடிகளை பறக்கவிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம். என்றார். (ற.ரி4)

# கொலைச் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.12
தங்காளை வீரகெட்டியவில் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
தங்காளை வலய விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது முச்சக்கர வண்டியில் பயணித்த நபரிடமிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது. அந்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது இரண்டு கொலைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிய வந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மேலதிக விசார்ணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

# பேருந்து வீதியைவிட்டு விலகி விபத்து

கொழும்பு,ஏப்.12
ஹபரனை மொரஸ்கஹவேவவில் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.
அதில் 8 பெண்கள் உட்பட 16 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்த விபத்து நேற்று இடம் பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். பொலன்னறுவயிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.
சாரதின் நித்திரைக் கலக்கமே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

# கைவிடப்பட்ட மகிழுந்து மீட்பு

கொழும்பு,ஏப்.12
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கைவிடப்பட்ட நிலையில் மகிழுந்து ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.
56 கிராமும் 100 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருள் மகிழுந்திலிருந்து கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

# சாலைப்பூக்கள் திரைப்பட வெளியீட்டு நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம், ஏப்.12
சாலைப்பூக்கள் திரைப்பட வெளியீட்டு விழா நேற்று ராஜா திரையரங்கில் இடம்பெற்றது. இந்தத் திரைப்படத்தை சுதர்சன் ரட்ணம் இயக்கியுள்ளார்.
நிகழ்வில்சிறப்புவிருந்தினர்களாக தமிழகத்தைச் சேர்ந்த பாடலாசிரியரும் கவிஞருமான ஸ்நேகன் மற்றும் நகைச்சுவை நடிகர் வையாபுரி ஆகியோர் கலந்து கொண்டனர். பறைசேர் நடனத்துடன் மாலை அணிவித்து பாடலாசிரியரும்கவிஞருமானஸ்நேகன் மற்றும் நகைச்சுவை நடிகர் வையாபுரியை படக்குழுவினர் வரவேற்றனர் .
நிகழ்வில் ஸ்நேகன் மற்றும் வையாபுரி ஆகியோர் உரையாற்றினர்.
ஸ்நேகன் தெரிவித்தாவது
தமிழார்ந்த உணர்வுகளை பகிர்வதற்கு தனக்கு ஆசை ஆனால் அவை தவிர்க்கப்படவில்லை தள்ளிபோகின்றன . தனது ஆளுமை வெளிப்படுத்த உகந்த ஒரு களமாக சாலைப்பூக்கள் திரைப்பட விழா அமைந்து உள்ளது.
இலங்கையில் வர எனக்கு நிறை ஆசை அது தற்போது நிறைவேறி விட்டது.
சிரிப்புகதையோகாதல்கதையோ அவற்றை மாற்றிக் கூறலாம். ஆனால் ஒருவனது வரலாற்றை மாற்றி சொல்ல முடியாது அதே போல்தமிழர்பட்டகஸ்டம்துயரம் கண்ணீர் துளி என்பவற்றை எடுத்து காட்டுவதாக இந்த படம் அமைந்து காணப்படுகிறது
அதை எடுத்து காட்டிய துணிச்சல் இந்த படத்தின் இயக்குனர் சுதர்சன் ரட்ணம் அவர்களுக்கு உள்ளது. வரலாற்றை பதிவு செய்யா மலே தமிழரின் பாரம்பரியம் கலை என்பவை பரவிக்கிடக்கிறன. பறைசேர் நடனத்துடன் எங்களை வரவேற்றது பெருமை படதக்க விடயம். தமிழன் சாயும் போதும் சோரும் போதும் நீ இவ்வாறு எல்லாம் அடிபட்டு உள்ளாய் என்பதை எடுத்து காட்டி தமிழனை நிமிர்த்துவதற்கு இந்த படம் உதவியாக உள்ளது.
ஒரு படைப்பாளி போராளி ஆகும் போது இயற்கையும் காலமும் கைகூடும். உண்மையை சொல்ல தயங்கக்கூடாது சொன்னால் அதற்கு திமிர் என்ற பெயர் அது தமிழனுக்கு நிறையவே இருக்கிறது. என்றார்.
வையாபுரி உரையாற்றியபோது தெரிவித்தாவது
கிராமத்தில் தான் நான் பிறந்தவன் எனக்கு விமானம் என்றாலே என்னவென்று தெரியாது. நான் உலகம் சுத்தி பார்க்க காரணமாக இருந்தவர்கள் ஈழத்தமிழ் மக்கள் தான் இழந்தவனுக்கு தான் அந்த அருமை தெரியும் அதனை ஈழத் தமிழ் மக்கள் அதிகமாக இழந்துள்ளார்கள். அவர்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை இந்த உணர்வை இந்த சாலைப்பூக்கள் படம் உணர்த்துகிறது.
இந்த படத்தில் வந்த இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் நடிப்பு வரவேற்க்கதக்கதாகும். இந்த படம் எடுப்பதற்கு 30 இலட்சம் செலவு இது பாராட்டதக்க விடயமாகும். இந்தியாவில் என்றால் மூன்று நாட்கள் கூட படப்பிடிப்பை மேற்கொள்ள முடியாது. என்றார்.
ஈழத்து கவிஞர் றெமிஸா படக்குழுவினர் மற்றும் ரசிகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-111)

# மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மாயம்

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ். மண்டைத்தீவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமற் போயுள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு காணாமற் போயுள்ளனர். முல்லைத்தீவில் இருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பரப்பில் மீன்பிடிக்க வந்துள்ளனர்.
படகில் மீன்பிடிக்கச் சென்ற வேளையில் படகு பழுதடைந்த நிலையில் நடுக்கடலில் இருந்து தகவல் தெரிவித்துள்ளனர். அந்த தகவலறிந்து மீனவர்கள் சென்ற வேளையில் அங்கு அந்த மீனவர்களை காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ற.ரி5.106)

# வீடு உடைத்து நகைகள் திருட்டு

மட்டக்களப்பு,ஏப்.12
மட்டக்களப்பு குமாரபுரத்தில் நேற்று முன்தினம் இரவு பூட்டியிருந்த வீட்டை உடைத்து 21 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த வீட்டின் உரிமையாளர்கள் கடந்த 9ஆம் திகதி வீட்டை பூட்டிவிட்டு குடும்பமாகக் கண்டிக்குச் சென்று நேற்று நள்ளிரவு வீட்டுக்கு வந்த போது வீட்டின் மாடியிலுள்ள கதவை உடைத்து அலுமாரியில் இருந்த 21 பவுண் தங்க நகைகள் கொள்ளை யடிக்கப் பட்டதை அவதானித் துள்ளனர்.
அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர். பெலிஸார் சம்பவஇடத்துக்கு வந்து விசாரணைகளை மேற் கொண்டனர். (ற.ரி4)

# விஜயகலா தொடர்பில் அவதூறு: ஊடவியலாளரிடம் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப்.12
சிறுவர் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக அவதூறான செய்தி வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் இணையத்தள குற்றவியல் விசாரணைக் குழுவால் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.
சுயாதீன ஊடகவியலாளராக கடமையாற்றும் ஒருவரே இணையத்தள குற்றவியல் (சைபர் க்றைம்) விசாரணைக் குழுவால் யாழ்.மாநகர சபையில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று தெரவிக்கப்பட்டது.
இணையத்தளம் ஒன்றில் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக அவதூறான செய்தி பிரசுரித்த குற்றச்சாட்டிலேயே இந்த விசாரணை முன்னெடுக்கப் பட்டுள்ளது. இந்தச் செய்தி தொடர்பாக சிறுவர் மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்ததை தொடர்ந்து. இணையளத்தள குற்றவியல் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.
அந்த ம்றைப்பாட்டை அடுத்து யாழ்ப்பாணத்துக்கு வந்த இணையத்தள குற்றவியல் தொடர்பான விசாரணைக்குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)



## வாகன விபத்தில் மூவர் காயம்

வவுனியா, ஏப்.12
வவுனியா தொடருந்து வீதியில் நடந்த விபத்தில் மூவர் காயமடைந்தனர். வீதியைக் கடக்க முயன்ற முதியவர் மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது. இதில் முதியவர் படுகாய மடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் கட்டுப்பாடை இழந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# தூய்மையான நிர்வாகத்தால் வினைத்திறனுக்கு பாதிப்பு

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.12
கூட்டரசு செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை ஒரே நேரத்தில் செய்யும் போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. தூய்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தும் போது வினைத்திறன் பாதிக்கின்றது. இவ்வாறு அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.


செத்சிறிபாலவில் மூன்றாம் கட்ட கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்றுநடைபெற்றது.
இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாட்டில் நல்லாட்சி செயற்பாடுகளுடன் அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுகிறது. காணிகளை பெற்றுக்கொள்ளவும் தேவையான கேள்வி மனு நடைமுறைகளை மேற்கொள்ளவும் அமைச்சரவையின் அனுமதியை பெறவும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் நீண்டகாலம் செலவாகிறது. இது மிகவும் கவலைக்குரிய நிலைமை. நாங்கள் நல்லாட்சியுடன் தூய்மையான நிர்வாகம் மற்றும் வினைத்திறன்மிக்க நிர்வாகத்தை எதிர்பார்த்தோம். தூய்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தும் வினைத்திறனுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. என்றார். (ற.ரி4)

# முல்லைதீவுக் கடலில் எந்த மாற்றமும் இல்லை

## இடர்முகாமைத்துவ பிரிவு அறிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 12
முல்லைத்தீவுக் கடலில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை என்று, இடர்முகாமைத்து மைய நிலையம் அறிவித்துள்ளது.
இணையத்தளங்கள், சமூக ஊடகங்களில், முல்லைத்தீவு கடலில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அமெரிக்க அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டுள்ளதாகவும் செய்திகள் வேகமாகப் பரவியது. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட இடர்முகாமைத்துவ மைய நிலைய உதவிப் பணிப்பாளர் காமினி பிரியந்த தெரிவித்தாவது,
முல்லைத்தீவுக் கடலில் எதுவித மாற்றங்களும் ஏற்படவில்லை. அது தொடர்பில் அமெரிக்க குழு ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. இது கரையோர மக்களை பீதி கொள்ளவைக்கத் திட்டமிட்டடு பரப்பப்படும் வதந்தி.
அமெரிக்க அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் இடர்முகாமைத்துவ பிரிவுக்கு அண்மையில் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் உதவியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களையே பார்வையிட்டு சென்றுள்ளார்கள்.
முல்லைத்தீவு கடலில் எதுவித மாற்றங்களும் இல்லை. கரையோர மக்கள் வழமை போன்று தொழில் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்றார்.
(5.ரி3)





## வவுணதீவில் பலகாரச் சந்தை

மட்டக்களப்பு, ஏப்.12
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று பலகாரச் சந்தை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட பலகாரவகைகள், உணவுப் பொருட்கள் காட்சிக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டிருந்தன.
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ.தனுசியாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.சுதாகர், நிருவாக உத்தியோகத்தர் ஜெ.ஜெயந்திரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ரி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-ரி5)

## ஐந்துசந்தியில் மாவா விற்பனை: 7 சந்தேகநபர்களுக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ்ப்பாணம், ஐந்துசந்திப் பகுதியில் இயங்கிய மாவா போதைப் பொருள் விற்பனை நிலையத்தில் கைது செய்யப்பட்ட 7 பேரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று உத்தரவிட்டது. யாழ். குடாநாட்டுக்கு மாவா போதைப் பொருளை வழங்கும் பிரதான சந்தேநபர் புத்தளத்தில் உள்ளார் என்றும், அவரையும் ஏனைய சிலரையும் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் கேக் விற்பனை நிலையம் என்ற பெயரில் இயங்கிய மாவா விற்பனை நிலையம் நேற்றுமுன்தினம் சுற்றிவளைக்கப்பட்டது. வடக்கு மாகாண மூத்த பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்ணான்டோ பணிப்புக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
வியாபார நிலையத்தில் கடமையாற்றிய 3 பேரும், மாவாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரும் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் 7 பேருக்கும் எதிராகத் தனித்தனியே முதல் அறிக்கை முன்வைத்து நேற்றுப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை மாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. மாவா போதைப் பொருள் விற்பனை வலையமைப்பை யாழ்ப்பாணக் குடாநாட்டில் முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்த வியாபாரத்தில் ஈடுபடும் புத்தளத்தில் வசிக்கும் முக்கிய சூத்திரதாரி உள்ளிட்ட மேலும் சிலர் கைது செய்யப்படவுள்ளனர். இந்த சந்தேகநபர்கள் 7 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்றிடம் கோருகின்றோம் என்று பொலிஸார் விண்ணப்பம் செய்யதனர். முதல் அறிக்கையை ஆராய்ந்த நீதிவான், சந்தேகநபர்கள் 7 பேரையும் வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற)

## மஸ்கெலிய மோதல் சம்பவம்

# 38 பேருக்கு எதிராக பி அறிக்கை தாக்கல்

மஸ்கெலியா பிரதேச்சபையின் தவிசாளர் தெரிவின் போது ஏற்பட்ட பதற்றநிலை மற்றும் கல்வீச்சுத் தாக்குதல் தொடர்பான சம்பவம் தொடர்பாக 38பேருக்கு எதிரா ஹற்றன் நீதிமன்றில் பி அறிக்கை சமர்பிக்கபட்டுள்ளது என்று ஹற்றன் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.
அதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஆதரவாளர்கள் உட்பட 38 பேருக்கும் எதிர்வரும் 25ஆம் திகதி ஹற்றன் நீதிவான் நீதிமன்றில்முன்னிலையாகுமாறு நீதிமன்றால் அழைப்பானை பிறப்பிக்கபட்டுள்ளது.
கடந்த 28ஆம் திகதி புதன் கிழமை மஸ்கெலியா பிரதேசசபைக்கான தவிசாளர் தெரிவில் ஜக்கிய தேசிய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் வாக்களிப்புக்கு கலந்து கொள்ளாமை தொடர்பில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஆதரவாளர்களும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர் களுக்கிடையில் ஏற்பட்ட மோதலையடுத்தே அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

## ஆயுதத்தால் தாக்கி இருவர் கொலை இரு வேறு இடங்களில் சம்பவம்

கொழும்பு, ஏப்.12
நிட்டம்புவ, எல்லக்கல பகுதியில் ஆயுதத்தால் தாக்கி ஒருவர் நேற்று கொலை செய்யப்பட்டுள்ளார்.
தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்த கொலை நடத்துள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
சம்பவத்தில் பலத்த காயமடைந்த நபரை வதுபிட்டிவல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.
பனாவல, தும்மலகொட பகுதியை சேர்ந்த 41 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
அத்துடன் வலப்பனை, திம்புட்டுகொட பகுதியில் நேற்று முன்தினமும் ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டார்.
வடபே, திம்புட்டுகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரே கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
கொலை சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைது செய்ய வலப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## ஓட்டோ விபத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.12
கம்பளை தொலுவ பிரதான வீதியில் துன்தெணிய சந்தியில் நேற்று முன்தினம் நடந்த முச்சக்கரவண்டி விபத்தில் 3பேர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.
விபத்தில் ஒரே குடும்பத்தையுடைய வரகாபொல, மெதிரிகிரிய மற்றும் கம்பளை மாவெல ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 82,72 மற்றும் 74 வயதுடையவர்களே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
முச்சக்கரவண்டியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி கால்வாய் ஒன்றில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.
விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற.ரி4)

# சம்பளம் அதிகரிக்கக் கோரி நாடளாவிய ரீதியில் போராட்டம்

## மக்கள் விடுதலை முன்னணி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.12
அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்ககான வேதன அதிகரிப்பை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது என அந்தக் கட்சியின் அரசியற்குழு உறுப்பினர், லால் காந்த தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது, "எதிர்வரும் மேதினத்துக்குப் பின்னர், சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியக் குறைப்பு ஆகியவற்றை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.
தேசிய அரசு ஆட்சிக்கு வ்ந்ததன் பின்னர், ஒரு குடும்பத்தின் வாழ்க்கைச் செலவு, 6ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்றார். (ற-ரி5)

சிறுநீரகம் தேவை
20 வயதுடைய மாணவர் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்தமையால் O+ அல்லது O- இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.
(CS 15613)(04-17)
071 986 1683/077 979 7403

# பனங்களி, பனம் வெல்ல உற்பத்தி நிலையங்களின் புதிய கட்டடத் திறப்பு


வடமராட்சி, ஏப். 12

வடமராட்சி கிழக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுக் சங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பனங்களி (பாணம்) பனம் வெல்ல உற்பத்தி நிலையங்களின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராச கலந்துகொண்டார்.

சிறப்புவிருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சிவயோகன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஏ.சி. அரியகுமார், ஐக்கிய தேசியக் கட்சி யின் வடமராட்சி அமைப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள், கிராம மக்கள் , தொழிலாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

தேசியநல்லிணக்கசெயலகத்தின் நிதியில் 1.4 மில்லியன் ரூபா செலவில் பனங்களி உற்பத்தி நிலையக் கட்டடமும், வடமாகாணசபை உறுப்பினர் சிவயோகனின் ஒதுக்கீட்டுநிதியில் 1.2 மில்லியன் ரூபா செலவில் பனம் வெல்ல உற்பத்தி நிலையத்துக்கான புதியகட்டமும் அந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களுக்கான நிதியுதவி மகளீர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின்பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதியிலிருந்தும் சுமார் 1.2 மில்லியன் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (70)





## விவசாயி மாதாந்த சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 12

விவசாயம் தொடர்பான தகவல்கள் அடங்கிய 'விவசாயி மண்ணின் தோழன்" மாதாந்த சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கற்பகவனம் வேளாண்மை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிவராஜா அனுராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பல தலைப்புக்களில் உரை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. மருத்துவர் பார்வையில் இயற்கைவிவசாயமும் சுகநலனும் என்றதொனிப்பொருளில் மருத்துவக்கலாநிதி சி. சிவன் சுதனும், சூழலியல் பார்வையில் சூழலியலும் விவசாயம் என்ற தலைப்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சரும், சூழலியலாளருமான பொ. ஐங்கரநேசனும், கல்வியியலாளனின் பார்வையில் விவசாயம் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதியும், விவசாய பேராசிரியருமாகிய கலாநிதி கு. முகுந்தனும், நிர்வாக அதிகாரியின் பார்வையில் விவசாயம் என்ற தலைப்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலனும், பொருளியற் பார்வையில் விவசாயம் என்ற தலைப்பில் வங்கியியலாளர் எஸ். சுந்தரேஸ்வரனும், சட்டவாளரின் பார்வையில் விவசாயம் என்ற தலைப்பில் சட்டத்தரணி சுகாஸ் கனகரட்னமும், சமூக சேவையாளனின் பார்வையில் விவசாயம் என்ற தலைப்பில் வலிகாமம் தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ. ஜெபநேசன் ஆகியோர் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டார்கள் அறிவித்துள்ளனர். (114)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 12

ந. குகபரனின் ஈழத்தில் ஒல்லாந்தர் காலத் தமிழ் இலக்கியங்கள் சமூக-அரசியல்நோக்கு என்றநூல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணக் கல்லூரிபட்டதாரிப் பிரிவுமண்டபத்தில் (ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்) இன்றுவியாழக்கிழமைமாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேரா சிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

## திறப்பு விழா

அளவெட்டி, ஏப். 12

மாகியப்பிட்டிபுனிதசெபஸ்தியார் ஆலயம் புனர்நிர்மானம்செய்யப்பட்டு அதன் திறப்பு விழா இன்று காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பெனடிற் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதனைத்தொடர்ந்துதிருப்பலிபூசைஒப்புக்கொடுக்கப்படும்எனமேற்படி ஆலய பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய கலாநிதி மைக்கல் சௌந்தர் நாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார். (36)

# சிற்றங்காடி வர்த்தகர்கள் வெப்பத்தால் கடும் பாதிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 12

தற்போது அதிகரித்துவரும் வெப்பநிலையால் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட யாழ். மத்திய சிற்றங்காடி வர்த்தகர்கள் பாதிப்புக்கு உள்ளாகுவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்தவருடம் நடைபாதைவியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாண பேருந்து நிலையத் துக்கு அருகில் 76 கடைத்தொகுதிகளைக்கொண்ட சிற்றங்காடி ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அந்ததொகுதிக்குவெயில், மழை போன்றவற்றில் இருந்து பாதுகாக்க மேற் புறம் தகரம் மற்றும் பிளாஸ்டிக்கால் ஆக்கப்பட்டது போன்ற வெண்நிற சீற் என்பன பொருத்தப்பட்டன.

இவ்வாறுபொருத்தப்பட்டவெண்நிற சீற்றின் ஊடாக அதிகளவு வெப்பம் உள்வாங்கப்படுவதால் வர்த்த கர்கள் பெருமளவு பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். முக்கியமாக சிறுநீர் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், தலை வலி, முடி உதிர்தல் என்பன ஏற்படுவதுடன் புதிதாக உள்ள ஆடைகள் நுகர் வோர் வெளியில் எடுத்துப் பார்க்கும் போது வெளிறியது போல காட்சியளிப்பதால் கொள்வனவுசெய்வதில் தயக்கம் காட்டுவதாகவும் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் கூறியும் அவர்கள் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்க்கொள்ளவில்லை தொடர்ந்து பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்துவருகிறோம் என அங்காடி வியாபாரிகள் தெரிவித்தனர்.

மேலும் யாழ்ப்பாண மத்திய சிற்றங்காடியில் தேங்குகின்ற குப்பைகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படுவதில்லை எனவும், தமக்கு ஒழுங்கான குடிநீர் வசதி, மலசலகூட வசதி இல்லாத போதும் ஒழுங்காக வாடகைப்பணம் மாத்திரம் அறவிடப்படுகிறது எனவும் குற்றம் சாட்டியுள்ளனர். (114)

## சாவகச்சேரி பிரதேசசபையின் கன்னி அமர்வு

சாவகச்சேரி, ஏப். 12

சாவகச்சேரிபிரதேசசபையின்கன்னி அமர்வு இன்று வியாழக்கிழமை மாலை3மணிக்குசபாமண்டபத்தில் நடைபெறுமென தவிசாளர் க. வாமதேவன் அறிவித்துள்ளார்.

கடந்த ஐந்தாம் திகதி பிரதேச சபையின் தவிசாளர் பிரதித் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. (9)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஏப். 12

ஏழாலை களபாரோடை வசந்தபுரம் சிறி வசந்த பூசணி அம்பாள் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஓதுவார் மூர்த்திகளான கு. இராமச்சந்திரன், ச. சுப்பிரமணியம், மு. பார்வதிநாதன், இ. இராமகிருஸ்ணண் பு. மகேஸ்வ ரன், ச. பாலமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையும் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

# அரசுடன் இயங்கியவர்களுக்கு சிலைகள் அமைக்க வேண்டாம்

## உறுப்பினர் மணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 12

எமது தேசத்தின் விடுதலைக்காகப் போராடியவர்களின் சிலைகளே அமைக்கப்பட வேண்டும். மாறாக இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டவர்களுக்குச் சிலை அமைப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு சட்டத்தரணியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் மாநகர சபை உறுப்பினரும் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

மாநகர சபையின் நேற்றைய கன்னி அமர்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பணத்தில் சிலைகள் வைக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகின்றது. அதில் எமது தேசத்தின் விடுதலைக்காக போராடியவர்களுக்குத்தான் சிலைகள் அமைக்கப்பட வேண்டும். அதனைவிடுத்து இலங்கை அரசுடன் இணைந்து தேசியத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்களை இதற்குள் இணைப்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் பெரும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன என்று வடக்கு மாகாண சபை விசாரணைக் குழு ஒன்றை அமைத்து அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை மாகாண சபையிடம் இருந்து உடனடியாகப் பெற்று சபை முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (4.8)

## யோகேஸ்வரி இனிமேல் நின்று உரையாற்றார்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் தற்போதைய உறுப்பினருமான திருமதி ப. யோகேஸ்வரி, நேற்றுக் கன்னி உரையாற்றும்போது இருக்கையில் அமர்ந்து உரையாற்றினார். இதனை அவதானித்த முதல்வர் சபையின் கௌரவத்தைக் கருத்திற்கொண்டு உறுப்பினர்கள் எழுந்து நின்றே உரையாற்றுவார்கள். ஆனால் நீங்கள் இருந்தவாறு உரையாற்றியுள்ளீர்கள். சபையை அவமதிக்கும் வகையில் இவ்வாறான செயல்களை இனிவரும் காலங்களில் செய்யாதீர்கள். எழுந்து நின்று உரையாற்றும் முறையை முழு உறுப்பினர்களும் பின்பற்ற வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தினார். பிரதி முதல்வரின் கன்னி உரை நிறைவடைந்த பின்னர் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கன்னியுரை ஆற்ற நேரம் ஒதுக்கப்பட்டது. பின்னர் சபை ஒத்திவைக்கப்படும் போது உறுப்பினர் யோகேஸ்வரி, "எனக்குக் காலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது. என்னால் நின்று உரையாற்ற முடியாது. எனவே இனிவரும் காலங்களிலும் இருந்தவாறு உரையாற்ற அனுமதி தரவேண்டும்" என்று சபை முதல்வரிடம் கோரினார். அதனை முதல்வர் ஏற்றுக்கொண்டார். இதேவேளை, சபைக்கு வரும்போதும் சபையை விட்டு வெளியேறும் போதும் உறுப்பினர் யோகேஸ்வரி சகஜமாகவே நடந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. (4.8)

# பல விடயங்களையும் கற்று வருகிறேன் பொதுமக்களுக்காக உழைக்க வாருங்கள்

## மாநகர முதல்வர் கன்னி உரையில் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாண மாநகரசபையில் கட்சிபேதங்களுக்கு அப்பால் எமது மக்களின் நலன்களுக்காக உழைக்கின்றவர்களாக நாம் எல்லோரும் செயற்பட முன்வரவேண்டும். சபையைக் கொண்டு நடத்த பலவற்றைக் கற்றுக்கொண்டுவருகிறேன். எனது முதலாவதும் முதன்மையானதும் பணியாக 'மக்கள் தேவைகளை அறிந்துகொள்தல்' என்னும் விடயம் அமையவுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட் தனது கன்னி உரையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதலாவது அமர்வு சபை மண்டபத்தில் முதல்வர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் யாழ்ப்பாண மாநகரின் முதல்வராக அமர்ந்திருப்பது, எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்தை மேலும் வலுவூட்டுவதற்காகவேயன்றி வேறு நோக்கங்களுக்காக அல்ல என்பதையும் இங்கு கூறிவைக்கவிரும்புகின்றேன். எமதுபதவிகளும் எமக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களும் எம்மையும் எமது மக்களையும் எமது மக்களுக்கான விடிவு நோக்கிய பயணத்திலிருந்து திசைதிருப்புமாக இருந்தால் அந்தக்கணமே எமது பதவிகளைத் துறக்கவும் அதிகாரங்களைத் தூக்கியெறியவும் நாம் ஒருபோதும் பின்னிற்கப்போவதில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக நாம் "சுத்தமான பசுமை மாநகரம்" என்னும் கருப்பொருளோடு கூடிய முக்கிய 7விடயங்களையும் 31துணைவிடயங்களையும் உள்ளடக்கிய ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் முன்னிறுத்தி எமக்கு வாக்களியுங்கள் என்று மக்களைக் கோரினோம்.

மாநகரின் முதல்வராகப் பதவியேற்ற நாள்முதல் நான்ஒருமாணவனாகபல்வேறுவிடயங்களைக் கற்றுக்கொண்டு வருகின்றேன். நிர்வாக நடைமுறைகள் துறைகளின் செயற்பாடுகள் மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் கழிவகற்றல் முகாமைத்துவம் எமது அதிகார எல்லைகள் வர்த்தக சூழ்நிலைகள் ஊழியர்கள் அதிகாரிகள் நிதி சார்ந்த நிலைமைகள் எனப் பலவிடயங்களையும் நான் கண்டறிந்து கொண்டேன். எமது 27 வட்டாரங்களுக்குமான உறுப்பினர்கள் பட்டியல் மூலம் தெரிவாகியிருக்கும் உறுப்பினர்கள், நிலையியற் குழுக்கள், அதிகாரிகள், ஊழியர்கள், நான் நியமிக்கவிருக்கும் இணைப்பாளர்கள், ஆலோசகர்கள், இந்தப் பிரதேசத்தின் இளையோர், புத்திஜீவிகள் மற்றும் மதப்பெரியார்களின் துணையோடு குறைபாடுகளையும் தேவைகளையும் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய விடயங்கள் குறித்தும், அவை பற்றிய தரவுகளையும் பெற்று முதன்மை அடிப்படையில் செயற்றிட்டங்கள் வகுத்துச் செயற்படுவதே எனது எண்ணம்.

நாங்கள் ஒரு தொழிலைச் செய்வதற்காக இங்கு வரவில்லை. நாங்கள் ஒருபணியைச் செய்வதற்காகவே இங்கு வந்திருக்கின்றோம். மாநகரசபையின் அனைத்து ஊழியர்களும் இதன் பங்காளர்களே. இந்த மாநகரின் முன்னேற்றத்தின் பங்காளிகளாகவே எமது ஊழியர்கள் அனைவரையும் நான் காண்கின்றேன். வினைத்திறனான நிர்வாகமொன்றை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நிகழ்த்திக் காட்டுவோம்.

கடந்த காலங்களிலே மாநகரசபையிலே பல்வேறுமுறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகப் பலரும் பலவேறு சந்தர்ப்பங்களிலே முறைப்பாடுகளை முன்வைத்து வந்திருக்கின்றார்கள். இவை உரிய முறையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சு இதுவிடயத்தில் முன்னெடுக்கும் அனைத்துவிதமான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு இந்த அவை தனது முழுமையான ஒத்துழைப்புக்களை நல்கும் எனவும் குறிப்பிட விரும்புகின்றேன்.

கட்சிபேதங்களுக்கு அப்பால் கொழும்பு, மாகாண அரசுகளின் உதவி, ஒத்துழைப்புக்களோடும் எல்லோரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் என்று உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன் என்றார். (4.8)

## பிரபாகரனுக்கு சிலை வைத்தாலும் எதிர்க்கோம்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணத்தில் யாருக்குச் சிலைகள் அமைத்தாலும் நாம் பக்கபலமாக இருப்போம். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குச் சிலை அமைத்தாலும் நாம் எதிர்க்க மாட்டோம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஈபிடிபி உறுப்பினர் ஜெகன் தெரிவித்தார்.

மாநகர சபையின் நேற்றைய முதலாவது அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் சிலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று இங்குள்ள பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு நாம் ஆட்சேபிக்க மாட்டோம். நீங்கள் யாருடைய சிலை என்றாலும் நிறுவலாம். அதற்கு நாம் பக்கபலமாக இருப்போம். நாங்கள் இந்தச் சபையில் ஒரு கூட்டுக் குடும்பமாகச் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி பற்றிய விசாரணைக்கும் நாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (4.8)

### கடந்த மாநகர ஆட்சியில் ஊழலா?

# விசாரணை நடத்துங்கள் தயாராகவே இருக்கிறேன்

## சவால் விடுக்கிறார் முன்னாள் மேயர்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்தகாலங்களில் ஊழல் மோசடி இடம்பெற்றதாக அரசியல் உள்நோக்கத்துக்காகவே கூறப்படுகின்றது. எந்த விசாரணைக்கும் நான் தயாராகவே இருக்கிறேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயரும் தற்போதைய உறுப்பினருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். சபையின் முதலாவது அமர்வு நேற்று இடம்பெற்றபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திவேலைத் திட்டங்களைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் என் மீது ஊழல் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே அரசியல் உள்நோக்கம் கொண்டவை. இவை பற்றிய எந்த விசாரணைக்கும் நான் தயாராகவே இருக்கிறேன். முழு ஒத்துழைப்பும் வழங்குவேன்.

வடக்கு மாகாண சபையில் அங்கம் வகித்த அமைச்சர்களுக்கு எதிராகவும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த விசாரணையின் பின்னர் அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளர். எனவே யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஊழல் தொடர்பாக விசாரணை செய்ய குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அதற்கு ஒத்துழைப்பு வழங்குவேன் என்றார். (4.8)

# கடந்த ஆட்சிக்கு முன்னரான ஊழல்களையும் விசாரியுங்கள்

## உறுப்பினர் றெமீடியஸ் கோருகிறார்

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த ஆட்சியில் மட்டுமன்றி அதற்கு முன்னைய காலத்து ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பிலும் முழுமையான விசாரணை நடத்தவேண்டும்.

இவ்வாறு மாநகர சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான மு.றெமீடியஸ் சபையில் கோரினார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய கன்னி அமர்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்த ஆட்சிக் காலத்திற்கு முன்னரும் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. பல கட்டடங்கள் எவ்வித கேள்விப் பத்திரங்களும் கோராமல் அமைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். யாழ்ப்பாணத்தில் எமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிலைகள் சீரமைப்புச் செய்யப்பட வேண்டும். எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை நாமும் கொண்டாட வேண்டும். நாங்கள் இந்தச் சபையில் எதிரிக் கட்சியாக இருக்க விரும்பவில்லை. மாறாக எதிர்க் கட்சியாகவே இருக்க விரும்புகின்றோம். நாம் சபைக்கு முழுமையான பக்கபலமாக இருப்போம். என்றார். (4.8)

# துவக்குத் தூக்கிய எல்லோருக்குமே சிலை வைக்க அனுமதிக்கக் கூடாது

## கன்னி உரையில் உறுப்பினர் தயாளன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

தியாகி திலீபன், மாநகர சபையில் மட்டுமன்றி எமது இனத்தின் அடையாளத்துக்கும் அப்பால் மனித குலத்திற்கே அடையாளமாகத் திகழ்ந்தார். போராட்ட வடிவத்துக்குத் தாமே சொந்தக்காரர் என்று மார்தட்டியோரைக் கிழித்தெறிந்து ஆகுதியாகிய ஒருவனுக்கே இன்று சிலை வைக்கப்படுகின்றதே அன்றி துவக்குத் தூக்கியவர்களுக்கெல்லாம், அரசியல் பேசியவர்களுக்கெல்லாம் சிலை வைக்கும் சபையாக மாற்றுமாறு கோரவில்லை. புனிதர்களை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கன்னி அமர்வு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அங்கு கன்னி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழர் தம் தேசவிடுதலைக்காகத் தம்முயிரைஉவந்தளித்தவீரமறவர்களை அவர் உரை ஆரம்பத்தில் நினைவு கூர்ந்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சபையை நம்பி யாழ்ப்பாண மாநகர சபை எல்லையில், வாழும் பொதுமக்களும், பல்லாயிரம்வர்த்தகர்கள், நிறுவனத்தினரும் உள்ளனர். அவர்களின் வரிப்பணத்திலும், பொதுமக்களின் மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட பணத்திலும் இந்தச் சபையின் பெயரில் பல கோடி சொத்துக்கள் உள்ளன. அவை மழையிலும் வெய்யிலிலும் பழைய இருப்பாகக் காணப்பட்டு சபை பஞ்சிகாவத்தை வியாபார சந்தைபோல் காட்சியளிக்கிறது.

சபையின் கடந்த ஆட்சியில் ஊழல் நடந்ததா என்று விசாரணை மேற்கொள்ள வேண்டும். அது நல்ல அறிவிப்பு, ஆனால் விசாரணை நடத்த இந்தச் சபையின் ஆயுள்காலம் போதுமானதா என்று நான் அறியேன்.

இந்தச் சபையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற விதிமீறல் அல்லது முறைகேடு தொடர்பில் பட்டியலிட்டால் 30 நிமிடமும் போதாது. இருப்பினும், சபைக்கு வரவேண்டிய வருமானங்கள் பல தெரிந்தே இழக்கப்பட்டுள்ளன. உதாரணமாக யாழ்ப்பாண நகரின் மத்தியில் முதலாம் மாடியில் இல.5 இல் இருந்த கட்டடம் தெரிந்துகொண்டே கட்சிசார் நிறுவனத்துக்கு 2014 ஒக்டோபரில் வழங்கப்பட்டது. 32 மாதங்கள் எந்த வாடகையும் செலுத்தாதபோதும் அதனை அறவிட எந்த நடவடிக்கையும் எடுக்கவோ, அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்லவோ இல்லை. இதனால் சபைக்கு 10 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா வருமானம் இன்று வரை செலுத்தப்படவில்லை.

அதேபோல் தமது புகழ்ச்சிக்காக சபையின் சொத்தை தவறாக வழங்கிய சம்பவங்களும் உள்ளன. உதாரணமாக சபையின் வட புறத்தே உள்ள முன்பள்ளிக் கட்டடத்தில் இயங்கிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வெளியில் வாடகைக்கு வீடு எடுத்து இயக்கிய போது சபையின் கட்டடம் இலவசமாக புலனாய்வாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் வெளியேறியபோதும் சபைக்கு அதிக செலவை வைத்துவிட்டே சென்றுள்ளனர்.

நகரைச்சீர்படுத்தவேண்டுமாயின் கடந்த காலங்களில் நடைபெற்ற தவறுகள் களையப்படவேண்டும். தவறுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாகாண அமைச்சர்களின் மோசடிக் குற்றச்சாட்டுக் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணை நடத்தியிருந்தார். அந்த அறிக்கை முதலமைச்சரிடம் சமர்பிக்கப்பட்டிருக்கின்றது..

எனவேபுதியதொருவிசாரணைக்குழு அமைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். அந்தப் பரிந்துரைகளை எமது சபை சட்டத்தை நடைமுறைப்படுத்தும் உரிய திணைக்களங்கள் ஊடாக விரைவாகச் செய்து முடிக்கவேண்டும்.

தவறினால் மக்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடுவோம். இந்தச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் கடந்த கால மோசடி தொடர்பில் விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற எனது கோரிக்கைக்கு எதிராக இருப்பார்கள் என்று எண்ணவில்லை. இதனைச் செயலுருப்படுத்தவேண்டியது இந்தச் சபையின் மேஜர் ஆனோல்ட்டின் கடமை என்றார். (4.8)

# சாவகச்சேரியில் சட்டவிரோத கொல்களத்துக்கு நேற்று சீல்

தென்மராட்சி, ஏப். 12

சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கி வந்த தனியாரின் கொல்களம் சாவகச்சேரி நகரசபை அலுவலர்களால் நேற்று மூடிச் சீல் வைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சபையின் தொழிலாளர் விடுதியில் சிரமதானம் மேற்கொள்ள தொழிலாளர் குடியிருப்புப் பகுதிக்கு, சபைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் பிரதித் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடன் சென்றிருந்தனர்.


அந்தப் பகுதி மக்கள் சட்டவிரோதமாக இயங்கும் கொல்களத்தால் தமக்கு சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதாக முறையிட்டிருந்தனர். அங்கு சென்று பார்வையிட்ட தவிசாளர் பிரதித் தவிசாளர் உறுப்பினர்கள், 50க்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள் பட்டியாக இருப்பதை பார்வையிட்டனர். உள்ளே



கொல்களமும் இருந்தமை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சபைக்குத் திரும்பிய தவிசாளர் சட்டவிரோதமாக இயங்கும் கொல்களத்தை மூடுமாறும் அங்கு காணப்படும் மாடுகள், ஆடுகள் மற்றம் பொருள்களை வெளியேற்றுமாறு காணி உரிமையாளருக்கு அறிவித்து அவற்றை வெளியேற்ற மூன்று தினங்கள் கால அவகாசம் வழங்கியிருந்தார்.

சபையின் அனுமதியின்றி 10 அடி உயர மதில் கட்டப்பட்டு அதனுள் கொல்களம் அமைத்துள்ளதுடன் அங்கு பெருமளவு கால்நடைகளும் கட்டப்பட்டிருந்ததுடன் வாகனங்களும் காணப்பட்டன. இவை அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து தனியார் கொல்களம் அலுவலர்களால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (5,9)



# அரசின் குறைகளைத் தீர்க்காது சு.கவினரை நீக்கிப் பயனில்லை

## வடக்கு ஆளுநர் குரே

கொழும்பு, ஏப். 12

கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்க்காது தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய 16 உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்வது பயனற்றது என்று வடமாகாண ஆளுநர் குரே தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியில் மாத்திரம் குறைபாடுகள் காணப்படுவதில்லை. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளிலும் தனிப்பட்ட மற்றும் அரசியல் சார்பான குறைபாடுகள் காணப்படுகின்றன. பிற கட்சியின் மீது குற்றம் சுமத்துவதை விட தமது கட்சியின் குறைகளை முதலில் சீர்செய்து கொண்டால் எவ்வித அரசியல் நெருக்கடிகளும் தோற்றம் பெறாது.

கூட்டு அரசு தற்போது புதிய அமைச்சரவை உருவாக்கம் தொடர்பில் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அரசின் மீது அரசியல் கட்சிகளே தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ரணிலுக்கு எதிராக தமது தனிப்பட்ட ஆதரவினை வழங்கிய சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது எவ்வித பயனையும், மாற்றங்களையும் தோற்றவிக்கப் போவது கிடையாது. அரசியல் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றினைந்தே கூட்டு அரசை உருவாக்கின. வெளித்தோற்றத்தின் அடிப்படையில் மாத்திரம் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன. இவ்விரு கட்சிகளுக்கிடையில் பெரிய கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஐக்கிய தேசிய கட்சி மீது சுதந்திரக் கட்சியும், சுதந்திரக் கட்சி மீது ஐக்கிய தேசியக் கட்சியும் குற்றம் சுமத்துவது இயல்பான விடயமாகவே காணப்படுகின்றது.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களின் விருப்பத்தின் பெயரிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது - என்றார். (5,61)

# போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உயர் கல்வி அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 12

பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிலையங்களின் போதனை சாரா ஊழியர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் பணிக்குத் திரும்பாவிடின் சேவையிலிருந்துதாமாக விலகியதாகக் கருதப்படும் என்று உயர் கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களின் போதனை சாரா ஊழியர்கள் கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி தொடக்கம் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உயர் கல்வி நிறுவனங்களின் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழு இந்தப் போராட்டத்தை நடத்த வருகிறது.

தொழிற்சங்க குழுவுக்கும் உயர் கல்வி அமைச்சருக்குமிடையே கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. அவற்றை உயர் கல்வி அமைச்சு இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலையிலே போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

*17ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்குத் திரும்ப வேண்டும்.*

நாடு முழுவதுமுள்ள பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் முடங்கிப்போயுள்ளன. புதிய மாணவர் அனுமதி மற்றும் பரீட்சைகள் தடைப்பட்டுள்ளன.

'போதனை சாரா ஊழியர்கள் வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்குத் திரும்பவேண்டும். அவ்வாறு அவர்கள் பணிக்குத் திரும்பாவிடின் நிரந்தர நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக் காலம் சம்பளமற்ற சேவைக்காலமாகவே கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் நியமனம் உறுதிப்படுத்தப்படாத, அமய மற்றும் ஒப்பந்த அடிப்படை சேவையிலுள்ள ஊழியர்கள் தமது சேவையிலிருந்து தாமாகவே விலகியதாகக் கருதப்படும்' என்று உயர் கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (5)

# கொழும்பு அரசியல் நெருக்கடி சமாதான புறாவாக சந்திரிகா

கொழும்பு, ஏப். 12

அரசில் ஏற்பட்டுள்ள உறுதிப்பாடற்ற நிலமை மற்றும் நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க களமிறங்கியுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் அரச தலைவர் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று மாலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவற்றை அடுத்து கூட்டு அரசின் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் பெரும் முரண்பாடான நிலமை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் போது சுதந்திரக் கட்சியின் 16 பேர் ரணிலுக்கு எதிராக வாக்களித்ததுடன் அரசில் இருந்து விலகப்போவதாகவும் அறிவித்துள்ளனர். இதனையடுத்து அரசின் உறுதிப்பாடு தொடர்பில் சிக்கலான நிலமை ஏற்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் போது பங்குகொள்ளாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து ஆட்சி அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

புதிய அமைச்சரவையை நியமிப்பது குறித்தும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. கூட்டு அரசில் சுதந்திரக் கட்சி நீடிக்குமா? இல்லையா? என்பதை அடுத்தே அமைச்சரவை மாற்றத்துக்கான திகதி நிர்ணயமாகும்.

அரசியல் உறுதிப்பாடற்ற நிலமைக்கு காரணமாகும் கூட்டு அரசின் இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான முயற்சியில் களமிறங்கியுள்ளார்.

இதனடிப்படையில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அலரி மாளிகையில் வைத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்து நீண்ட நேரம் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,31)

# ரணிலை எதிர்த்தோர் அரசில் தொடர ஒப்புதல் வாக்குமூலம் வழங்கவேண்டுமாம்

## அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித



கொழும்பு, ஏப். 12

சுதந்திரக் கட்சி கூட்டு அரசுடன் இணைய தீர்மானித்தால் அவர்களை இணைத்துக் கொண்டு கூட்டு அரசு தொடரும். ஆனால் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் போது தலைமை அமைச்சருக்கு எதிராக வாக்களித்த ஆறு அமைச்சர்களை புதிய அமைச்சரவையில் இணைக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றோம். ரணிலை எதிர்த்த சுதந்திரக் கட்சியின் 16 பேரும் மீண்டும் வர விரும்பினால் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டும். இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசின் நீடிப்பு தொடர்பில் தெளிவான தீர்மானத்தை எடுக்குமாறு அரச தலைவர் மைத்திரி அமைச்சரவைக்கூட்டத்தில் கூறினார். கூட்டு அரசு தொடர வேண்டியது அவசியமாகும். கூட்டு அரசு இல்லாவிடின் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. சுதந்திரக் கட்சியின் முடிவிலேயே கூட்டு அரசின் நீடிப்பு தங்கியிருக்கிறது.

ரணிலை எதிர்த்த 16 பேரும் அரசுடன் மீண்டும் இணைய விரும்பினால், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் ஊடாக மகிந்த, உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றியையும் பலமில்லாததாக்கிவிட்டார் -என்றார். (5,61)

# அமைச்சரவை மாற்றத்தை உறுதிப்படுத்தினார் ராஜித



கொழும்பு, ஏப். 12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுவின் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னர் நாளைமறுதினத்துக்குள் புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும், என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவை மறுசீரமைப்பல்ல புதிய அமைச்சரவையே சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ளது. நாளைமறுதினத்துக்கு முன்னர் மேற்படி புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளது.

புதிய அமைச்சரவையாக அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளபோதிலும் அவரவர் வகித்த துறைசார் அமைச்சுகள் பறிக்கப்படா. தர்க்க ரீதியான மாற்றங்களுடன் அமைச்சரவை மறுசீரமைக்கப்படும். 16 பேர் சுயாதீனமாகச் செயற்படவுள்ளனர்.

குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுப் புதிய அமைச்சரவையில் அனைவரும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வோம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுவின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னர் நாளைமறுதினம் தொடக்கம் புதிய அமைச்சரவை செயற்படும் - என்றார். (5)

## ரணிலைக் காப்பாற்றியவர்கள் அமைச்சு பதவிகளைக் காப்பற்ற தத்தளிக்கின்றனர்

*நாமல் ராஜபக்ச சாடல்*



கொழும்பு, ஏப். 12

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றிய சுதந்திரக் கட்சியினரால் தமது அமைச்சுப் பதவியைக்கூட காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலை உள்ளது. இவ்வாறானதொரு நிலைமையில் நாட்டின் அபிவிருத்தி பற்றி பேசுகின்றனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தங்காலை கால்டன் இல்லத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை வருடங்கள் உள்ள நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கட்சியையும் இழந்து போக்கிடமில்லாமல் தவிக்கிறார்.

சிறிலங்காபொதுமக்கள்முன்னணி வெற்றிபெற்ற பிரதேச சபைகளுக்கு வீதியை அமைக்க நிதி வழங்கப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் கூறுகின்றார்.

இந்த அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் வீதிகளை அமைக்கவில்லை. வீதியை அல்ல குறைந்தது ஒரு கால் வாயைக் கூட அமைக்கவில்லை.

பொதுமக்கள் முன்னணி வெற்றி பெற்ற பிரதேச சபைகளுக்கு நிதி தரமாட்டோம் எனக் கூறும் சிறிலங்கா சுதந்திரக் ·கட்சியின் அமைச்சர்கள் அரசிலிருந்து வெளியேறுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை காப்பாற்றிய இவர்களால் தமது அமைச்சுப் பதவியைக்கூட காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலமையில் தற்போது நாட்டின் அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றனர் - என்றார். (5)



## சு.க. அமைச்சர்கள் எங்களுடன் வருவார்கள்

*மகிந்த நம்பிக்கை*

கொழும்பு, ஏப். 12

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது எதிரணியுடன் இணையவுள்ளனர் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஆறு அமைச்சர்கள் உட்படப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது எதிரணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். 19ஆம் திகதி அவர்கள் தங்கள் பதவிகளைத் துறந்துவிட்டுப் பொது எதிரணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். அவர்களைத் தொடர்ந்தும் அரசில் தக்கவைத்துக் கொள்வதற்கான தீவிர முயற்சிகள் இடம்பெறுகின்றன எனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (5)

## கூட்டு அரசு பிளவுபடாது ரணிலிடம் மைத்திரி உறுதி

கொழும்பு, ஏப். 12

சமகால அரசியலில் எத்தகைய குழப்பங்கள் தோன்றினாலும் சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த கூட்டு அரசில் பிளவு ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப்போவதில்லை, என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரி மற்றும் தலைமை அமைச்சருக்கு இடையே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்னர் சிறப்புச் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே அரச தலைவர் மைத்திரி, தலைமை அமைச்சர் ரணிலிடம் இவ்வாறு உறுதியளித்தார்.

நாளை மறுதினம் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் எனவும் தலைமை அமைச்சரிடம் அரச தலைவர் தெரிவித்துள்ளார். (5)

# புதிய நாணயத்தாள் வழங்கல் ஆரம்பம்

*மத்திய வங்கி நடவடிக்கை*

கொழும்பு, ஏப். 12

கிறுக்கப்பட்ட மற்றும் கிழிந்த நாணயத்தாள்களுக்குப் பதிலாகப் புதிய நாணயத்தாள்களை வழங்கும் நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.

"வழங்கப்பட்ட கால எல்லைக்குள் மத்திய வங்கி உள்ளிட்ட வணிக வங்கிகளுக்குக் கிடைத்த சேதமாக்கப்பட்ட நாணயத்தாள்களுக்குப் பதிலாகப் புதிய நாணயத்தாள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சேதமாக்கப்பட்ட நாணயத்தாள்களின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை" என்று இலங்கை மத்திய வங்கியின் வர்த்தக நிதி திணைக்களத்தின் அதிகாரி தீபா செனவிரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, சேதமாக்கப்பட்ட நாணயத்தாள்களை மார்ச் 31 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்திலும் பிரதேச அலுவலகங்களிலும் மாற்றக்கூடிய சந்தரப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முகங்கொடுக்கும் அசௌகரியங்கள் மற்றும் அவர்களின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் சிறிய கீறல்களுடனான நாணயத்தாள்களைத் தொடர்ந்தும் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்த முடியும்.

தன்னியக்க இயந்திரத்தினூடாகக் கிறுக்கப்பட்ட நாணயத்தாள்கள் கிடைத்தால் அருகிலுள்ள வங்கிகளில் அதனை மாற்றிக்கொள்ள முடியுமெனவும் இலங்கை மத்திய வங்கியின் வர்த்தக நிதி திணைக்களம் தெரிவித்துள்ளது. (5)

# கூண்டோடு அரசிலிருந்து வெளியேறவேண்டிவரும்

*ஐ.தே.கவை மிரட்டுகிறது சு.க.*

கொழும்பு, ஏப். 12

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் 16 பேரையும் அரசிலிருந்து வெளியேற்றினால் ஒன்றாகவே அனைவரும் வெளியேறுவோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசிலுள்ள சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தாமாக விரும்பி அரசிலிருந்து விலகுவதற்கு உரிமையுண்டு. அவர்களை எவராவது பலவந்தமாக அரசிலிருந்து வெளியேற்ற முயற்சித்தால் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாம் அனைவரும் ஒன்றாகவே அரசிலிருந்து வெளியேறத்தீர்மானித்துள்ளோம்.

கட்சியிலிருந்து எவரையும் நீக்கவோ அல்லது கட்சியைப் பிரிக்கவோ மையச் செயற்குழு அனுமதிக்காது. கட்சி என்றதன் அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றாக இருந்து செயற்படவேண்டும் என்பதே அரச தலைவர் மைத்திரியினது விருப்பமாகும். எமது கட்சிக்குள் பிளவு வரக்கூடாது என்பதில் அரச தலைவர் மைத்திரியும் உறுதியாக இருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி தனது கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொண்டால் மட்டுமே நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடனான அரசைத் தொடர விரும்புகின்றோம் - என்றார். (5)

# வறட்சி பாதித்தவர்களுக்கு சோளப் பயிர்ச் செய்கை உதவி

கொழும்பு, ஏப். 12

புத்தளம் மாவட்டத்தில் கடுமையான வறட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாய சமூகத்துக்கு உதவி வழங்குவதற்காக 600 ஏக்கர் சோளப் பயிர்ச்செய்கைத் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால் இரண்டு போகங்கள் எத்தகைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபடமுடியாத பிரதேசங்களைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இங்கினிமிட்டிய திட்டத்திலுள்ள மிகவும் குறைந்த அளவில் உள்ள நீரைப் பயன்படுத்தி இந்த விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு மேலதிக பயிர்ச்செய்கைக்காக விவசாய சமூகத்துக்கு உதவி வழங்க மேலதிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தியால் நீர் பம்பிகளை இயக்கி நீரைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம், களை எடுக்கும் இயந்திரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம், இளம் விவசாய தொழில் முயற்சி யாளர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அரச தலைவர் அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாடுகளை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தி விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் உதவி வழங்கும் வகையில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன - என்றுள்ளது. (5)

# சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குள் வெளி வியாபாரிகளுக்கு இடமில்லை

## சபையின் கன்னி அமர்வில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 12

சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் உள்ளிட்ட வலி. தெற்கின் எல்லையினுள் உள்ள சந்தைகளில் வெளி வியாபாரிகளுக்கு இடம் வழங்குவதையும், நடைபாதை வியாபார நடவடிக்கையையும் தடை செய்யவேண்டும் என்ற தீர்மானம், வலி.தெற்குப் பிரதேச சபையின் கன்னி அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களால் சமர்பிக்கப்பட்ட அந்த் தீர்மானத்தில் கூறப்பட்டதாவது,

எமது மக்களின் தற்சார்பு பொருளாதாரத்தின் அங்கமாக வாழைச்செய்கை உள்ளது. வாழைப்பொத்தி, இலை, குழை, மடல் என்று அனைத்தையும் விற்றுச் சந்தைப்படுத்தும் இடத்தினை வேறு ஒரு தேவைக்குப் பயன்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றில்லை.

கடந்த காலங்களில் இந்தச் சந்தையில் பிரதான ஏற்றுமதிப் பொருளாக வாழைசார் உற்பத்தி இருந்தன. சில காரணங்களால் சந்தைப்படுத்தலுக்குரிய வாய்ப்புக்கள் அற்ற நிலையில் இது பின்தங்கியுள்ளது. ஆரம்பகாலத்தில் காணப்பட்டதை விட மேலும் சிறந்தமுறையில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதன் மூலம் எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமே தவிர, இந்த இடத்தை வேறு தேவைக்குப் பயன்படுத்துவது பொருத்தமானதல்ல.

பொலித்தீன் பாவனை நிறுத்தப்பட்டு வருகின்ற ஒரு சூழ்நிலையில் வாழை உற்பத்திப் பொருள்களின் மதிப்பு உயர்வடைந்து வருகின்றது. இலை, தடல், மடல் என்பவற்றின் மதிப்பு உயர இருக்கின்றது. இதற்கு தொழில்நுட்ப மதிப்பைக் கொடுத்து உயர்த்த வேண்டுமே தவிர, இதனை இல்லாமல் செய்யும் நிலைக்குக் கொண்டு செல்லக்கூடாது. தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு போன்ற காலங்களில் சந்தைப்படுத்தி அதிக வருமானத்தையும் பெறலாம்.

தற்காலிக நடைபாதை வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சந்தையை வழங்குவதற்குரிய நடவடிக்கையை இந்தப் பிரதேசசபையின் ஊடாக மேற்கொண்டுவருவதாகக் கூறப்படுகின்றது. இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் வாழைசார் உற்பத்தியாளர்கள், வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் நிரந்தர வியாபாரிகளுக்கு பெரும் இழப்பையும் ஏற்படுத்தும். கடன்களைப் பெற்று கொள்வனவு செய்த பொருள்களை சந்தைப்படுத்த முடியாமலும் வேலைக்கு அமர்த்திய வர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் கடனாளியாக மாற்றுவதாகவே அமையும்.

எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாம் எமது மக்களின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கைக்கும் இடமளிக்க முடியாது.

பிரதேசசபையின் பிரிவுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் இந்த விடயத்தை தற்காலிகமாக உடன் நிறுத்தப்பட்டு எமது மக்களின் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்படும் வரை தற்காலிகமாக வேறு வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதியை வழங்காது இந்த விடயம் தொடர்பாக இந்த சபையில் வாத பிரதிவாதங்களின் கருத்தின் அடிப்படையில் ஒரு சிறந்த தீர்மானத்தை மேற்கொண்டு எமது மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துமாறு இந்த சபையிடம் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மனுவை சபையில் முன் வைக்கின்றோம் என்றனர்.

இந்தத் தீர்மானம் மீதான விவாதம் நடைபெற்று, இறுதியில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (5,7)

## தேசிய சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில்

*மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 12

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசியசெயலகமும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் தேசிய சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட் கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு தேசிய சித்திரைப் புத்தாண்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அமைச்சர் மனோகணேசன், வடக்கு மாகாண ஆளுநர் குரே ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில், 250 பாடசாலை மாணவர்களுக்கு உபகரணப்பொதிகள் வழங்கப்படவுள்ளது. 25 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவுள்ளது.

29 விதமான பாரம்பரிய விளையாட்டுக்களும், அதேநேரம் இன்னிசை நிகழ்வும் நடத்தப்பட்டு பி.ப. 3 மணிக்கு பரிசளிப்பும் நடைபெறவுள்ளது - என்றார். (5.112)

## 1,997 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 997 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடந்த 6 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் சட்டங்களை மீறிய சம்பவங்கள் கண்டறியப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் 3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அத்தியாவசிய பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாக ஹசித திலகரட்ன மேலும் தெரிவித்தார். (5)

## மே முதலாம் திகதி யாழில் ஜே.வி.பியின் தொழிலாளர் தினம்

கொழும்பு, ஏப். 12

மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

'ஏப்ரல் 26ஆம் திகதி தொடக்கம் மே 2ஆம் திகதி வரை வெசாக் வாரம் கடைப்பிடிக்கும் காரணத்தால் கொழும்பில் பேரணிகள் மற்றும் பாதயாத்திரை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மே முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் மேதினப் பேரணியை நடத்த தீர்மானித்துள்ளோம். அதற்கு மேலதிகமாக மே 7ஆம் திகதி கொழும்பிலும் பாத யாத்திரை மற்றும் பேரணி நடைபெறும்' என்று மக்கள் விடுதலை முன்னணி அறிவித்தது. (5)

## தேர்தல் கடமை:

## ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை

*இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 12

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கூறியுள்ளது.

சொந்தப் பணத்தில் செலவு செய்து கடமைகளுக்காக சென்றிருந்த போதிலும் இதுவரை அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை கவலையளிக்கின்றது என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் தேர்தல் திணைக்களத்திடம் வினவியபோது, அந்த ஆசிரியர்கள் வழங்கிய பற்றுச்சீட்டுகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையைச் சீரமைத்து குறித்த கொடுப்பனவுகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் கூறினார். (5)



## அரசிலிருந்து சு.க. வெளியேறினாலும் எதிர்க்கட்சி தலைமை அவர்களுக்கில்லை

*அமைச்சரவை இணைப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 12

சுதந்திரக் கட்சி அரசிலிருந்து விலகினாலும் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை அந்தக் கட்சிக்கு வழங்க முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'அரசிலிருந்து சுதந்திரக் கட்சி விலகினால் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் அல்லவா?' என்று செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

'அவ்வாறு முடியாது. அரச தலைவர் அரசிலேயே இருக்கிறார். அத்துடன் தற்போதைய நிலைமையில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது இந்த நாட்டுக்கு எவ்வளவு பெருமை என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். அமிர்தலிங்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து ஜே.ஆர். ஜயவர்த்தன விரட்டியதன் மூலம் பிரபாகரனை உருவாக்கினார்.

தற்போது சம்பந்தன் தென்னிலங்கையின் அரசுடன் இணைந்து செயற்படுகின்றமை எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சுதந்திரக் கட்சி ஆட்சி செய்யலாம். ஆனால் தென்னிலங்கையில் ஒரு அரசுடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படுகின்றது என்பதே இங்கு முக்கியமானது. இதனூடாக நல்லிணக்கம் வலுவடையும். சுதந்திரக் கட்சி அரசிலிருந்து விலகினாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது - என்றார். (5.31)

*தற்கொலைப் போராளிகள் எங்கே?*

## ரணிலுக்கு எதிரான ஆட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கிறார் பாலித

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படும் என்றும், அதற்காக முன்னின்று செயற்படுவோம் என்றும் உறுதியளித்தவர்கள் அதை தற்போது நிறைவேற்றவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார.

புத்தளத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், கட்சி மறுசீரமைப்பு சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டதையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் என அனைத்து உறுப்பினர்களும் என்னைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அரசைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் வணங்கிக் கேட்டனர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படும். அதற்கான பொறுப்பைநாம் ஏற்கின்றோம். தற்கொலைப் போராட்டத்தில் இறங்கியேனும் அதை செய்துமுடிப்போம் என்று எனக்கு உறுதி வழங்கப்பட்டது.

இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குரிய காலம் வந்துவிட்டது. தற்கொலைப்போராளிகள் எங்கே எனக் கேட்க விரும்புகின்றேன். கட்சிக்குள் மாற்றம் அவசியமென எழுத்துமூலமும் அறிவித்துள்ளேன், என்றும் ரங்கே பண்டார கூறினார். (5)

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

நாட்டில் மாலை வேளைகளில் பல பிரதேசங்களில் பெய்துவரும் மழையுடனான கால நிலை எதிர்வரும் 16ஆம் திகதிவரை தொடரும் சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மின்னலுடன் மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 வரையான வேகத்தில் காற்று வீசும் அபாயம் இருப்பதாகவும் அறிவித்துள்ளது.

கிழக்கு, ஊவா மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இன்று காலை வேளையில் மழை பெய்யும் சாத்தியம் உள்ளது. (5,31)

# தவறான முடிவெடுத்த ஆண்களே கடந்த ஆண்டில் அதிகளவில் சாவு!



கொழும்பு, ஏப். 12

கடந்த ஆண்டில் இலங்கையில் 3 ஆயிரத்து 263 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மாத்தளை மாவட்ட வைத்தியசாலையின் நிபுணத்துவ உளவியல் மருத்துவர் ஹிமாலி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் அண்மையில் நடைபெற்ற செயலமர்வில்பங்கேற்றிஉரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண்களை விடவும் அதிகளவில் ஆண்களே தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

கடந்த ஆண்டில் 2 ஆயிரத்து 586 ஆண்கள் தவறான முடிவு எடுத்து உயிரை மாயத்துள்ளனர். 677 பெண்களும் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளனர்.

65 வயதுக்கு மேற்பட்டவர்களும், 16 முதல் 24 வயது வரையிலானவர்களுமே அதிகளவில் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

தவறான முடிவு எடுத்து உயிரை மாய்ப்பது தொடர்பில் தேவையற்ற பரப்புரைகள் வழங்கப்படுகின்றது.

தவறான முடிவு எடுத்து உயிரைமாய்த்த செய்திகளை அறிக்கையிடும் போது ஊடகவியலாளர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

மற்றுமொரு தரப்பினரைப் பழிவாங்கும் நோக்கில் பலர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். போதிளவு தெளிவூட்டல்களின் மூலம் இதனைத் தடுக்க முடியும் - என்றார். (5)

## எதிர்கட்சியிலேயே அமர்வோம் எங்கள் முடிவில் மாற்றமில்லை

### லக்ஸ்மன் யாப்பா விடாப்பிடி

கொழும்பு, ஏப். 12

எமது அமைச்சுப் பதவிகளைத் துறந்து எதிர்க்கட்சியில் 19ஆம் திகதி அமரும் தீர்மானத்தில் மாற்றமில்லை என்று இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



கூட்டு அரசில் நாம் தொடர்ந்தும் இருக்க முடியாது. எமக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது குறித்து எதிர்ப்புகளும், அழுத்தங்களும் வருகின்றன.

நாம் இவை அனைத்தையும் தைரியமாக எதிர்கொள்வதுடன், ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த பின்னர் அமைச்சுப் பதவிகளை வகிக்கவோ அல்லது அமைச்சரவையில் அங்கம் வகிக்கவோ விரும்பவில்லை.

இது குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் நாம் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளோம்.

அரச தலைவர் மைத்திரியைப் பாதுகாக்கும் கடமையும் எமக்குள்ளது. அதேபோல் இந்த அரசைப் பலவீனப்படுத்தவும் நாம் முயற்சிக்கவில்லை. எமது மனச்சாட்சிக்கமைய நாம் எதிரணியில் அமர்ந்து செயற்பட தீர்மானித்துள்ளோம் - என்றார். (5)

## கண்டிக் கலவரம்:

## உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு தலா ரூ.5 லட்சம் வழங்கப்படும்


கொழும்பு, ஏப். 12

கடந்த மார்ச் மாத ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய பிரதேசங்களை அண்மித்த பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் விளைவால் உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கும் இழப்பீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த வன்முறைச் சம்பவத்தால் உயிரிழந்த ஒருவருக்கு இழப்பீடாக 5 இலட்சம் ரூபா வீதம் அவர்களின் குடும்பங்களுக்குப் பெற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலவரங்களின்போது காயமடைந்த நபர்களுக்காக, வைத்திய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (5)



## அம்பாந்தோட்டையில் ஜப்பானிய நாசகாரி

கொழும்பு, ஏப். 12

ஜப்பானியக் கடற்படையின் நாசகாரி போர்க்கப்பலான 'ஜஎஸ் அகிபோனோ', நல்லெண்ணப் பயணமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த ஜப்பானிய போர்க்கப்பலுக்கு, கடற்படையினர் பாரம்பரிய மரபுகளுக்கு அமைய வரவேற்பு அளித்தனர். இரண்டு நாள் பயணமாக அம்பாந்தோட்டை வந்துள்ள ஜப்பானிய போர்க்கப்பல் நேற்றுப் புறப்பட்டுச் சென்றது.

ஜப்பானிய போர்க்கப்பலின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளுடன், கடற்படை அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவிடம் கையளிக்கப்பட்ட பின்னர், அங்கு வந்துள்ள முதலாவது வெளிநாட்டுப் போர்க்கப்பல் இதுவாகும். (5)



## எரிபொருள் விலை அதிகரிப்பு சூத்திரப் பட்டியல் அமைச்சரவைக்கு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனமானது, எரிபொருள் விலையை அதிகரிக்கக் கோரி, விலை சூத்திரப் பட்டியலை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றவுடன் இந்த மாதத்திலிருந்து எரிபொருளுக்கான விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருளின் விலையை உயர்த்த வேண்டும் என்று பெற்றோலிய வளத் துறை அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு நிறைவடைந்த பின்னர், எரிபொருளுக்கான விலை அதிகரிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## மே தினப் பேரணி இம்முறை இல்லை

### ஐ.தே.க. தீர்மானம்

கொழும்பு, ஏப். 12

ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறை தொழிலாளர் தினப் பேரணி எதனையும் நடத்துவதில்லை என்று தீர்மானித்துள்ளது. தொழிலாளர் தினக் கூட்டமொன்றை மட்டும் நடத்துவதெனவும், பேரணிகளை நடத்துவதில்லை எனவும் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டம் சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சி மறுசீரமைப்பு குறித்த கூட்டத்தின்போது இந்த விடயம் பற்றித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கேகாலையில் தொழிலாளர் தினக் கூட்டங்களை நடத்த வேண்டுமென முன்னதாக யோசனை முன்வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு தொழிலாளர் தினம் 7ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுவதால், தொழிலாளர் தினக் கூட்டமொன்றை மட்டும் கொழும்பில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5)

## சரத் பொன்சேகாவை கைது செய்யுங்கள்!

### கோரிக்கை முன்வைக்கிறார் முன்னாள் அட்மிரல் சரத் வீரசேகர!

கொழும்பு, ஏப். 12



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில், அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை கைது செய்ய வேண்டுமென ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

லசந்த கொலை தொடர்பான உத்தரவு பிறப்பித்த குற்றச்சாட்டில் இராணுவ கட்டளைத் தளபதி அமல் கருணாசேகர கைது செய்யப்பட்டுள்ளார். அதே குற்றச்சாட்டின் அடிப்படையில் சரத் பொன்சேகாவையும் கைது செய்ய வேண்டும். ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் சரத் பொன்சேகா பொறுப்பு சொல்ல வேண்டுமென தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவே குற்றம் சுமத்தியிருந்தார். நாடாளுமன்றின் ஹன்சார்ட் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. லசந்த கொலைக்கு உத்தரவிட்ட குற்றச்சாட்டில் சரத் பொன்சேகாவைக் கைது செய்ய வேண்டும் - என்றார்.

இதேவேளை, படைவீரர்களை இந்த அரசு வேட்டையாடி வருகின்றது என்று முன்னாள் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன இங்கு தெரிவித்துள்ளார். (5)

## ரகசிய கூட்டம்போட்ட சுதந்திரக் கட்சியினர்

கொழும்பு, ஏப். 12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்தரமுல்லையில் உள்ள அமைச்சர் எஸ்.பி. திசநாயக்கவின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு இரகசியக் கூட்டத்தை நடத்தியுள்ளனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு அளித்த, சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட 16 நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இவர்கள், கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்



மையக் குழுக் கூட்டத்தில் இவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். அதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

இந்த நிலையிலேயே, அரசில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நேற்று முன்தினம் இரவு நீண்ட நேரம் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர். இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (5)

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை, கண்டி. அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153

ABI Fashion World

## அபி பஷன் வேல்ட் இன்

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும் ஆடைகள் ஒரே இடத்தில்



SPECIAL OFFER

SALE 20% - 70%

இச்சலுகை ஏப்ரல் 13 வரை மட்டுமே

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைவான சேவை
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட)

Shirt - Rs. 700/=
Sarees - Rs. 800/= முதல்
(Model Shirt with Headphone) - Rs.1500/= முதல்
Tshirt - Rs. 250/=

டெனிம் ஜீன்ஸ் ரூபா 1000/=, ரீசேட் ரூபா 250/=
ஒரு சேலை வாங்கினால் இன்னும் ஒன்று இலவசம்.
சல்வார் வகைகள் 50% வரை விலைக்கழிவு
சிறுவர்களுக்கான ஆடைகள் 50% வரை விலைக்கழிவு
ரொப் வகைகள் 1 இற்கு 1 இலவசம்



என்ன வேண்டும் உங்களுக்கு எல்லா ஆடைகளும் இங்கு இருக்கு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503 | 0770185471 | abifashionworld

அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்

மாபெரும் மெகா சேல்

10%-50% வரை விலைக்கழிவு



15.04.2018 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்



- திருமணப் பட்டு சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சில்க் சாறிகள், அலுவலக பாவனை சாறிகள் (Office Ware Saree)
- சல்வார்கள்,
- சல்வார் துணிகள்
- டொப் வகைகள்
- சேட் வகைகள்
- சிறுவர், சிறுமிகளுக்கான
- ஆடை தினுசுகள்

அனைத்தும் ஒரே கூரையின் கீழ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

10,000/- ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இந்தியன் செலக்ஷனின் சின்னம் பொறிக்கப்பட்ட அழகிய குடை ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

# சருமத்தில் உணர்ச்சியில்லையா? சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்

## தொழுநோயாக இருக்கலாம் என்று சுகாதாரத் துறை அறிவுறுத்துகிறது

**யாழ்ப்பாணம், ஏப். 12**

**வடக்கில் சகல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். சருமத்தில் ஏற்படும் உணர்ச்சியற்ற தடங்களே இந்த நோயின் ஆரம்ப அறிகுறி. நோயின் தொடக் கத்தில் சிகிச்சை பெறின் அங்க விகாரங்கள் தடுக்கப்படும். எனவே அறிகுறிகள் காணப்படின் சிகிச்சை பெறச் செல்லுமாறு சுகாதாரத் துறையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.**

வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த நோயின் தொற்றுக்கு இலக்கானவர்கள் குறிப்பிட்டளவில் இனங்காணப்பட்டுள்ளனர். மைக்கோ பற்றீறியம் லெப்ரே எனப்படும் கொல் வடிவான பற்றீரியாவே இந்த நோயைப் பரப்புகிறது.

### தொற்றக்கூடிய வழிகள்

தொழுநோய் இரண்டு வகைப்படும். தொற்றாத வகையானதைப் போசி பசிலரி என்றும், தொற்றக்கூடியவற்றை மல்றி பசிலரி எனப்படும்.

தொற்றக்கூடிய வகை நோயாளியால் மட்டுமே இன்னொருவருக்கு நோய் தொற்றக்கூடும். சிகிச்சைபெறும்நோயாளி எவரிடமிருந்தும் இன்னொருவருக்கு நோய் தொற்றக்கூடும். சிகிச்சை பெறாத நோய் தொற்றக்கூடியவகை நோயாளியிலிருந்து இருமும் போதோ தும்மும் போதோ சுவாசத் தொகுதியினூடாகச் சுற்றாடலுக்கு வெளிவரும் காற்றுத் துளிகளின் மூலம் பரவலடையும்.

உலகத்தில் உள்ள மக்கள் சனத்தொகையில் 90 வீதமானவர்களுக்கு பிறப்பிலிருந்தே தொழு நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. அதனால் உலகில் 10 வீதமான சிறுபகுதினர்களுக்கு மட்டும் நோய் தொற்றக்கூடும். அவர்களுக்கும் சிகிச்சை பெறாத தொற்றக்கூடிய வகை நோயாளிகளின் சுற்றாடலுக்கு வெளிவிடும் காற்றுத் துளிகளிலுள்ள பற்றீரியாக்கள் உட்சென்றால் மட்டுமே தொற்றும்.

### நோய் அறிகுறிகள்

தொழுநோய் பற்றீரியா சருமத்தையும் சுற்றயல் நரம்புளையும் மட்டுமே தாக்கும். தோலின்மேல் காணப்படும் வெளிறிய நிறம் மாறுபட்ட தடங்கள் இந்தநோயின் ஆரம்ப அறிகுறிகளாகும். குறிப்பாகக் காது மடல்களில் தோல் தடித்துக் காணப்படும்.

நீண்டகாலமாக இருக்கும் விறைப்புத் தன்மை, தடங்களின் எண்ணிக்கை 5க்குக் குறைவாகக் காணப்படின் அது நோய் தொற்றாத வகையாகும். தடங்களின் எண்ணிக்கை 5க்கு மேற்படின் அது தொற்றக்கூடிய வகையாகும். சுற்றயல் நரம்புகளில் நோய் தொற்றுவதால் அரிதாக அங்கவிகாரம் காணப்படும். விரல்கள் குறுகிக் காணப்படும். கால்களின் கணுக்காலின் கீழ் உணர்ச்சியற்ற தன்மை காணப்படுவதால் கால்கள் இழுத்துக் கொண்டு நடக்கும் நிலை ஏற்படுதல் போன்றவை அங்கவிகாரங்களாகும். மிகவும் குறைந்த மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தாமதமாக வரும் நோயாளர்களில் கால்களில் உணர்ச்சி நரம்பு பாதிப்படைவதால் அடிப்பாதங்களில் உணர்ச்சியற்று மீண்டும் மீண்டும் புண் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைக் கவன்த்தில் கொள்ள வேண்டும்.

### தொழுநோய்

இது முற்றாக குணப்படுத்தக்கூடிய ஒரு நோயாகும், தொற்றாத வகை 6மாதங்களும் தொற்றும் வகை 12 மாதங்களும் இடைவிடாது பொருத்தமான சிகிச்சை பெறின் குணப்படுத்த முடியும். நோயாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவோ தனிமைப்படுதத்தப்படவோ தேவையில்லை, மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர் தொகுதியினால் மட்டுமே இந்த நோயை சாதாரண ஒருவருக்குப் பரப்ப முடியும். தொற்றும் வகை நோயாளர்களுடன் பழ கினாலும் 90 வீதமான நோயாளர்களுக்கு இந்த நோய் தொற்ற மாட்டாது.

நோயின் தொடக்கத்தில் சிகிச்சை பெறின் அங்கவிகாரங்கள் தடுக்கப்படும். தாமதமாகச் சிகிச்சை பெறும் நோயாளர்களில் ஒரு சிறுபகுதினர் குறுகிய விரல்களும்கணுக்காலின்கீழ்உணர்ச்சியற்ற தன்மையும் மிக எளிய பயிற்சிகள் மூலமும் சத்திர சிகிச்சை மூலமும் திருத்தக்கூடிய வசதிகள் உள்ளன.

இலங்கையில் மிகவும் அதிகமாக அறிவிக்கப்படும் நீரிழிவு நோயாளர்களில் நரம்புகள் பலவீனமடைந்து காணப்படுவதால் பாதங்களில் அடிக்கடி ஏற்படும் புண்களுக்குச் சமமான நிலையில் தொழுநோயாளர்களில் ஒரு சிறு பகுதியினருக்கு ஏற்பட இடமுள்ளது. பாது காப்பான பாதணிகள் அணிவதன் மூலம் இவற்றைத் தடுக்கலாம். விரல்கள் அழுகி விடுவது தொழுநோயின் ஒருகுணமாகாது என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்துகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரை 7 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் 30 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர். எனவே இந்த நோய் அறிகுறிகள் காணப்படின் தயக்கமின்றி பரிசோதனை செய்யச் செல்லுங்கள்.

பாதிப்பு இருப்பின் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள். கவனவீனமாகவோ வேண்டுமென்றோ சிகிச்சை பெறுவதைத் தவிர்த்தால் பின்விளைவுகள் ஏற்படும் என்று சுகாதாரத் துறையினர் அறிவுறுத்துகின்றனர். (எ-4)

# வருமானம், அபிவிருத்திக்கேற்ப திட்டங்களை முன்வைக்கலாம்

## சபைகளுக்கு அமைச்சு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 12

வடக்கில் குறைந்த வருமானத்தை கொண்ட பின்தங்கிய உள்ளூராட்சி சபைகளின் வருமானங்களை அதிகரிக்கவும், அபிவிருத்தியை எட்டுவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் சபைகளின் செயலாளர்களால் அனுப்ப முடியும். தற்போது சபைகள் இயங்க ஆரம்பித்துள்ளதால் சபைகளில் முன்வைத்தும் அனுப்பமுடியும் என்று மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 2018 முதல் 2020ஆம் ஆண்டினை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளது. தேர்தலுக்கு முன்னர் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டாலும் தற்போது சபைகளின் அமர்வுகள் இடம்பெறத் தொடங்கியுள்ளதால் சபைகளில் முன்வைத்தும் அவற்றை அனுப்ப முடியும். தேர்தல் காரணமாக சில சபைகள் அவற்றை அனுப்பவில்லை என்று கூறப்படுகிறது.

இதன்கீழ் முன்மொழியப்படும் கருத்திட்டங்கள், அதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகள் என்பவற்றுடன் கடந்த30ஆம்திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்தக் கருத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ள உள்ளூராட்சி சபைகள் சந்தைகள், விற்பனைக் கட்டடத் தொகுதிகள், சுற்றுலாத் துறை சார்ந்த கருத்திட்டங்கள், மக்கள் சன நெருக்கம் கொண்ட பிரதேசங்களில் மலசலகூட வசதிகள், மயான அபிவிருத்தி உள்ளூராட்சி சபைக்குரித்தான தேணிகள், மற்றும் வருமானங்களை உருவாக்கக்கூடிய கருத்திட்டங்களான சபைகள் முன்வைக்கலாம்.

உள்ளூராட்சிசபைகளின் தற்போதைய வருடாந்த வருமானத்திற்கும் ஒப்பாக நடைமுறைக்குச் சாத்தியமானதாக திட்டங்கள் இருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-4.50)

## முகமாலையில் அமைந்துள்ள

# கண்ணிவெடி அகற்றும் தளத்தை பார்வையிட்டார் அல் குசைன்



கிளிநொச்சி, ஏப். 12

முகமாலையில் உள்ள சார்ப்நிறுவனகண்ணிவெடியகற்றும் தளத்துக்கு அண்மையில் வருகை தந்தஜோர்தான் இளவரசர் மிரைட் அல் குசைன் அங்குள்ள நிலமைகளை பார்வையிட்டுச்சென்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் இயங்கிவரும் சார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்றநிறுவனத்தின்தற்போதைய வேலைகள் முகமாலைப் பகுதியில் இடம்பெற்று வருகின்றன. அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் கண்ணிவெடி ஒழித்தலுக்குப் பொறுப்பான இளவரசர் மிரைட் அல் குசைன் அண்மையில்வருகைதந்துநிலமைகளை பார்வையிட்டுள்ளார். இதன்போது அவர் சண்டைப்பகுதித்துப்புரவுப் பணியை பார்வையிட்டதுடன் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

இதன்போது நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் கடந்தபதினாறுமாதகாலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின்கீழ்உள்ளமுகமாலையிலும்3இலட்சத்து16ஆயிரத்து 903சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து மூவாயிரத்து அறுநூற்று எழுபத்து இரண்டு(3762) அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளோம்' என்றுசார்ப்நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர்ஓய்வுபெற்றகப்டன்பிரபாத் நாரம்பன தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தில் மொத்தம் 118 பணியாளர்கள் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதில் 11 பெண் பணியாளர்களும்அடங்குகின்றனர். இந்த நிகழ்வில் இளவரசர் மிரைட் அல் குசைன், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், சார்ப்நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.12

2014ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியெறி வெளிமாவட்டங்களில் 4 வருடம் பணிபுரிந்து இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பாடரீதியான தகவலை மாகாணக்கல்வி பணிப்பாளருக்கு வழங்க வேண்டியுள்ளதால் இடமாற்றத்துக்கு விண்ணபித்த அனைவரையும் சமூகம் தருமாறு வடக்கு மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் சி.சிவகாந்தன் தெரிவித்துள்ளார். (எ)

# அதிகாரிகள் உத்தரவிட்டும் கட்டடம் அகற்றப்படவில்லை

## அறுகுவெளிப் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஏப். 12

அறுகுவெளிப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள நண்டுக் கொள்வனவுக்கான கட்டடம் ஒன்றை அகற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்ட போதும், அந்தக் கட்டடம் இதுவரை அகற்றப்படவில்லை. அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் உரிய காலத்தில் கட்டடம் அகற்றப்படாமல் இருக்கின்றது என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தென்மராட்சி மீனவர் சங்கங்கள் இணைந்து இந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு பிரதேச சபைக்கு கடிதம் கொடுத்துள்ளபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத பட்சத்தில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அறுகுவெளியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கட்டடம் குறித்து கலந்துரையாடி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக விரைவாக கட்டடத்தை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர் இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் தேவநந்தினி பாபு, கொடிகாமம் பிரதேச சபை செயலர், மக்கள் என கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் பிரதேச சபையினருக்கு கட்டடத்தை இடித்தழிக்குமாறு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். ஆனால் பிரதேச சபையால் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அறுகுவெளியில் கட்டப்பட்ட கட்டடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களால் அமைக்கப்பட்ட கட்டடம் ஆகும். இதனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தென்மராட்சிப் பகுதியில் தங்கி நின்று தொழிலில் ஈடுபடுவதாகவும் இதனால் தென்மராட்சி கடற்றொழிலாளர்கள் பெருமளவான பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த காரணத்தினால் இந்த கட்டடத்தை வெகு விரைவாக இடிக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்தறிய கொடிகாமம் பிரதேச சபை செயலாளரிடம் தொடர்புகளை மேற்கொள்ள உதயனால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனளிக்கவில்லை. (எ-111)

## பப்பாசி பழங்கள் விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முழங்காவில் பிரதேசத்தில் இருந்து கூடுதலான பப்பாசி பழங்களை குடாநாட்டுக்குத் தருவித்து வருகின்றது.

ஒவ்வொரு வாரத்திலும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ வரையிலான பப்பாசி பழங்கள் தருவிக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று சமாசத்தின் பொது முகாமையாளர் கே. விஷ்ணுகரன் தெரிவித்தார்.

இந்தப் பழங்கள் கூடுதலாக அரியாலை, புங்கன்குளம் பகுதியில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது வறட்சியான காலப்பகுதி என்பதனால் பப்பாசி பழங்களைக் கூடுதலான மக்கள் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அத்துடன் வீரசிங்கம் கட்டடத் தொகுதியில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட நடமாடும் சந்தை ஊடாகவும் பெரும் எண்ணிக்கையான பப்பாசி பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. (எ-7)

## கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

கிளிநொச்சி, ஏப். 12
கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளதாகப் பளைப்பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த திங்கட்கிழமை அங்கு சென்ற பொலிஸார் 4 போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரையும் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்த மற்றுமொருவரையும் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-6)

### தண்ணீர் அநியாயமாக்கப்படுவதால்

# எந்த ஆள்துளைக் கிணற்றையும் சட்டவிரோதமாக அமைக்காதீர்!

### பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 12
இயற்கைத் தண்ணீர் ஊற்று அல்லது நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால் அனுமதி பெறவேண்டும். ஆள்துளைக் கிணறு அமைப்பதாக இருந்தால் கட்டாயம் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். வறட்சியும் பாதிப்பை ஏற்படுத்திவிடுவதால் நிலத்தடி நீரைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தண்ணீர் அநியாயமாக வீணடிக்கப்படுவதால் சட்டவிரோதமாகக் குழாய்க்கிணறுகளை அமைக்கவேண்டாம். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசிதழில் குறிப்பிடப்பட்டதைச் சுட்டிக்காட்டி அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

நிலத்தடி நீரைப் பாதுகாக்க வடக்கில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், பல அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில் இழுபறி காணப்படுகிறது. சில இடங்களில் நடைமுறையிலேயே இல்லை.

குழாய்க்கிணறுகளிலிருந்து அதிகளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு வருகிறது. அதனைத் தடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

காணிகள் அருகருகே இருந்தாலும் ஒவ்வொரு காணிக்கும் என்று குழாய்க்கிணறுகள் தோண்டப்படுகின்றன. கடந்த வருடம் வறட்சி ஏற்பட்டபோது கிளிநொச்சியில் நெற்செய்கையைப் பாதுகாக்கவென வயல்களில் அனுமதியின்றி ஏராளமான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. அவை பின்னர் சட்டநடவடிக்கை மூலமாக மூடப்பட்டுள்ளன.

### நில உரிமையாளர் அனுமதி பெறவேண்டும்

குழாய்க்கிணறுகள் அமைக்கும் தொழிலில் ஈடுபடும் சகலரும் துளையிடும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீர்வளச் சபையில் பதிவு செய்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். நீர்வளச் சபையால் வழங்கப்படும் பரிந்துரைக்கேற்பவே குழாய்க்கிணறுகள் அமைக்க வேண்டும். அந்தச் சபையின் மேற்பார்வையில் கிணற்றின் சுற்றுச்சூழல் பாது காப்பை மதிப்பிடுவதுடன் அதற்கான அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். தினமும் கிணற்றிலிருந்து இறைக்கும் தண்ணீரின் கொள்ளளவைக் கண்காணிக்க காணி உரிமையாளர் அல்லது தொழிற்சாலை உரித்துடையவரால் ஒரு பாய்ச்சல் மீற்றர் மானி பொருத்தப்படவேண்டும். தினமும் இறைக்கும் நீரின் கொள்ளளவு தரவை சேகரித்தல்வேண்டும்.

தண்ணீரைப் போத்தலில் அடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள, ஈடுபட உத்திதேசித்துள்ள அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனம், தனியார் நிறுவனம் அல்லது தனிநபர், உற்பத்தித் தேவைக்காக நீரூற்றுக்கள் அல்லது நிலத்தடி நீரிலிருந்து தண்ணீரை உபயோகிப்பதானால், பெயர்பெற்ற இரசாயன ஆய்வு கூடத்தில் நீர்மாதிரி 6 மாதங்களுக்கு ஒருதடவை பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் அந்த அறிக்கைகள் நீர்வளச் சபையிடம் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கவேண்டும்.

வர்த்தக விவசாயம் அல்லது கைத்தொழில் நிறுவனத்துக்காக மாதாந்தம் 30 ஆயிரம் லீற்றரிலும் கூடுதலாக நிலத்தடி நீரைப் பெறுவோர் நீர்வளச் சபையிடமிருந்து தொழில் உரிமை அறிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அரசிதழ் குறிப்பிடுகிறது. 1964ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நீர்வளங்கள் சபைச் சட்டம் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளது. எனவே குழாய்கிணறுகளை அமைப்போர் இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### பதிவுசெய்தல் குறைவு

வடக்கில் சட்ட அனுமதி பெற்றுக் குழாய்கிணறுகள் அமைக்கப்படுவது என்பது மிகமிகக் குறைவாக உள்ளதாக அதிகாரிகளால் கூறப்படுகிறது. அரசவீட்டுத்திட்டத்தில் வீடுகட்டுவோர் அதனுடன் இணைந்து குழாய்கிணறு அமைக்க அனுமதி வழங்கப்பட்டோர் மாத்திரமே அனுமதி பெறுகின்றனர். அதுவும், அந்த அனுமதி இன்றி அவர்கள் நிதியைப் பெறமுடியாது என்ற காரணத்தாலேயே அவர்கள் அனுமதி பெறுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குழாய் கிணறுகளை அமைப்போர் தமது பகுதிக்குரிய பிரதேச சபை ஊடாக நீர்வளச் சபையில் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். நீர்வளச் சபையில் தற்போது உரிய ஆளணியினர் இல்லாத காரணத்தால் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரே அதற்கான அனுமதிகளை வழங்குகின்றனர். மாவட்டச் செயலரின் கோரிக்கையின்படி அது இடம்பெறுகிறது. ஆனால் அனுமதிகேட்டு வருவோர் மிகக்குறைவு.

### சட்டவிரோதமாக அமைத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இடங்களிலும் சட்டவிரோதமாகக் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இயந்திரங்களின் உதவியுடன் சில மணித்தியாலங்களில் ஆள்துளைக் கிணறுகளை அமைத்துவிட்டுச் சென்று விடுகின்றனர்.

### அளவு மீறப்படுகிறது

அவர்கள் ஆள்துளைக் கிணறுகளை அமைக்கும்போது அளவுப் பிரமாணம் கவனத்தில் கொள்வதில்லை. பொதுவாக 30 அடி ஆளமானதாக ஆள்துளைக் கிணறுகளை அமைத்தால் போதுமானது. ஆனால் பலர் அதனையும் மிஞ்சி 90அடி வரையில் ஆள்துணைக் கிணறுகளை அமைத்து விடுகின்றனர். இதனால் நிலத்தடி நீர் வெகுவிரைவில் உறிஞ்சப்பட்டு விடுகிறது. அதனால் நிலத்தடி நீர் அளவில் குறைந்து வருகிறது.

இவ்வாறு பல இடங்களிலும் உறிஞ்சப்பட்டு விடுவதால் எதிர்காலத்தில் தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறது. அதனைத் தடுக்கும் நோக்கில் தாம் எடுக்கும் முயற்சிகள் வீணடிக்கப்பட்டால், அதனையும் தாண்டி சட்டவிரோத செயல் இடம் பெற்றால் எதிர்காலத்தில் தண்ணீருக்கு என்ன செய்வது? எதிர்கால சந்ததி தண்ணீருக்கு என்ன செய்யும்? என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர் - என்று நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் கூறிக் கவலை தெரிவிக்கின்றனர்.

### கிணறுகளை தோண்டுவோர் பதிவுசெய்தல் கட்டாயம்

ஆள்துளைக் கிணறுகளை அமைக்கும் இயந்திரங்களை வைத்திருப்போர், தாம் எங்கெல்லாம் கிணறுகளை அமைக்கின்றனரோ அது பற்றிய பதிவு இருத்தல்வேண்டும் என்று கட்டாயமாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அவர்கள் அளவுப் பிரமாணத்தில் மீறினாலோ, அனுமதி பெறாமல் ஆள்துளைக் கிணறுகளை அமைத்தாலோ நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே நிலத்தடி நீரைப் பாதுகாப்பது என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் எதிர்கால சந்ததியினரின் இருப்புக் கருதியும் தற்போது எடுக்கப்படும் முடிவுகளை, நடைமுறைப்படுத்தல்களை சீராகச் செய்யவேண்டும். அதற்கு எவரும் இடையூறாகச் செயற்படக்கூடாது என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர் என்று அதிகாரிகள் பலரும் தெரிவித்தனர். (எ-4)

# கணினி வள நிலையம் மூடிப் பின் திறப்பு!

### வலயக் கல்விப் பணிப்பாளர் அதிரடி நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப். 12
கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகின்ற வலயக் கல்வித் திணைக்களத்துக்குரிய கணினி வள நிலையம் சீல் வைத்து மூடப்பட்டுப் பின்னர் திறந்து வைக்கப்பட்டது. சட்டவிரோதமாக அது பயன்படுத்தப்படுவதாக தெரி விக்கப் பட்டதால் இந்த நடவடிக்கையை எடுத்ததாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

குறித்த கட்டடம் இரவு நேரங்களில் லயன்ஸ் கழகத்தின் கூட்டங்களுக்கும், தேவைகளுக்கும் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கணினி வள நிலையம் முழுமையான செயற்பாடுகள் இல்லாதிருக்கின்ற நிலையில் மின்சார கட்டணம் மற்றும் இணைய இணைப்புக் (டொங்குள்) கட்டணம் என்பவற்றை வலயக் கல்வித் திணைக்களமே செலுத்தி வருகின்றது.

இந்த நிலையில் குறித்த கணினி வள நிலையத்தை அதற்கு பொறுப்பான லயன்ஸ் கழக உறுப்பினராகவுள்ள ஆசிரியர் ஒருவர் லயன்ஸ் கழகத்தின் கூட்டங்க ளுக்கு மாலை மற்றும் இரவு நேரங்களில் பயன்படுத்தி வந்துள்ளார்.

எனவே இது தொடர்பில் கிளிநொச்சி முறையிட்டதால் கடந்த வாரம் கணினி வள நிலையமும் ஆசிரிய வள நிலையமும் சீல் வைக்கப்பட்டன.

தற்போது வலய நடவடிக்கை எடுப்பட்டு கணினி வளநிலையமும் ஆசிரிய வள நிலையமும் இங்குகின்றன என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (எ-35)

### நடப்பு வருட

## வேலைத்திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம். ஏப்.12
வடக்கு மாகாண சபையில் நடப்பு வருடத்தின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள 662 திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வருடந்தோறும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக தலா 6 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதியில் அவர்கள் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள முடியும். இதுவரை கிடைக்கப்பெற்ற 662 திட்டங்களுக்கு நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கு அமைவாக மேற்கொள்ளுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. திட்டங்களை கால தாமதமின்றி சமர்ப்பிப்பதன் மூலம், அனுமதியைப் பெற்று வேலைகளை உடனடியாக ஆரம்பித்து வருட இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்க கூடியதாக இருக்கும் என்று தெர்விக்கப்பட்டது. (7)

# கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றினால் போராட்டம்

## கோத்தபாயவின் அமைப்பினர் எச்சரிக்கை

கொழும்பு.ஏப்.12
நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர் என்பதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற தலைமை அமைச்சர் முற்பட்டுவாரானால் அவருக்கு எதிராக பெரும் போராட்டங்கள் வெடிக்கும்.

இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் வெளிச்சம் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

வெளிச்சம் அமைப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் முக்கியஸ்தரான பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;
தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை
தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர் மீது எஞ்சியிருந்த ஒருசில நம்பிக்கையையும் இழந்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தை அம்பலப்படுத்தியிருந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பி னரால் தலைமை அமைச்சருக்கு முன்மொழியப்பட்ட பத்து காரணிகளும் தமிழ் இனவாதத்தை அப்பட்டமாக பறைசாற்றுவதாகவே அமைந்துள்ளன. இந்த இனவாத சிந்தனைகளை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

தமித் தேசியக் கூட்டமைப்பின் இந்த இனவாத கோரிக்கைகளை நிறைவேற்ற தலைமை அமைச்சர் முற்பட்டுவாரானால் அவருக்கு எதிராக அனைத்து தேசியவாத அமைப்புக்களையும் இணைத்து வீதியில் இறங்கி போராடவும் தாம் தயாராக இருக்கிறோம் - என்றார்.

(ந.ரி4)



# ஈர நிலப் பாதுகாப்புக் குறித்து கலந்துரையாடல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர நிலங்களை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலர் ம.உதயகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஈர நிலங்களைப் பாதுகாப்பதற்கான பல்வேறுபட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலர், சந்துருக்கொண்டான் ஈர நிலம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன இவையாவும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்தப்பகுதியைப் பாதுகாத்துச் சூழலியல் தொடர்பான உல்லாசச் சுற்றுலாத்துறை கட்டியெழுப்பப்படுவதுடன் இதனை இந்தப் பகுதி சமூகமே பொறுப்பேற்று செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபடல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்தக்கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட செயலர் சுதர்சினி சிறிகாந்த், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் , மாநகர ஆணையாளர் என். மணிவண்ணன், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் கே.குணரெட்ணம் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ற-ரி5)



# கிழக்கு மாகாண ஆளுநருடன் முதலீட்டாளர்கள் சந்திப்பு

கொழும்பு. ஏப்.12
இந்தியா மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த பிரபல முதலீட்டாளர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பிரதேசத்தில் இயற்கையை மையமாகக்கொண்ட ஒன்றிணைந்த உல்லாசப்பிரயாண அபிவிருத்தி வலயத்தை நிறுவுவது தொடர்பிலும் விவசாய கால் நடைத் துறைகளில் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஊக்குவிப்பதன் ஊடாக இந்தத்துறைகளின் உற்பத்தியையும், உற்பத்தி திறனையும் அதிகரித்து முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்தக் குழுவினர் புல்மோட்டை கனியவள கூட்டுத்தாபனம், உப்புவெளி பிராந்திய கால்நடை பண்ணை ஆகியவற்றையும் சென்று பார்வையிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியா பஞ்சாப் மாநிலத்தைச்சேர்ந்த பிரபல முதலீட்டாளர்களான அமறூத் ஜவ்ரா மற்ரக்பீர் றும் பஞ்சாப் மாநில முன்னாள் அமைச்சர் சிங் ஜவ்ரா ஆகியோருடன் சிங்கப்பூரிரைச்சேர்ந்த கட்டடக்கலைஞர்களும், முதலீட்டாளர்களும், ஆளுநரின் செயலாளர் அசங்க அபேவர்தன மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கே.சிவநாதன் கிழக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் பொது முகாமையாளர் டொக்டர் ஞானசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)

# தப்பியோடிய கைதி மடக்கிப்பிடிப்பு

## பொலிஸார் இருவர் இடை நிறுத்தம்

மட்டக்களப்பு, ஏப்.12
மட்டக்களப்பு, ஏறாவூரில் கொள்ளைச் சம்பவமொன்றில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் தப்பியோடியதையடுத்து, பொலிஸ் உத்தியோகத்தரர்கள் இருவர், உடனடியாக சேவையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய சந்தேகநபர், நேற்று அதிகாலை, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பெண்ணொருவரின் கழுத்தில் இருந்து தங்கச் சங்கியை அறுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவர், நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அவரே தப்பி ஓடியிருந்தர் கடமையைச் சரியாகச் செய்யாத குற்றச் சாட்டில், சார்ஜன் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சேவையில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டனர். (ற-ரி5)

# பசுமையாக்கும் திட்டத்தில் அனைவரும் இணையுங்கள்

## ஏறாவூர் நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப்.12
மக்கள் மனதில் மாற்றம் ஏற்படும் வரை எமது ஊரின் சூழலில் மாற்றம் ஏற்படாது.

எமது ஊரை பசுமையாக்கும் திட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள், சமூக நலன் விரும்பிகள் போன்றோர் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

இவ்வாறு ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் ஐ.அப்துல் வாசித் தெரிவித்தார்.

"ஊரை பசுமையாக்குவோம்" எனும் வேலைத் திட்டத்தின் கீழ் ஏறாவூர் பிரதேசத்தை பசுமையாக்கும் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கும் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஏறாவூர் நகர சபையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
திண்மக்கழிவுகளை உக்கும் கழிவு, உக்காத கழிவு என்று தரம் பிரித்து அக்கழிவுகளை திண்மக்கழிவுப் பிரிவினர் பெற்றுக்கொள்ளாமல் திண்மக்கழிவு முகாமைத்து வத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது யாவரும் அறிந்த விடயம் அதில் எமது ஊழியர்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியும் வந்துள்ளனர் அதற்கான காரணம் மக்களிடத்தில் இன்னும் தெளிவான அறிவு இல்லாததே ஆகும்.

எதிர்காலத்தில் திண்மக்கழிவுகளை முறையாக சேகரித்தல், அகற்றுதல் மற்றும் தரம்பிரித்தல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டல் மிக அவசியம் பற்றியும் இதற்கான விழிப்புணர் வுகளை மக்களுக்கு வழங்கவேண்டும்.

திண்மக்கழிவு சம்மந்தமான தெளிவூட்டல் துண்டுப் பிரசுரங்களை வழங்கி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகளில் ஈடுபடல் போன்ற நடவடிக்கைகளை எமது ஊரின் எதிர்கால நலன் கருதி எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இந்தக்கலந்துரையாடலில் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ற-ரி5)

# பொலிஸ் உத்தியோகத்தருக்கான பரிசோதனைகள் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஏப்.12
மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த பரிசோதனைகள் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றன.

பரிசோதனைகள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் உதவி அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன தலைமையில் மட்டக்களப்பு இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த ஆய்வு அறிக்கை பரிசோதனைகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சீருடை அணிவகுப்பு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பரிசோதனை நிகழ்வில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தீகா வதுற மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)





## ஒப்பந்தத்தை முறித்தால் அமெரிக்கா வருத்தப்படும்

### ரவுகானி அறிவிப்பு

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சியில் ஈரானுக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கும் இடையே 2015 ஜூலையில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, "ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன்" என்று கூறி வருகிறார். மேலும் ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளார். இதையடுத்தே இவ்வாறு எச்சரித்தார் ஈரான் அதிபர் ரவுகானி. "அணு சக்தி ஒப்பந்த விதிகளை ஈரான் மீறாது. அதேநேரம் அமெரிக்கா ஒப்பந்தத்தை மீறினால் அந்த நாடு வருத்தப்பட நேரிடும். ஒரு வாரத்துக்குள் அமெரிக்காவுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். அமெரிக்காவின் புதிய அதிபரிடம் நம்பகத்தன்மை இல்லை. ஆரம்பம் முதலே அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறார். எத்தகைய அச்சுறுத்தலுக்கும் ஈரான் அடிபணியாது" என்று ரவுகானி மேலும் தெரிவித்தார். (ம)

## ஏமனில் சவூதி வான் தாக்குதல்; 17 அப்பாவிகள் பரிதாபச் சாவு

ஏமனில் சவூதிப்படைகள் நேற்று முன்தினம் நடத்திய வான் வழித் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர்.

டைஸ், சதா நகர்களில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏமன் அரசுக்கு எதிராக ஹவுத்தி ஆயுதக் குழு போராடி வருகிறது. அந்த ஆயுதக் குழுவுக்கு எதிராகவும் ஏமன் அரசுக்கு ஆதரவாகவும் சவூதி தலைமையில் கூட்டுப்படை போரிட்டு வருகிறது. இதனால் சவூதி ஏமனில் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது வழமை. இந்தப் பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)



# உலகின் வயதான ஆணாக ஜப்பானின் மஸாசோ



டோக்கியோ, ஏப். 12

உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான ஆண்மகனாக ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மசாஸோ நோனாக்கா என்பவரை கின்னஸ் நிறுவனம் நேற்று அங்கீகரித்தது. அவருக்கு தற்போது வயது 112.

உலகில் அதிககாலம் வாழ்ந்து வரும் ஆண், பெண்களை உலக சாதனைப் பதிவுகளை நிர்வகித்து வரும் கின்னஸ் நிறுவனம் அங்கீகாரம் அளித்து, மதிப்புறுத்தி வருகிறது. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீயென்னி லூயிஸ் கால்மெண்ட் என்ற பெண்மணி மிக அதிககாலம் வாழ்ந்த நபராக அறியப்படுகிறார். 122 ஆண்டுகள் 164 நாள்கள் உயிர் வாழ்ந்த இவர் 1997ஆம் ஆண்டு காலமானார். அவருக்கு பின்னர் 116 ஆண்டுகள் 54 நாள்கள் உயிர் வாழ்ந்துகடந்த 2013ஆம் ஆண்டில் உயிரிழந்த ஜிரோய்மோன் கிமுரா என்பவர்தான் கின்னஸ் சான்றுகளின்படி மிக அதிக காலம் வாழ்ந்தவராக கருதப்படுகிறார். அவருக்குப் பின்னர் பல நாடுகளை சேர்ந்த ஆண்களும், பெண்களும் அதிக ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்த நபர்களாக கின்னஸ் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டை சேர்ந்த மசாஸோ நோனாக்கா என்பவரை உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான ஆண்மகனாக கின்னஸ் நிறு வனம் நேற்று அங்கீகரித்தது. (ம)

### ஐ.நா. அனுமதி இல்லாமலும்

# சிரியா மீது நடவடிக்கை

### ட்ரம்ப் மிரட்டல்



**வொஷிங்டன், ஏப். 12**

**ஐ.நா. சபையின் அனுமதி இல்லாமலும் சிரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க இயலும். விரைவில் அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.**

சிரியாவின் கவுட்டா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 100 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பலர் சிறுவர்களும் குழந்தைகளும். இந்தத் தாக்குதலை சிரிய அரசே நடத்தியது. இந்தத் தாக்குதலுக்கு கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரித்திருந்தது அமெரிக்கா. இந்த எச்சரிக்கை வந்து வெறும் 24 மணி நேரத்துக்குள் இஸ்ரேலால் சிரியா மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த நிலையில் சிரியா மீது விரைவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றவாறாக எச்சரித்தார் ட்ரம்ப். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்த சில மணிநேரத்துக்குள் ரஷ்யாவும், சீனாவும் அமெரிக்காவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தன. "அமெரிக்கா சிரியாவைத் தாக்கினால் பதிலடி கொடுப்போம்" என்று ரஷ்யா அறிவித்தது.

"சிரியா மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொண்டால் அதை மிகக் கடுமையாக எதிர்ப்போம்" என்று சீனா தெரிவித்தது. (ம)

# சிலியில் நடுக்கம்

தென்னமரிக்க நாடான சிலியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. 6.2 ரிச்டர் அளவு கோலில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

துறைமுக நகரமான கோக்குயிம்போ நகரில் இருந்துதென் மேற்கே சுமார் 170 கிலோமீற்றர் தூரத்தில் சுமார் 76 அடி ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (ம)



# 62 அடி உயரமான ஹுயாங்கின் சிலை மண்ணில் சாய்ந்தது

பிஜிங், ஏப். 12

சீனாவின் பின்சோயு நகரில் வீசிய பலத்த காற்றின் காரணமாக, அந்த நகரில் வைக்கப்பட்டிருந்த சீனப்பேரரசர் ஹுயாங்கின் 62 அடி உயரமுடைய வெண்கலச் சிலை மண்ணில் வீழ்ந்தது.

சீனாவின் முதலாவது பேரரசராக குயின் ஷி ஹுயாங் அறியப்படுகிறார். அவருக்கு 62 அடி உயரத்தில் வெண்கலச் சிலை பின்சோயு நகரில் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலை அந்த நகரின் அடையாளமாகவும் இருந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு வீசிய பலத்த காற்றின் காரணமாக அந்தச் சிலை அடியோடு பெயர்ந்து விழுந்தது. (ம)






Northway Family Mart
யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி அருகில்
புதியதோர் உதயம்
உங்கள் இல்லத்தின் அனைத்து தேவைகளையும்
ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்ய
Northway Family Mart
எம்மிடம்
தாராளமான தெரிவுகள்,
சிநேகபூர்வமான
வாடிக்கையாளர் சேவை,
வாகன தரிப்பிட வசதி,
இன்னும் பல...
இன்றே வாருங்கள்!
FRUITS
சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு
விசேட விலைக்கழிவுகள்
வழங்கப்படுகின்றன...
134, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6001 / 021 222 6002

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போராட்ட உணர்வு இங்கு தேய அங்கு வளர்கிறது!

காவிரி நதி நீரைத் தமிழகத்துக்குத் தந்தேயாகவேண்டும்என்கிற போராட்டம்அங்குதீவிரமடைந்திருக்கிறது. அந்தப் போராட்டத்தின்அடர்த்தி காரணமாகஐ.பி.எல். எனப்படும் இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் ஆட்டங்களை சென்னையில் நடத்துவது கேள்விக்குறியாகியிருக்கிறது. ஆட்டங்களை வேறு மாநிலத்திற்கு மாற்றுவது குறித்து, குறிப்பாகக் கேரளாவிற்கு மாற்றுவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

காவிரி நதி நீர் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகின்றது. அதனை கர்நாடகா, தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்களுக்கும் புதுச்சேரி ஒன்றியத்திற்கும் பங்கிட வேண்டியிருக்கின்றது. 1892ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை தொடர்கிறது. அவ்வப்போது பேச்சு நடத்தி ஒப்பந்தங்களும் செய்துகொள்ளப்பட்டன. என்றாலும் பிரச்சினை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

காவிரி நதி நீரைநம்பி விவசாயம் இடம்பெறும் பகுதி தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளது. கர்நாடகத்தில் அதன் அரைவாசிப் பகுதியளவான விவசாய நிலங்களே இருக்கின்றன. இதனால் தமிழ்நாட்டுக்கு அதிகளவு தண்ணீரைத் திறந்துவிட வேண்டியிருக்கிறது. ஆனால், தங்களது மாநிலத்தில் உற்பத்தியாகும்காவிரிநதிநீரைமற்றைய மாநிலங்களுக்குத் தரமுடியாது என்று கர்நாடகா வாதிடுகின்றது. இதுவே பிரச்சினையின் அடித்தளம்.

ஒவ்வொரு முறையும் பேச்சு, நடுவர் மன்றம் என்று சென்று அவற்றால் ஒழுங்கான தீர்வு கிடைக்கவில்லை என்றதும் தமிழகம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதி கேட்பதும் வழக்கமாக இருந்தது. கடைசியாக இந்த ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இரு மாநில அரசுகளுக்கும் ஏற்புடையதாக இல்லாதபோதும் அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு தமிழகத்தில் உள்ள மக்கள் வலியுறுத்துகின்றனர். இதுவே தற்போதைய போராட்டத்திற்கான அடிப்படை.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து நடந்துவரும் இந்தப் போராட்டத்தை மக்கள் இயக்கங்களும், எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றன. அதன் உச்சக்கட்டமாகவே நேற்றுமுன்தினம் சென்னை, சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தைக் குழப்பும் விதத்திலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை மிகப் பெருமளவில் பயனளித்துள்ளன என்றே தெரிகிறது.

காவிரி நதி நீர்ப் பிரச்சினையைக் கையாள்வதற்கான காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்றும் அதனைச்செயற்படுத்துவதற்கானகால வரையறையையும் அது எப்படிச்செயற்படும்என்பதையும்மைய அரசு அறிவிக்கவேண்டும்என்றும் இந்திய உச்சநீதிமன்றம்கூறியிருந்தது. அதனைச் செய்யாமல் இழுத்தடித்துவரும் இந்திய மைய அரசை அசைக்கவேண்டுமாயின் தேசிய அளவில் நடந்துவரும் பணம் கொழிக்கும் கிரிக்கெட் ஆட்டத்தை அசைக்க வேண்டும் என்பதையே அவர்கள் தமது போராட்டப் பாடமாகக் கொண்டு நகர்ந்திருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக தமிழகம் இந்த வகையில் ஜனநாயக ரீதியான போராட்டங்களை மிக உத்வேகத்துடன் முன்னெடுத்து வருகின்றது. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் முன்னும் பின்னுமாக இவற்றைப் பார்க்கலாம்.

அதே நேரத்தில்30 ஆண்டுகளாக உரிமைப்போராட்டத்தின் உச்சத்தில் இருந்து வந்த ஈழத் தமிழர்களாகிய நாம், அடையாளப்போராட்டங்கள்என்கிறவகையறாக்களுக்குள்முடங்கிப்போய்விட்டோமோஎன்கிறசந்தேகம்எழுகிறது.அரசுகளை அசைத்துப்பார்க்காத, அவற்றுக்கு இடைஞ்சல்கொடுக்காத நீண்ட நாள் போராட்டங்களுக்கும், சில பல நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும் சுருக்கப் போராட்டங்களுக்கும் பழகிவிட்டோம் போலத் தோன்றுகின்றது.

தமிழகம் தண்ணீரைப் பெறுவதற்காகத் தீவிரமாகப் போராடுகின்றது. நாமோ தண்ணீர் பெயரில் வந்து விழும் திட்டமிட்ட இனக்குடியேற்றங்களை எதிர்த்து ப்போராட்டம் போன்றஒன்றைப்பெயருக்குச்செய்துவிட்டுகடன்கழிந்தது என்றுவிட்டுவிடுகின்றோம். எம்போராட்டக்குணம்வரவர மங்கிக்கொண்டே போகிறதா? அல்லதுதமிழகத்தில்அந்தக் குணம் வீறுகொண்டு எழுந்து வருகின்றதா? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

# எப்போதுதான் சாத்தியப்படும் மனிதாபிமானம் என்கிற நல்லிணக்கம்?

செ.உமாசுதன்



யுவான் இமெனெடெஸ்

மனித உரிமை மீறல்கள் உலகின்எல்லாப்பகுதிகளிலும்இடம்பெறுகின்றன.இதனைப் பல்வேறுபட்ட ஆய்வுத் தகவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. குறிப்பாகஇந்தப்பிரச்சினையை விசேட கவனத்துக்குரிய பேசுபொருளாக கொள்வதுடன், அது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அனைத்து அரசுகளும் அக்கறைகொள்வது அவதானத்துக்குரியது. இது குறித்ததான உடன்படிக்கைகளும், அனுசரணைகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாககொண்டுவரப்பட்டு, அதிகாரத் தரப்புக்களது ஒப்புதலோடு விடைகளற்ற வினாக்களாக நீண்ட ஓய்வு கொள்கின்றன. தவிர இவை அனைத்துமே ஆய்வுரீதியில் எடுத்துநோக்கப்படின், பன்முகத் தன்மை அடைந்திருப்பது கண்கூடு.

## 'உரிமை' அல்லது 'தீர்வு'

இந்தச் சந்தர்ப்பத்திலே தென்னாசியாவின்கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த தேசமாகக் கொள்ளப்படக்கூடிய இலங்கை, ஆழ்ந்த புலனாளுமை சார் நோக்குதற்கு உரியது. இங்கு வாழ்கின்ற சமூகங்களிடையேயான இணக்கப்பாடு என்பது பிராந்திய ரீதியில் பிரித்துஆராயப்படவேண்டியது. பிரதானமாகதமிழர்தாயகத்தின் மீதான அறுபது ஆண்டுகால வன்முறைகள், ஆய்வுநிலைக்குட்படுத்தப்படவேண்டும். தமிழ்க்குடிகளின்ஒருமித்தவேண்டுகையான 'உரிமை' அல்லது 'தீர்வு' என்கின்ற நிலைபெறுதி நோக்கியதான கட்டுமானங்கள் .ஆக்கபூர்வமான உறுதிப்பாட்டைப் பெற்றிடவழிஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். இதற்கு பன்னாட்டு ரீதியான ஆத்மார்த்தமான பங்களிப்பு வேண்டப்படுகிறது.

குறிப்பாக தமிழர்கள் கொண்டிருந்த மற்றும் தற்காலத்தின் வழி அடித்தளமாகக் கொண்டிருக்கின்ற, இனத்துவம் சார்ந்த, கலாசார,பாரம்பரியஅபிப்பிராயங்கள் மற்றும் அரசியல் உரிமைகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட திட்டமிட்ட அழிப்புக்கள் குறித்து சிந்தனை கொள்ள வேண்டும். அவற்றுக்கான தீர்வு நாடிகள் முன்வைக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில்,ஒவ்வொருவருடைய தனிப்பட்ட அனுபவங்கள்,பட்டறிவுகள்,பிரச்சினைகளையும் ட் மீளாய்வு செய்ய வேண்டும். அதுவேஆரோக்கியமானசெயல்நிலை.

## சோக இடுகுறியின் அடையாளமாக தமிழர் தாயகம்

நீண்ட காலப் போர் வலயமாக விளங்கியதமிழர்தாயகம்யதார்த்தத்தில்அழிவுகளும்,தீராதவடுக்களும் மலிந்து போயுள்ள சோக இடுகுறியாக அடையாளம் பெறுகிறது. 2009ஆம்ஆண்டு காலப் பகுதியில்இலங்கைஅரசு, உலக வல்லரசுகளின்தன்னலவிசுவாசமான ஆதரவுக் கரங்களோடு, கூட்டாக மேற்கொண்ட இனப்படுகொலை நடவடிக்கை , ஞாபகங்களை விட்டகலாத படிப்பினையாக விளங்குகிறது.

இந்தக்காலப்பகுதியில் இடம்பெற்ற ஆள்கடத்தல்கள், காணாமல் போகச் செய்தல், பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோக செயல்நிலைகள், இலங்கை அரசின் இராணுவம் கொண்டிருந்தகீழ்மைக்குணங்களைவெளிப்படுத்திநிற்கின்றன. அதன் தொடர்நிலைகள் இன்னமும்இந்தப்பிராந்தியத்தில்தொடர்கின்றன.தமிழர்களுக்குஎதிரான உரிமை மீறல்கள் தற்போதும் முனைப்புடன் இடம்பெற்று வருகின்றன. இவற்றுக் கெதிரான போராட்டங்களை தமிழ்மக்கள் முன்னின்று வலுவாக மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் அவற்றுக்கான பொருத்தமுறு தீர்வுப் பொறிமுறைகள் இதுவரைகாலமும் முன்வைக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களை அழிவுநிலையில் இருந்து வலுப்படுத்துவதற்கும்பாதுகாப்பதற்கும்உரியபரிகாரவழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. தனித்து 'நல்லிணக்கம்', 'நல்லாட்சி'என்றசொல்லாடல்பரிவட்டங்கள்மாத்திரமே எங்கும் கொண்டு செல்லப்படுகின்றன. அதற்குரித்தான அலங்காரங்களே அரசியல் என்கின்ற ஆக்கவுரிமையின் வெளிப்பாடாகவும், ஜனநாயகப் பிரதிநிதித்துவங்கள் கொள்ளும் வார்த்தைகளின் பகுமானமாகவும்காட்டப்படுகின்றன. ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலும் தேர்தல் ஊர்வலமாகவும்,ஊர்க்கோலமாகவும் சந்தர்ப்பவாத நாவடக்கம் பெறுகிறது.

## வலுவற்ற சட்டவாக்கம்

உண்மையில் வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசினால் உருவாக்கப்பட்டுள்ளசட்டக்கட்டமைப்பானது போதுமானதாக இல்லை. சட்டவாக்கங்கள் முறைப்படிநடைமுறைப்படுத்தப்படாமல் வெறுமனே புத்தகங்களில்மட்டுமேபொதிந்துபோயுள்ளன.ஒட்டுமொத்தத்தில்தமிழர்களுக்கு எதிரான மீறல்களின் ஆரம்பமாகவும், பிரச்சினைகளின்சூட்சுமமாகவும்இலங்கை அரசின் செயல்வெளி ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து சொல்லிணக்கவிளம்பலாகபன்னாடுகளின் சமூக வெளியில் உலாவருகிறது.

## வன்முறைகள் குறித்த மீளாய்வு

இந்தச் சந்தர்ப்பத்திலே கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில்இலங்கைபற்றிவிவாதிப்பதற்காககூடியசித்திரவதைக்கு எதிரான ஐ.நா ஆணைக்குழுவின் 59 ஆவது கூட்டத்தொடர் குறித்துகவனம்செலுத்தவேண்டியுள்ளது. அதில் இலங்கையில் இடம்பெற்று வருகின்ற சித்திரவதை, ஆள்கடத்தல் மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்த மீளாய்வு இடம்பெற்றது. இறுதியாக கடந்த 2011ஆம் ஆண்டு இது குறித்ததான மீளாய்வுகள் இடம்பெற்றிருந்தமையும் கவனத்துக்குரியது.

இந்தக்கூட்டத்தொடரில்இலங்கை சார்பில் அப்போதைய சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான11பேர்கொண்டுகுழு பங்குபற்றியிருந்தது. இந்தக்குழுவில்இலங்கைதேசியபுலனாய்வு தலைமை அதிகாரி, இளைப்பாறிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிரமெண்டிசும்கலந்துகொண்டிருந்தார். இதன்போது ஐ.நா அதிகாரிகள், இலங்கையில் இடம்பெற்ற மேற்படி வன்முறை சம்பவங்களுடன்தொடர்புடையவர்களாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர்மற்றும்பயங்கரவாதத்துக்கு எதிரான பிரிவினரே விளங்கு கின்றனர். இது குறித்து பதிலளிக்க வேண்டும் என தொடர்ச்சியான கேள்விகளை முன்வைத்தனர்.

## பொறுப்புக் கூறலின் வெறுமை

இதன்போது ஐ.நா அதிகாரியொருவர், "என்னிடம்வேறுசிலகுறிப்பிடத்தக்க கேள்விகள் இருக்கின்றன. நான் 'மனிக்பாம்' முகாம் குறித்துக் கேட்டிருந்தேன். போர் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் மற்றும் முறைகேடான நடவடிக்கைகள் குறித்தும் கேட்டிருந்தேன். இவை 'மனிக்பாம்' முகாம் அமைந்திருந்த இடத்திலேயே இடம்பெற்றுள்ளதாகக்

கூறப்படுகிறது. இதனைக் குற்றப் புலனாய்வுப்பிரிவினரும், பயங்கரவாத தடுப்பு பிரிவினருமே மேற்கொண்டதாகக் குற்றம்சாட் டப்படுகிறது. இந்த விடயம், கடந்த 2011 ஆம்ஆண்டுக்குரிய எமது மீளாய்வுச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும், அதுஅலட்சியம் செய்யப்பட்டுள்ளது. நான் இலங்கையைப்பிரதிநிதித்துவம்செய்து கலந்துகொண்டுள்ள எந்தவொரு உறுப்பினரிடம்இருந்தாவதுஇதற்குரித்தானபதில்களையும்விவரங்களையும் கேட்டிருந்தேன். ஆனாலும், இலங்கைக் குழுவில் இடம் பெற்றிருந்த அங்கத்தவர்களில் ஒருவரிடம் குறிப்பாக எனது கேள்விகளை முன்வைத்தேன். அவர்தான்இலங்கைதேசியபுலனாய்வு தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸ். அவர் இந்த அமர்வுகளில் கலந்துகொண் டுள்ள போதும் பதிலேதும்தெரிவிக்கவில்லை"என்று தெரிவித்திருந்தார்.

**இலங்கை அரசின் மீதான நம்பிக்கையீனங்கள்**

மேலும், "போர் முடிவடைந்த பின்னரான உடனடிக்காலப்பகுதியில் சி.ஐ.டிமற்றும்ரி.ஐ.டிபிரிவினரின் நடவடிக்கைகளை அந்தக்காலப்பகுதியில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த தாங்களே மேற்பார்வை செய்தீர்கள். மனிக்பாம் முகாமிலும்வவுனியாமருத்துவமனையிலும் விசாரணை செய்யப்பட்ட முறைகுறித்ததகவல்களைஎம்முடன் பகிர்ந்துகொள்ள முடியுமா எனவும் கேட்டிருந்தேன். இந்த இரண்டுஇடங்களிலும்சி.ஐ.டிமற்றும்ரி.ஐ.டிபிரிவுகள்மேற்கொண்ட சித்திரவதைகள் குறித்து ஐ.நா செயலாளர்நாயத்தின்நிபுணர்கள் குழு முன்வைத்த அறிக்கையில் இருந்துகிடைக்கும்தகவல்களின் அடிப்படையிலேயேஇந்தகேள்விகளை முன்வைக்கிறேன். அவை இடம்பெற்ற நேரம், அவற்றை மேற்பார்வை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்பவற்றுடன், குறித்த இடங் களில் 2009 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் தாங்கள் பிரசன்னமாகியிருந்தீர்களா என்றும், அவைகுறித்துஎடுத்தநடவடிக்கைகள் என்ன என்றும் கேட்டிருந்தேன். ஆனால் அவற்றுக்கான எந்தவிதமானபதில்களும்தரப்படவில்லை." என்ற விதமாகவும் இலங்கை அரசின் மீதான நம்பிக்கையீனங்களை எடுத்துரைத்திருந்தார்.

**குற்றச் செயல்களின் இருப்பிடம்**


தவிர, "ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகரின்ஓ.ஐ.எஸ்.எல் அறிக்கையின் 134 ஆவது பந்தியின் அடிப்படையின் திட்டமிடப்பட்டபடி மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களைவிசாரணைசெய்யும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பு சி.ஐ.டி யினரே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள நான்காம் மாடி குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடம், குறிப்பாக தடுப்புக்காவலில் உள்ள பலர் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்படுவதற்கு பெயர்போன இடம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சி.ஐ.டியின் பிரதிப் பொலிஸ்மா அதிபராகசிசிரமெண்டிஸ்கடமையாற்றினார் என்றும், அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மேலும் அறிக்கையின் 153 ஆவது பந்தி, தடுத்துவைக்கப்பட்டுவிசாரணைகள் மேற்கொள்ளப்படும் பொதுவாக அறியப்பட்ட இடமாக வவுனியாவில் உள்ள ஜோசப் இராணுவ முகாம், கொழும்பிலுள்ளசி.ஐ.டியினரின் நான்காம் மாடி போன்ற இடங்களில் சித்திரவதை செய்வதற்கான உபகரணங்களுடன் அறைகளும்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தமை, ஏற்கனவே நன்கு திட்டமிட்ட வகையில் சித்திரவதை ஒரு ஆயுதமாக இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனை பட்டவர்த்தனமாக எடுத்துக்காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த உபகரணங்கள் குறித்தும் விவரிக்கிறது. இதுமிகவும்பயங்கரமானது. ஆகவே உங்களைப் போன்ற அனுபவம் கொண்ட ஒருவரை சித்திரவதைக்குஎதிரானகுழுவின் முன்பாக நாம் கொண்டிருப்பது வழமைக்கு மாறானது." என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனூடே இலங்கை அரசு கொண்டுள்ளநல்லிணக்கவெறுமையின் செயலற்றதன்மையைஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியிருந்தார்.

**சிறப்பு அறிக்கையாளர் 'யுவான் இ மென்டெஸ்' இன் வெளிப்பாடுகள்**

இதேவேளை சித்திரவதை, மனிதாபிமானமற்ற முறையில் இழிவாக நடத்துதல் அல்லது தண்டனைவழங்குதல்முதலியவற்றுக்கான சிறப்பு அறிக்கையாளர் 'யுவான் இ மென்டெஸ்' கடந்த 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம்திகதிதொடக்கம்மேமாதம் 7ஆம்திகதிவரை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வெளிப்படுத்திய அறிக்கையில்பலவிடயங்களை தெளிவுபடச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதானமாக, "கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆண்கள், பெண்கள், இளவயதினர் என அனைவரும் பாலியல் ரீதியான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைதொடர்பானநம்பகரமான சாட்சியங்கள் விசேட ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் அதிக எண்ணிக்கையிலானவை, சட்டவைத்திய மதிப்பீடுகளுடனும், ஆதாரத்துடனும் கூடியவை. இவ்வகையான துஷ்பிரயோகங்கள் நுண்ணாய்வு செய்யப்படவுமில்லை. வழக்குத் தொடரப்படவுமில்லை. விசேட ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்றசோகச்சாட்சியங்களுக்கு அமைவாக ஒரு இளம் பெண் மூன்றரை வருட காலம் பல்வேறுஇராணுவமுகாம்களில் பாலியல்அடிமையாகஇருந்ததை வெளிப்படுத்தியுள்ளார்.

நீதித்துறையினதும் வழக்குத் தொடுநர்களினதும்வகிபாகங்கள் குறித்து தெளிவுபடுத்தியுள்ள அவருடைய அறிக்கை, "சித்திரவதைகள் மற்றும் கொடூரமான மனிதாபிமானமற்ற வகையில் கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் தொடர்பான பன்னாட்டு சட்டத்துக்கு அமைவாக கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சுயாதீனமான பக்கச் சார்பற்ற நீதித்துறை இருப்பது அவசியம். அத்துடன் அவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டதாக அல்லதுவற்புறுத்தப்பட்டதாக செய்யப்பட்ட முறைப்பாடுகளை பதவிநிலையில் இருந்து விசாரணைசெய்யக்கட்டளையிட்டு, அது தொடர்பான சகல பாதுகாப்பையும் நிலைநாட்டக்கூடிய தாக இருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் பொறுப்புக்கூறுதலும்தடுப்பதுமான இரண்டு கடப்பாடுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதித்துறைக்கும் உள்ளன. ஆனால், இலங்கை அரசு கொண்டுள்ள நடைமுறையில் நீதிபதிகள் இது குறித்து அதிக சிரத்தை உள்ளவர்களாகவும், ஆதாரங்க ளைத் தேடிச்செல்பவராகவும் இல்லை. அதாவது குற்றவியல் வழக்குகளில் தீர்மானம் எடுத்தல், தனித்து பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு முன்வைக் கப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் மாத்திரமே அவர்கள் தீர்மானம் எடுக்கிறார்கள்." என்பதை சுட்டிக் காட்டி யுள்ளது.



**நல்லாட்சியின் நல்லிணக்கமற்ற பாணி**

இந்தநிலையிலே அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்ட முன்னாள் அரச தலைவரும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் தவிசாளருமானசந்திரிகாவிடம், "போரினால் துவண்டு போயுள்ள வடக்குப் பகுதிப் பெண்கள் மீது இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அவர்களோடு சேரந்து இயங்கும் அரச அதிகாரிகள்தொடர்ந்தும்பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளான பெண்கள்மேலும்துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. தனித்துவாழ்கின்ற பெண்கள், பொருளாதார ரீதியாக பின்னடைவில் உள்ளனர். அவர்களைக் குறிவைத்து பாலியல் ரீதியான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இவர்களின் அலைபேசி இலக்கங்களைத் தெரிந்து கொள்ளும் இவர்கள், நாளடைவில் அலைபேசி ஊடாக நட்பை ஏற்படுத்துகின்றனர். இராணுவம் மற்றும் பொலிஸார் தமிழ் பெண்கள் மீது பாலியல் ரீதியான வன்முறைகளை மேற்கொள்கின்றனர். பாதுகாப்புத் தரப்பினரின் அனுசரணையுடன் அங்குள்ள ஒரு சிலரும், பெண்கள் மீது வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்புத் தரப்பினரின் ஆதிக்கம் இருப்பதால் பாதிக்கப்படும் பெண்களுக்கு நியாயம் கிடைக்க வாய்ப்பில்லை. உரிய நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்தநிலமைநாம்பொது மக்களைசந்திக்கும்போதுஅறிந்து கொண்ட விடயங்களாகும். மேலும் போரின் பின்னர் வவுனியா முகாம்களில் இருந்தவர்களின் குடும்பங்களில், குடும்பவன்முறைசம்பவங்கள்அதிகஅளவில் இடம்பெற்றுவருகின்றன. எமது பிரதேசங்களில்உள்ளகாணாமல் ஆக்கப்படவர்களின் உறவுகளை நாம்சந்தித்தபோதுதமதுபிள்ளைகள்ஏதோஒருஇடத்தில்உயிருடன் இருகின்றார்கள்என்றநம்பிக்கையிலேயே ஒளிப்படங்களுடன் காத்திருக்கின்றோம்எனகூறுகின்றனர். அவர்கள் மிகுந்த மன உளைச்சலில் இருக்கின்றனர்." என்றதகவலைஉளவியல்செயற்பாட்டாளர்களும் பொது அமைப்பினரும் எடுத்துரைத்திருந்தனர். ஆனாலும்இதன்போதுகுறுக்கிட்ட முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, "காணாமற் போனவர்கள் தொடர்பில் காணமல் ஆக்கப்பட்டோருக்கானபணியகம்உருவாக்கப்பட்டுவிட்டதுதானே? அவர்கள் அதனைப் பார்த்துக் கொள்வார்கள்" என்று தெரிவித்ததோடு, பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைதொடர்பானகுற்றச்சாட்டுக்களுக்கு பதில் எதனையும் வழங்கவில்லை.

**தேசிய ரீதியான நல்லிணக்கம் சாத்தியமா?**

ஆக, அரசின் இத்தகு செயற்போக்கு, மாற்றம்பெறவேண்டும். வரலாற்று ரீதியானதும், அரசியல் ரீதியானதுமான தமிழர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகளின் சூழமைவுகள் முற்றாகக்களையப்படவேண்டும். மனித உரிமைகள் சபையின் இல 30(1) கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குடிமக்களின், குறிப்பாக, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களின் ஒருமித்த நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். உண்மையைக் கண்டறிதல், நடந்தவற்றை வெளிப்படுத்துதல், பாரதூரமான குற்றம் செய்தவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை, பாதிப்புற்றோருக்குஇழப்பீடுவழங்குதல் முதலானவற்றை பன்னாட்டு பிரமாணங்களுக்கமைவாக மேற்கொள்ள வேண்டும். ஐக்கியநாடுகள்சபைசிபாரிசு செய்துள்ள பல்வேறு நெறிமுறைகளை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்த ஆதரவு வழங்க வேண்டும். தமிழர்களுக்கான தீர்வுகளைவழங்கிசமூகங்களின் மத்தியில் தேசிய ரீதியான நல்லிணக்கத்தைப் பலப்படுத்த வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# மயிர்கொட்டிகளின் பாதிப்பில் இருந்து விமோசனம் கிடைக்குமா?

'டெங்கு... டெங்கு..." என்று நுளம்புகளைவிட வேகமாகப் பறந்தடித்து, வீடுகளில் சல்லடைபோடுகின்ற சுகாதாரத் துறையினருக்கு தற்போது குடாநாட்டின் பல பகுதிகளில் பெருகிக் காணப்படுகின்ற, பொது மக்களுக்கு அச்சுறுத்தலையும், அதேசமயம் ஆபத்தையும் ஏற்படுத்தவல்ல மயிர் கொட்டிகளின் பரம்பல் கண்ணுக்குத் தெரியாமல் போயுள்ளமை அதிசயம் தான். இது விடயம் குறித்து பாதிப்புக்கு உள்ளாகும் தரப்பினர், சுகாதாரப் பகுதியினரது கவனத்துக்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்த வேண்டியது அவசியமல்லவா? வழமையாக வருடா வருடம் இந்தக் காலப்பகுதியில் தீவகப் பகுதிகளில் மயிர் கொட்டிகளின் பரம்பல் அதிகரிப்பது வழக்கமே. குறிப்பாகத் தீவகப்பகுதிகளில் இம்முறை மயிர் கொட்டிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. பூவரசுகள், ஒதிய மரங்கள் ஆகியவை தீவகத்தில் அதிகம். மயிர் கொட்டிகள் பெருகுகின்ற பருவத்தில் இவற்றை வெட்டிவிடாத பட்சத்தில் மயிர் கொட்டிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. காலை விடிந்து, வெயில் பரவ ஆரம்பித்ததும், தமது இருப்பிடங்களை விட்டு இறங்கி அவ்விடம் முழுவதும் ஊர்ந்து உணவுகள், குடிநீர், இருப்பிடம் என எல்லா இடங்களிலும் பரவி, பொதுமக்களது உடல்களில்பட்டு, அவஸ்தைகளை ஏற்படுத்தி விடுகின்றன இந்த மயிர்கொட்டிகள். குழந்தைகள் இருக்கும் வீடுகளில் இந்த நெருக்கடி அதிகம். கண்களில் மயிர்கொட்டிகளின் மயிர் பட்டால் அதன் தாக்கம் கொஞ்சநஞ்சமல்ல. புங்குடுதீவு, வேலணை, புளியங்கூடல், ஊர்காவற்றுறை, வங்களாவடிஎன அனைத்து இடங்களிலுள்ள வீதிகளிலும் அதிகாலையில் ஆயிரக்கணக்கான மயிர்கொட்டிகள் ஊர்வதைக் காணமுடிகிறது. வாகனங்கள் அவற்றை நசித்துவிடுவது இயல்பு. நசிந்தவை வெயிலில் காய்ந்து, காற்றில் பறந்து அவ்விடம் முழுவதும் பரவி, போவோர், வருவோர், அங்கு வாழ்வோர் உடல்களில் பட்டு கடியை ஏற்படுத்துகின்றன. இதுவும் ஒரு உடல் நலன் சார்ந்த பிரச்சினை தானே? சுகாதாரப் பரிசோதகர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்த மாட்டார்களா? தற்காலத்தில் எவருடைய வாழ்வாதாரத்துக்காகவும் பூவரசு மரங்கள், ஒதிய மரங்கள் வளர்க்கப்படுவது இல்லை. மயிர்கொட்டிகளின் பருவம் ஆரம்பிக்கின்ற சமயங்களில் அவற்றின் கிளைகளை முற்றாக வெட்டுவித்து சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உண்டல்லவா? பல்வேறு வழிகளிலும் பொதுமக்களுக்குப் பாதிப்பையும் ஆபத்தையும் விளைவிக்கவல்ல இந்த மயிர்கொட்டிகளது பரம்பலைக் கட்டுப்படுத்தி, குறிப்பாக தீவகப் பகுதிகளில் முக்கிய கவனம் எடுத்து பொது அமைப்புக்களது அனுசரணையுடன் இந்த மயிர்கொட்டிகளை அழித்தொழிக்க துரித நடவடிக்கை அவசியமானதொன்று. சுகாதாரத் துறையினர் இது குறித்து கவனம் செலுத்துவார்களா? அவற்றுக்கான வழிவகையை இந்தச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடைமுறைப்படுத்தினால் என்ன?

வங்களாவடி வேணு



# இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்காக அக்கறையுடன் பாடுபடுவீர்கள். தேவையான பணம் கிடைக்கும்.

**இடபம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**மிதுனம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். நண்பர்களிடம் அளவுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருக்கும் இடையூறுகள் சரியாகும்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் தாராளமாக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** பிறர் சொல்லும் குறைகளில் கவனம் செலுத்த வேண்டாம். தொழிலில் உழைப்பிற்கு ஏற்ற உயர்வு கிடைக்கும். பணத்தேவை அதிகரிக்கும். உடல்நலனில் ஆர்வம் உண்டாகும்.

**கன்னி:** எல்லோரது நல்லெண்ணத்தையும் பெறுவீர்கள். தொழில் வியாபா ரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வந்து சேரும்.

**துலாம்:** நீண்டநாள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தாராள பணவரவு கிடைக்கும். அலுவலகத்தில் பாராட்டுப் பெறுவீர்கள். எளியவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** முக்கிய செயல் தாமதாகும். உறவினர்களிடம் இதமாக நடந்து கொள்ள வேண்டும். தொழில் வியாபாரம் செழிக்க புதிய திட்டம் வகுப்பீர்கள். வருமானம் சீராக இருக்கும்.

**தனுசு:** பிறரது வேலைகளில் தலையிட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். தியானம், தெய்வ வழிபாடு மன அமைதிக்கு உதவும்.

**மகரம்:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**கும்பம்:** செயற்பாடுகளில் உற்சாகம் மிகுந்திருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்கும். சேமிப்பு அதிகரிக்கும்.

**மீனம்:** முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியைத் தாமதமின்றி சரி செய்வது அவசியம். மிதமான பணவரவு கிடைக்கும்.


# வில்லனாக மாறிய சித்தார்த்!

சினிமாவில் இதுவரை காதல் பையனாக வலம் வந்த நடிகர் சித்தார்த், தற்போது வில்லனாக மாறியிருக்கிறார்.

ஷங்கர்இயக்கத்தில்வந்த'பாய்ஸ்'படம்மூலம்தமிழ்சினிமாவுக்கு அறிமுகமானவர்சித்தார்த். இந்தப்படத்தைதொடர்ந்து, காவியத் தலைவன்''180','காதலில்சொதப்புவதுஎப்படி?','ஜிகர்தண்டா', 'எனக்குள் ஒருவன்' போன்ற படங்களில் கதாநாயகனா நடித்துள்ளார்.

தமிழ் தவிர, தெலுங்கு படங்களிலும் நடித்திருக்கும் நடிகர் சித்தார்த், தற்போது மலையாளப் படத்தில் அடியெடுத்து வைத்திக்கிறார்.

பிரபல மலையாள நடிகர் திலீப் தற்போது 'கம்மர சம்பவம்' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். இதில் அவருக்கு ஜோடியாக நமீதா பிரமோத் நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிகர் சித்தார்த் வில்லனாக நடித்துள்ளாராம்.









# பின்பற்றத்தக்க டோனியின் மேற்கோள்கள்

- நல்லகுணங்களில்ஒன்றுதான் தன்னம்பிக்கை. நான் எப்போதும் நம்பிக்கையுடனும் தீவிரத்துடனும் இருக்கவே விரும்புகிறேன். இதையே ஆடுகளத்திலும் பின்பற்றுகிறேன்.
- எனக்குள் அழுத்தம் ஏற்பட ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.
- நான் கிரிக்கெட்டை அதிகம் கற்கவில்லை. நான் கற்றவையும் பெற்றவையும் ஆடுகளத்தில் விளையாடியும், கொஞ்சம் விளையாட்டைப் பார்த்தும்தான்...
- முடிந்தது முடிந்ததுதான். ஒரே தவறை மீண்டும் மீண்டும் செய்யாமலிருக்க கற்றுக்கொள்வது மிகவும் முக்கியம்
- உங்களுக்கென கனவு இல்லையெனில் உந்துதலே கிடைக்காது; உங்கள் இலக்கும் தெரியாமலயே போய்விடும்
- வாழ்வின் கடினமான தருணங்களில் எது சரிவரும், எது சரிவராது எனச் சட்டென யோசித்து, அனுபவ ரீதியில் உறுதியான முடிவெடுப்பதில் இருக்கிறது எமது வெற்றி....
- களத்திலோ வெளியிலோ சகாக்கள் ஒவ்வொருவருடனும் மனதார இயங்குவதே தலைமைக்கு அழகு



twitter

உணர மட்டுமே
முடியும்...
உணர்த்த முடியாது...
பசி வலி காதல்

படிச்சு படிச்சு
சொல்றது
என்னவோ
ஆசிரியர்கள்தான்




உன் வேதனை பலரை
சிரிக்க வைக்கலாம்
ஆனால் உன் சிரிப்பு
ஒருவரைக் கூட
வேதனைப்படுத்தக்
கூடாது...

– சார்லி சாப்ளின்



All Kind of offset & Digital printing

# Vista8 printers

Computer Designing,
Offset Printing,
Digital Printing
Screen Printing
Mug & Plate Printing
T - shirt design & Printing
Photocopy
Shield & ETC...




## Nameboard Work

பாடசாலைகளுக்குத் தேவையான சான்றிதழ்கள்,
வீர, வீராங்கனைகளுக்கான வெற்றி இலக்கங்கள், வெற்றிக் கேடயங்கள்,
பதக்கங்கள், சிறப்புமலர்கள் மற்றும் அனைத்து வகையான
அச்சுப் பதிப்புக்களையும் மிகக்குறைந்த விலையில்
துல்லியமாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள.....

No :.116D,
Ramanathan Road
Kaladdy Junction, Jaffna.
vista8print@gmail.com

0212215488
0755206848
0777918373

எம்மிடம் பல விதமான ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள்,
**Commode Chairs, Head Adjustable Beds, Head & Leg Elevatable Beds,**
மடிக்கக்கூடிய மருத்துவ மெத்தைகள். மேலும் உங்கள் உடலில் ஏற்படக்
கூடிய எலும்பு மூட்டு முறிவு சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளுக்கும்
தீர்வாக எல்லா வகையான **Othopedic Supporters** எம்மிடம் உண்டு.




## வனிக்கா சேஜிக்கல்ஸ்

203, Hospital Road, Jaffna.
Tel: 021 222 0077 / Mob: 077 44 22 367 / 0775106910
E-mail- vanisurgi@sltnet.lk

(10)

# MODERN City Inn

Available



Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water

**Very Moderate Room Charges**
Single or Double Occupancy
and Family Apartment
Wedding / Small Group Conferance
All Kind of Parties

**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
moderncityinn@yahoo.com
moderncityinn1@gmail.com
moderncityinn.com

For inquiries and Reservations
Contact No:- 031-2233967
031-2231961
moderncityinn@yahoo.com

வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய சித்திரைப்
புதுவருட வாழ்த்துக்கள்

## சித்திரைப் புத்தாண்டைய முன்னிட்டு

# அசத்தலான தள்ளுபடி

01.04.2018
தொடக்கம்
14.04.2018 வரை



சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள், சல்வார்கள்,
பிளவுஸ், Top கள் மற்றும்
அனைத்து விதமான ஆடைகளையும்
ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங்
அனைத்து ஆடைகளையும் ஒரே
கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

# ஸ்ரீ லலிதா பெஷன்

இல.165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# லலிதா ரெக்ஸ்

T.P: 021 222 5260
இல. 5,6 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.


# நீங்காத நினைவுகளுடன்

10 ஆம் ஆண்டு　　11 ஆம் ஆண்டு



| அமரர் கந்தையா துரைராசா (துரை) | அமரர் துரை பாக்கியம் |
|---|---|
| தோற்றம் :- 05.08.1926 | தோற்றம் :- 24.06.1928 |
| மறைவு :- 02.04.2008 | மறைவு :- 13.05.2007 |

திதி- தேய்பிறை - துவாதசி
(12.04.2018- வியாழக்கிழமை)

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்ந்து எங்களை வளர்த்து, ஆளாக்கி,
எம்மைக் கலங்க வைத்து விண்ணுலகம் சென்றீரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(CS15566)(11.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







உயர்திரு. அங்கஜன் இராமநாதன் | திரு. தில்லைநாதர் தங்கவேலு

"கிராமத்தின் எழுச்சி சுதந்திரத்திற்கே"

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு. அங்கஜன் இராமநாதன்** அவர்களுடன் கைகோர்த்து சுதந்திரக்கட்சியின் சார்பில் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவாகி இன்று (12.04.2018) வியாழக்கிழமை சபையின் கன்னியமர்வில் பங்குகொள்ளும் **திரு.தில்லைநாதர் தங்கவேலு** அவர்களை (சமாதான நீதிவான் தலைவர், நாவற்குழி கிழக்கு விவசாயச் சம்மேளனம், செயலாளர், நாவற்குழி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், சமூகசேவையாளர்)

எமது பிரதேசத்திற்கு (17 ஆம் வட்டாரம்) சிறந்த சேவையை வழங்க பாரதி சனசமூக நிலையத்தின் சார்பாக பாராட்டி வாழ்த்தி கரம் கோர்க்கின்றோம்.

நம்பிக்கையின் வாக்குமூலம் வாழ்த்துவோர்:
**பாரதி சனசமூக நிலையத்தினர்.**
**நாவற்குழி, கைதடி.** (cs.15614) (13.17)

---

# STUDY IN INDIA
## ENGINEERING DEGREES

From **ANNA UNIVERSITY**, Chennai, India
Study Center: **EXCEL ENGINEERING COLLEGE**
Komarapalayam, Tamil Nadu, South India.

**ENGINEERING DEGREES**
- B.E.- Aeronautical Engineering
- B.E.- Civil Engineering
- B.E.- Computer Science Engineering
- B.E.- Electronics & Communication Eng.
- B.E.- Mechanical Engineering
- B.Tech - Information Technology

**SPECIAL SCHOLARSHIP FEE For 5 Students**
- 1st year - US $ 1500
- 2nd year - US $ 1000
- 3rd year - US $ 1000
- 4th year - US $ 1000
- Food & Accommodation: US $ 100 per month

Entry Requirement: 2C + 1S in Maths Stream (with combined Maths, Chemistry & Physics) and Credit Pass in O/L or A/L English

SRET EXCEL

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருடம் Diploma கற்றபின் மேலும் 3 வருடங்கள் Engineering Degree யை கற்க முடியும்

மேலதிக விவரங்களுக்கு ☎ **0777 767 818** (தமிழில்)
**Scholars Information Centre**
No,01, Vaverset Place, Wellawette, Colombo 6

---

**கார் விற்பனைக்கு**
**மாருதி** ALTO LX I, NP KK XXXX
**கார் விற்பனைக்கு**
**077 307 5536**

---

**பெண் வேலையாள்கள் தேவை**

தையல் நிலையத்துக்குப் பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு:- திருமதி தி.முராளினி
128, ஜெயந்திநகர், கிளிநொச்சி.
Email: gobinujan4@gmail.com
**077 472 5344, 077 946 3804** (CS/15554)(11.17)

---

**நாஹா மருத்துவ நிலையம்**

மர்மமான எலும்பு பாதிப்பு, பாரிசவாதம், முழங்கால் பாதிப்பு, கை, கால் செயலிழப்பு - சிறப்புசிகிச்சை முறை, தீராதசொறி, மாதவிடாய் கோளாறு, ஆஸ்மா சிறப்பு மருந்தியல்

வங்கிமுன்லேன் சாத்தாவத்தை வயிரவர் கோயில் (ஜெகபதிவீடு) மானிப்பாய்.
**077 321 2740** (cs. 14684) (13.17)

---

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## மல்லாகம் சந்தைக்கோழிக்கடையினை 01.05.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 20.04.2018 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 20.04.2018 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி வரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி : 20.04.2018 வெள்ளிக்கிழமை பி.ப 2.30மணி

| இல | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | மல்லாகம் சந்தை கோழிக்கடை | 1,750.00 | 385,750.00 | 10,000.00 | 1,000.00 |

- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், உப அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப படிவத்தினை மல்லாகம் உபஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- மல்லாகம் சந்தையிலிருந்து, 1km தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் கோழிஇறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

**திரு.சோ.சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**
**(கொல்லங்கலட்டி).**

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**
**(கொல்லங்கலட்டி).**
**11.04.2018** (IN 6456) (14.17)

---

**தேவை**

- றொட்டி தயாரிப்பாளர்கள்
- சிட்டை எழுதுனர் (அனுபவமுள்ள, மும்மொழியும் சரளமாக பேசக்கூடியவர் ஆண், பெண் இருபாலாரும்)
- சுத்திகரிப்பாளர் (ஆண், பெண் இருபாலாரும்)

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**லிங்கன் கிறீம் கவுஸ்**
213, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
**021 221 6660** (CS 15662)(14.17)

---

**மணமகள் தேவை**

வயதான கிறிஸ்தவ கௌரவ குடும்பம் விவாகரத்தான நற்குணமும் நல்ல இலட்சியமும் கொண்ட கனடிய பிரஜை ஒழுக்கமும் நற்பண்பும் மகிழ்ச்சியும் கொண்ட 30 வயதிற்கு உட்பட்ட கிறிஸ்தவ பெண்ணுக்கு வளமான வாழ்வு அளிக்க விரும்புகின்றார். சீதனம் எதிர்பார்க்கவில்லை. ஒரே முறையில் சகல விவரங்களுடன் படங்கள் உட்பட விண்ணப்பிக்கவும். (CS 15568)(14.17)

**விளம்பர இல.003**
**மே.பா.உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

## மரண அறிவித்தல்



மண்ணில் 10 . 11 . 1950

விண்ணில் 11 . 04 . 2018

## திருமதி செல்வராணி திருநீலகண்டன்

காரைநகர் எண்ணாங்கப்பிட்டியை பிறப்பிடமாகவும் வவுனியா உக்கிளாங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி திருநீலகண்டன் 11.04.2018 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநீலகண்டனின் அன்பு மனைவியும் தயாராசா(அமெரிக்கா), சிவரூபன்(குட்டி T.S.K றேடர்ஸ் - வவுனியா), தர்சினி(வவுனியா), குமுதினி(ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்சினி(அமெரிக்கா), சிவரூபி(வவுனியா), காஞ்சிநாதன்(விற்பனை பிரதிநிதி ரேக்கி), சிறீதரன்(ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கீர்த்திகன்,ஹபிஸ், அபிராமி, குமரன், விபுஷனா, லக் ஷனா, டிலக் ஷிகா, திவ்வியன், டினோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை வரதராசா(ஓப்பிலா) மற்றும் இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சோமசுந்தரம் மற்றும் மாணிக்கம், சபாரட்ணம், சுந்தரலிங்கம், சிவஞானம், கணேசன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக வதிவிடமான வவுனியா, உக்கிளாங்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (12.04.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 5.00 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.113/26, 3ஆம் ஒழுங்கை,**
**சிவன்கோயில் வீதி,**
**உக்கிளாங்குளம், வவுனியா.** (00313) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**தி.சிவரூபன்(குட்டி)**
**077 758 5918**

---

# சுந்தர்சன்
நிறுவனத்தின்
**சித்திரைப் புத்தாண்டு**
## விசேட விலைக்கழிவும் இலவச விநியோகமும்

02.04.2018 - 21.04.2018 வரை




வீட்டுக்கு தேவையான மின் உபகரணங்கள் அத்தனைக்கும் உத்தரவாதத்துடன் கூடிய விசேட விலைக்கழிவு தரப்படும்

138, யாழ் வீதி, மானிப்பாய்

# அர்ப்பணிப்புடன் முன்னேறும் எம் பிள்ளைகளுக்கு ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் நல்வாழ்த்துகள்

## சுபபெத்தும் புலமைபரிசில்கள் 600



**நாடுமுழுவதிலுமுள்ள 2016/2017 ஆம் ஆண்டுகளில்**
**5ஆம் தர புலமைபரீட்சை,**
**சாதாரணதர அல்லது உயர்தரப் பரீட்சையில்**
**சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு**
**நிதிசார் புலமைபரிசில்கள் 600**

சுபபெத்தும்
தேசிய புலமைப்பரிசில் திட்டம்

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

- உங்கள் பிள்ளை 2016/2017 ஆம் ஆண்டுகளில் 5ஆம் தர புலமைபரிசில், சாதாரணதர அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் சுபபெத்தும் புலமைபரிசில் செயற்றிட்டத்திற்கு விண்ணப்பிக்கமுடியும்.
- நீங்கள் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுட்காப்புறுதி திட்டம் உரித்தற்றவராயினும் இப்புலமைபரிசிலுக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவீர்கள். மேலும் நீங்கள் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுட்காப்புறுதி திட்டம் உரித்துடையவராயின் உங்களுக்கு நீண்டகால புலமைபரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

| | 5ஆம் தர புலமைபரீட்சை | சாதாரண தரம் | உயர்தரம் |
|---|---|---|---|
| ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் ஆயுட்காப்புறுதி உரித்துடையவரெனின் | வருடத்திற்கு ரூ. 20,000 படி 5 வருடத்திற்கு | வருடத்திற்கு ரூ. 40,000 படி 2 வருடத்திற்கு | வருடத்திற்கு ரூ. 50,000 படி 3 வருடத்திற்கு |
| ஆயுட்காப்புறுதி உரித்தற்றவர் எனின் | ரூ. 20,000 பணத்தொகை (ஒருதடவைக்கு மாத்திரம்) | ரூ. 40,000 பணத்தொகை (ஒருதடவைக்கு மாத்திரம்) | ரூ. 50,000 பணத்தொகை (ஒருதடவைக்கு மாத்திரம்) |

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் சுபபெத்தும் புலமைபரிசிலுக்கு 2018 மே 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்படிவங்களை அருகில் இருக்கும் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கிளைகளின் அல்லது எமது இணையத்தளத்தின் ஊடாக பெற்றிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் காப்புறுதி முகவரை அணுகுங்கள்.
அல்லது அருகிலிருக்கும் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கிளையை நாடுங்கள்.

**துரித அழைப்புகளுக்கு - 0112 357 357 எமது இணையத்தளம் - www.srilankainsurance.com**

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தா[illegible] போன்று

# சார்லி சாப்ளின்

ஒரு தாய் மேடையில் பாடிக் கொண்டிருக்கிறார். அதனை ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் கீழே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்தத் தாயின் பிள்ளை இவன். தன் தாய் பாடுவதை கூட்டத்தில் எல்லோருடனும் சேர்ந்து உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறான். ஒரு கட்டத்தில் அந்த அம்மாவுக்கு தொண்டை கட்டிக் கொண்டது. அவரது குரல் ஒத்துழைக்கவில்லை. அதனால் தொடர்ந்து அவரால் பாட முடியவில்லை.

தன் தாயினால் தொடர்ந்து பாட முடியவில்லை என்பதை இந்தச் சிறுவன் புரிந்து கொண்டான். உடனே அவன் ஓடிச் சென்று மேடையில் ஏறினான். பாதியில் நின்று போன பாடலைத் தொடர்ந்து பாட ஆரம்பித்தான். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த பொது மக்கள் எல்லோரும் அப்படியே அசந்து போய் விட்டார்கள். அவ்வளவு பிரமாதமாகச் சிறுவன் பாடுகிறான். ரசிகர்கள் மத்தியில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்! ரசிகர்கள் மேடையை நோக்கி காசுகளை வீச ஆரம்பித்தார்கள். சிறுவன் மேடையில் காசுகள் வந்து விழுவதைப் பார்த்தான். அவன் திடீரென்று பாதியில் தான் பாடுவதை நிறுத்தினான். பொது மக்களைப் பார்த்துச் சொன்னான்.



"கொஞ்சம் பொறுங்கள் இந்தக் காசுகளைப் பொறுக்கிக் கொள்கிறேன். அதன் பின்பு தொடர்ந்து பாடுகிறேன் என்று சொல்லி விட்டு குனிந்தான். அவனது இந்தச் செயலைப் பார்த்து கூட்டத்தில் ஒரே சிரிப்பு. எல்லோரும் கைதட்டிச் சிரிக்க ஆரம்பித்தார்கள். இதுதான் அவன் முதல் தடவையாக மக்களைச் சிரிக்க வைத்த நிகழ்ச்சியாகும். அதன் பின்னர் 88 வயதில் அவர் சாகிற வரைக்கும் மக்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார். அந்த மாபெரும் கலைஞர்தான் சார்லி சாப்ளின் அந்தக் காலத்தில் பேசாமல் முக பாவத்தின் மூலமே சமுதாயப் புரட்சிக் கருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைத்தவர் சார்லி சாப்ளின்.

இயற்கையாகவே அவர் கொஞ்சம் குள்ளமானவர். அத்தோடு தொள தொள என்று தையல் போட்ட ஒரு ஜீன்ஸை அணிந்திருப்பார். தலையில் உயரமான ஒரு தொப்பி கையில் ஒரு வாங்கிங் ஸ்டிக் கோணங்கித்தனமான ஒரு நடை. இவை சார்லி சாப்ளினின் அடையாளங்கள் பிற்காலத்தில் இவரது நடை உடை பாவனைகளைப் பின்பற்றி பலர் நடிக்க ஆரம்பித்தார்கள்.

1931ஆம் வருடம் பேசாத திரைப்படங்கள் வெளிவந்தன. வெறும் காட்சிகள் மூலமாக கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது.

"நகர விளக்குகள் (the city lights)என்ற ஒரு படம். அதில் ஒரு காட்சி. ஒரு நகரத்தில் சிலை திறப்பு விழா நடைபெறுகிறது. சிலையைத் திறக்க நகரபிதா(மேயர்) வந்திருந்தார். சிலை முன்னதாக ஒரு பெரிய போர்வையால் மூடப்பட்டுள்ளது. மேயர் போர்வையை எடுக்கிறார். சிலையின் கால்களின் அடியில் படுத்திருந்த ஓர் ஏழை குளிரில் நடுங்கிய படியே இறங்கி ஓடுகிறான். அது சார்லி சப்ளின் காட்சி அவ்வளவுதான். வசனம் எதுவும் இல்லை. இருந்தாலும் அந்தக் காட்சி தெரிவிக்கும் கருத்து இதுதான். "இந்த நகரத்தில் வாழும் ஏழைக்கு குளிருக்குப் போர்வை இல்லை. ஆனால் உயிருடன் இல்லாத ஒரு பெரிய மனிதனுக்குச் சிலை... அதற்கு ஒரு போர்வை".

இதுதான் அக்காட்சி மூலம் சார்லி சாப்ளின் சொல்லிய

# மின்சாரத்தின் பயன்கள்



- இயற்கையில் பல சக்திகள் உள்ளன.
- அவற்றில் சூரிய சக்தி, காற்றுச் சக்தி, அணுசக்தி, மின்சக்தி என்பவை சிலவாகும்.
- இவை மக்களுக்குப் பயன் தருபவை.
- இவற்றுள் மனிதருக்குப் பெருமளவில் பயன்படுவதில் மின்சக்தியும் ஒன்றாகும்.
- இன்றைய உலகில் மின்சக்தி அத்தியாவசிய ஒரு சக்தியாகவும் விளங்குகிறது.
- மின்சாரத்தை நாம் கண்களால் காணமுடியாது.
- அதன் அளவற்ற சக்தியை அதன் செயற்பாடுகள், மூலமே நாம் அறிந்து கொள்ள முடியும்.
- மின்சாரம் மின்விளக்குகளில் பாய்ந்து ஒளியைத் தருகிறது.
- மின் விசிறிகளை இயக்கி காற்றை வீசுகிறது.
- மின் அடுப்புக்களில் நுழைந்து சமையல் செய்ய உதவுகிறது.
- மின் இயந்திரங்களில் புகுந்து அவற்றை இயங்கச் செய்கிறது.
- வானொலி, தொலைக்காட்சி, ஒலிப்பதிவு, ஒலிநாடா, ஒளிநாடா, தொலைபேசி, கணினி, ஒளிறல்கருவி ஆகிய கருவிகளை இயக்கவும் உதவுகிறது.
- போக்குவரத்துத் துறைகளில் தொடருந்து உட்பட பல வண்டிகளை இயக்குகின்றது.
- மருத்துவத் துறையில் நோய்களைக் கண்டறியவும் அறுவைச் சிகிச்சை செய்யவும் மின்சாரம் பயன்படுகிறது.
- பல்வேறு அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.
- மின்சாரத்தை நீர், அனல், அணு, சூரிய ஒளி, காற்று (காற்றலை) ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கிறார்கள்.
- மின்சாரத்தை நாம் மிகவும் கவனமாக கையாள வேண்டும்.
- இல்லையேல் மின்சாரத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி இறக்கவும் நேரிடும்.
- நாட்டு முன்னேற்றத்திற்கும், மக்களின் தேவைக்கும் மின்சாரத்தை தக்க முறையில் பயன்படுத்த வேண்டும்.
- மின்சக்தியை நாம் வீணாக்கக் கூடாது.

## துணுக்கு

துன்பங்கள் வரும் ஆனால்
அவை
ஓரிடத்தில்
நிலைத்திருப்பவை அல்ல
கடின உழைப்பும் நல்ல
எண்ணங்களும்
வெளிப்படும் இடத்தில்
துன்பங்கள்
ஆற்று நீரைப் போல
ஓரிடத்தில் இருந்து
மற்றொரு இடத்திற்கு
எளிதாக ஓடுவதை
உணரலாம்.

# கொழுப்பைக் குறைக்கும் புதிய மருந்து



குருதிக் குழாய்களில் படிந்திருக்கும் கொழுப்புத்தான் மாரடைப்பு வருவதற்கு முக்கிய காரணம். இதனைத் தடுப்பதற்கு புதிதாக ஒரு மருந்தை ஜப்பான் கண்டு பிடித்துள்ளது. இந்த மருந்தைச் சாப்பிட்டு வந்தால் குருதிக் குழாய்களில் உள்ள கொழுப்பு குறைந்து கொண்டேவரும். மேலும் இதயம் சம்பந்தப்பட்ட எந்த நோயும் வராது. இந்தப் புதிய மருந்து தற்போது ஜப்பானில் அதிக அளவில் விற்பனை யாகிக் கொண்டிருக்கிறது. இந்த மருந்து வெள்ளைப்பூண்டில் இருந்தே தயாரிக்கப்படுகிறது.

எனவே மாரடைப்பு நோய் ஏற்படாதிருக்க தினமும் உணவில் இரண்டுவேளையாவது பூண்டு சேர்த்து வந்தால் போதும் என ஜப்பான் மருத்துவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்துள்ளனர்.

தற்பொழுது வெள்ளைப்பூண்டு ஜப்பானியர்களின் உணவில் தவறாது இடம் பெறுகிறது. இருதய நோய் உள்ளவர்கள் மருந்து சாப்பிட விருப்பம் இல்லையென்றாலும் தினசரி வெள்ளைப்பூண்டை உணவுடன் சேர்த்து வந்தாலே போதும் எனக் குறிப்பிடுகின்றனர் மருத்துவர்கள்.

## இரு படங்களுக்கும் இடையே 7 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்



## முக்கிய தினங்கள்

1. பொதுநலவாய தினம் - மார்ச் 11
2. உலக அகதிகள் தினம் - ஜூலை 28
3. உலக மே தினம் -மே 1
4. உலக சுற்றாடல் தினம் - ஜூலை 5
5. உலக ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 6
6. உலக சிறுவர் தினம் - ஒக்டோபர் 1
7. உலக குடித்தொகை தினம் - ஜூலை 11
8. உலக மனித உரிமைகள் தினம் - டிசெம்பர் 10
9. ஐக்கிய நாடுகள் தினம் - டிசெம்பர் 24
10. உலக பொலிஸ் தினம் - ஒக்டோபர் 2
11. உலக உணவு தினம் - ஒக்டோபர் 16
12. உலக சமாதான தினம் - செப்ரெம்பர் 21
13. உலக சிக்கன தினம் - ஒக்ரோபர் 30
14. ஐக்கிய அரபு குடியரசு தினம் - ஜூன் 22
15. உலக சிறப்புத் தேவையுடையோர் தினம் - மார்ச் 20
16. உலக மாதர் தினம் - மார்ச் 7
17. பன்னாட்டுத் தொண்டர் தினம் - டிசெம்பர் 5
18. பன்னாட்டுப் பத்திரிகையாளர் தினம் - செப்ரெம்பர் - 8
19. உலக எய்ட்ஸ் தினம் - டிசெம்பர் 1
20. சூழல் பாதுகாப்பு தினம் - ஜூன் 5

## இரண்டாவது...

வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்தை கடந்த ஆண்டு பெற்றுக் கொடுத்தது. வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவரும் வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்தைப்பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தனர்.

அப்போது வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த மருத்துவர் ஜி.குணசீலனும் விண்ணப்பித்திருந்தார். அவர் மருத்துவராக இருந்தபோது, அரசால் வழங்கப்பட்ட வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்தை ஏற்கனவே பெற்றிருந்தார். அதனைப் பெற்று 5 ஆண்டுகள் பூர்த்தியாவதற்கு முன்னர் விண்ணப்பித்தமை காரணமாக, மாகாண சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்போது வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரம், மருத்துவர் ஜி.குணசீல னுக்கு வழங்கப்படவில்லை.

வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்தைப் பெற்று 5 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. இதனால் மாகாண சபை உறுப்பினருக்குரிய வாகன வரி விலக்கு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, மருத்துவர் ஜி.குணசீலன் தற்போது விண்ணப்பித்துள்ளார். வடக்கு மாகாண பேரவைச் செயலக வட்டாரங்களும் இதனை உறுதிப்படுத்தியது. (5)

## வானூர்தி...

யொன்று நேற்று விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 257 பேர் உயிரிழந்தனர். அல்ஜீரியத் தலைநகர் அல்ஜீயர்ஸில் உள்ள போபரிக் இராணுவ வானூர்தித் தளத்தில் இருந்து இன்று டிண்டாப் நகருக்குச் சென்ற வானூர்தியே வீழ்ந்து விபத்துக்கு உள்ளானது. வானூர்தியில் 200 சிப்பாய்கள் உள்ளிட்ட 257 பேர் இருந்தனர். அனைவரும் உயிரிழந்தனர். (ம)

## மே முதலாம்...

ருந்த அரச விடுமுறை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் 29ஆம் திகதி வெசாக் பௌர்ணமி என்பதால் அதனைத் தொடர்ந்து வரும் ஒரு வார காலம் வெசாக் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளமையை அடுத்து தொழிலாளர் தினக் கொண்டாட்டங்கள் மே மாதம் 7 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அதற்கமைய தொழிலாளர் தினக் கூட்டங்கள், ஊர்வலங்கள் மே மாதம் 7ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ள நிலையில் அன்றைய தினத்தை வங்கி, அரச மற்றும் வர்த்தக விடுமுறை தினமாக அரசு அறிவித்துள்ளது. (5)

## அரசியல்...

அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

'அரசியல் கைதிகளை விடுவியுங்கள். வழக்குப் போடாமல் இருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும். இதனைக் கூறுவதற்கு நான் பயப்படவில்லை. அரசியல் கைதிகளுக்குத் தண்டனை வழங்கியருந்தால் கூட இந்த நேரம் அவர்கள் வெளியில் வந்திருப்பார்கள். 12 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்களை கடந்த அரசு மறு வாழ்வு வழங்கி விடுதலை செய்தது. அதுவொரு நல்ல செயற்பாடாகும். அதேபோன்று இந்த அரசும் செயற்படவேண்டும்' என்று ராஜித குறிப்பிட்டார். (5)

## சிலைகளுக்காக...

மையில் நேற்று இடம்பெற்றது. முதல்வர் உள்ளிட்ட உறுப்பினர்கள் கன்னி உரையாற்றினர்.

பெரும்பாலான உறுப்பினர்கள் அரசியல் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் சிலை அமைக்க வேண்டும் என்று கருத்துக்களை முன்வைத்தனர்.

யாழ்ப்பாண மாநகரின் அபிவிருத்தி தொடர்பிலோ, மாநகர சபைக்குரிய ஏனைய கடமைகள், செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பிலோ உறுப்பினர்கள் முக்கியத்துவம் கொடுத்து கன்னி அமர்வில் உரையாற்றவில்லை. (5,8)

## தமிழ்க்...

**விடயங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டியது உண்மைதான். இவ்வாறு அமைச்சரும்,**

அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை அமைச்சருடன் ரணிலுடன் எந்தவொரு உடன்பாட்டையும் மேற்கொள்ளவில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து, கூட்டமைப்புக்குள் ஏற்கனவே குழப்பத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், அமைச்சர் ராஜித இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித கலந்து கொண்டார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசுக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டதா? கூட்டமைப்பு தலைமை அமைச்சருக்கு ஆதரவளிக்க நிபந்தனை விதிக்கப்பட்டதா?' என்று செய்தியாளரால் கேள்வி எழுப்பப்பட்டது.

'அவ்வாறு எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. அவர்கள் 2015ஆம் ஆண்டு முன்வைத்த கோரிக்கையை தற்போது மீண்டும் முன்வைத்துள்ளார்கள். அதாவது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். காணமாற்போனோர் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்பனவே கூட்டமைப்பின் பிரச்சினையாகும். அது நீண்டநாள் பிரச்சினையாகும். அவை உண்மையில் விரைவுபடுத்தப்பட வேண்டும். அதற்காக நிபந்தனை விதிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. அது தொடர்பில் பேசவுமில்லை' என்று பதிலளித்தார். (5,31)

## காணிகளைப்...

களா? பொது மக்களின் காணிகளில் இராணுவத்தினர் வெதுப்பகம் அமைத்து வியாபாரம் செய்வது சரியா என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், 'வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளனவா? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான எதிர்ப்பின் காரணமாக இது நடைபெறுகின்றதா?' என்று செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

'வடக்கில் 650 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. அவ்வாறு விடுவிப்பதில் என்ன தவறிருக்கின்றது. அந்த மக்கள் படும் கஷ்டங்களை நீங்கள் நேரில் சென்று பார்த்தால் அவர்களின் அவலம் உங்களுக்குத் தெரியும். உங்கள் காணிகளை யாராவது இவ்வாறு பறித்தெடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள். உங்களுக்கு அப்படி நடந்தால்தான் புரியும். தம்மிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளை மீளக் கோரும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது' என்று பதிலளித்தார்.

'எனினும் காணி விடுவிப்பானது நம்பிக்கையில்லாத் தீர்மானம் காரணமாக விரைவுபடுத்தப்பட்டுள்ளதா?' என்று மீளவும் செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

'நீங்கள் எப்படி அவ்வாறு கூற முடியும். 650 ஏக்கர் காணிகளுக்கான நில அளவையை இரண்டு வாரங்களுக்குள் செய்ய முடியுமா? அதுமட்டுமன்றி மக்களின் காணிகளை இராணுவத்தினர் வெதுப்பகம் அமைத்துக் கொண்டிருப்பது நியாயமானதா? தெற்கில் இவ்வாறு நடந்தால் என்ன செய்வீர்கள்? வடக்கு மக்களின் காணிகள் விரைவாக விடுவிக்கப்படவேண்டும் என்பதை நான் மிகவும் திடமாக வலியுறுத்திக் கூறுகின்றேன்' என்று பதிலளித்தார். (5)

## ஐ.தே.கவுடன்...

லங்கா முஸ்லிம் காங்கிரஸை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியது.

தொங்குநிலையிலுள்ள சபைகளின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றது. மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச சபை மற்றும் முசலி பிரதேச சபைகளுக்கான தவிசாளர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

**நானாட்டான்**

தவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திருச்செல்வம் பரஞ்சோதியும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் றோஜர் ஸ்ரலின் இருவரது பெயர்களும் முன்மொழியப்பட்டது.

வாக்கெடுப்பு இரகசியமாக நடத்தப்படவேண்டும் என்று பெரும்பான்மை உறுப்பினர்கள் வாக்களித்தனர். வாக்கெடுப்பு இரகசியமாக நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இருவரும் தலா 8 வாக்குகளைப் பெற்றனர்.

திருவுளச்சீட்டின் ஊடாக தலைவராக கூட்டமைப்பின் திருச்செல்வம் பரஞ்சோதி தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. கூட்டமைப்பின் சார்பில் போ.லூர்து நாயகம் பிள்ளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ம.ஜெயனாந்தன் குரூஸ் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பு உறுப்பினர்கள் பெரும்பான்மையாக ஆதரவு தெரிவித்தனர். வாக்கெடுப்பில் இரண்டு உறுப்பினர்களும் தலா 8 வாக்குகளைப் பெற்றனர். கூட்டமைப்பு உறுப்பினருக்கு, கூட்டமைப்பின் 7 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருக்கு, அந்தக் கட்சியின் 5 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

இருவரும் சமனான வர்க்குகளைப் பெற்றமையால் உபதவிசாளர் தெரிவு திருவுளச்சீட்டின் ஊடாக இடம்பெற்றது. கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட போ.லூர்து நாயகம் பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

**முசலி**

முசலி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக்கான அமர்வு உரிய நேரத்துக்கு ஆரம்பமாகவில்லை. உறுப்பினர்களின் கோரம் இல்லாமையால் சபை 30 நிமிடங்கள் உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சனால் ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில் சபைக்கு வெளியே கட்சி ஆதரவர்களிடையே முரண்பாடு ஏற்படும் சூழல் உருவாகியது. பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. அதன் பின்னர், தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் இடம்பெற்றது.

தவிசாளர் பதவிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் அப்துல் கபூர் கலீபத் சுபியானும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஜே.ஈசான் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது. பெரும்பான்மை உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினார்கள். கபூர் 9 வாக்குகளையும், ஈசான் 6 வாக்குகளையும் பெற்றார்.

கபூருக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஆதரவு வழங்கியிருந்தன. ஈசானுக்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியிருந்தன. நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நடுநிலமை வகித்தது.

உப தவிசாளர் தெரிவுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் முஹறசின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் பிலிப் சகாயநாதன் குரூஸ் ஆகியோரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முஹறசினுக்கு 9 வாக்குகளும், குரூஸ்க்கு 6 வாக்குகளும் கிடைக்கப் பெற்றது. இதனையடுத்து முஹறசின் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த அமர்வுகளை, அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், மாகாண சபை உறுப்பினர்களான பிரிமூஸ் சிறாய்வா, எம்.கே.சிவாஜிலிங்கம், அலிக்கான் சரீப், எஸ்.எம்.நியாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோநோகராதலிங்கம், ஹுனைஸ் பாரூக், முத்தலீப் பாரூக், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் உள்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (5,56)

## புலிகளின் ஆயுதங்களை தேடி கிளிநொச்சியிலும் வேட்டை



கிளிநொச்சி, ஏப். 12

கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன் புதைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அகழ்வு பணிகள் நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்துக்கு பின்புறமாக அகழ்வு பணிகள் நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் இந்தத் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தது. (5,6,35)

## யாழ்ப்பாண...

யிலிருந்து ஆரம்பமாகவுள்ளது என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வேலையற்ற பட்டதாரிகளில் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்காக 2 ஆண்டுகள் பயிற்சி அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது. நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பல பட்டதாரிகள் குறித்த பதிவுகளை மேற்கொள்ள தவறியமை சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பு பட்டப்படிப்புக்களை நிறைவு செய்தும் ஏற்கனவே தமது பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய அனைவரும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை தமது பதிவுகளை மாவட்டச் செயலகங்களில் மேற்கொள்ள முடியும் - என்றார். (5,105,112)

## அரசிலிருந்து...

வெளியேறுவதாக நேற்று இரவு அறிவித்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவை அறிவித்தனர். சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த, இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,

நாங்கள் அரசின் சகல பதவிகளிலிருந்தும் விலகுகின்றோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளோம். எங்களின் சுயமதிப்பைப் பாதுகாக்கும் வகையில், ரணிலுக்கு எதிராக வாக்களித்தோம்.

நாங்கள் 16பேரும், இன்றிலிருந்து (நேற்று) அரசைவிட்டு வெளியேறுகின்றோம் - என்றார். (5,7)

## வடக்கு...

வுள்ளது.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாணசபைத் தேர்தலில், முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவது பற்றி ஆலோசித்து வருவதாக டக்ளஸ் தேவானந்தா கொழும்பு ஆங்கில ஊடகத்துக்குக் கூறியுள்ளார்.

'மாகாண சபைகளின் ஊடாக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நான் நம்புகிறேன். எனவே, எனது சாட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக ஏன் நான் போட்டியிடக் கூடாது?' என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (5)






## குருத்துவப் பணிவாழ்வில் 40வது ஆண்டு விழா

12.04.2018

குருத்துவப் பணிவாழ்வில்
40வது ஆண்டு விழாக் காணும்
எம் பங்குத்தந்தை



**அருட்பணி. R.H. சகாயநாயகம் அடிகளாரின்**

பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

புனித தோமையார் ஆலய மக்கள்
மாதகல்

# மின்சாரத்தை சேமிக்கும் 'எல்.ஜி.' குளிர்சாதானப் பெட்டிகள்

மின்சாரத்தை சேமிக்கும் 'லீனியர் இன்வெர்டர் கம்பிரெஸர்' மற்றும் 'டோர் கூலிங்' தொழில்நுட்பம் கொண்ட 'எல்.ஜி' குளிர்சாதா னப் பெட்டிகளை அபான்ஸ் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய அறிமுகம் குறித்து கருத்துரைத்துள்ள அபான்ஸ்,

"சாதாரண இன்வெர்டர் குளிர்சாதனப் பெட்டிகளில் உணவை மட்டுமே பாதுகாக்க முடியும். அதிலிருந்து மேலதிக அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. இவை அதிக மின்சக்தியை பயன்கொள்வதுடன் மாதாந்த மின்சாரப் பட்டியல் அதிகரித்துச் செல்கின்றது.

ஆனால்வேறு குளிர்சாதனப்பெட்டிகளில்காணக்கூடிய இன்வெர்டர் செயற்பாடுகளை விடவும் முற்றிலும் மாறுபட்ட செயற்பாடுகளை 'எல்.ஜி' குளிர்சாதானப் பெட்டிகள் கொண்டுள்ளன. 'எல்.ஜி' நிறுவனத்துக்கு உரித்தான 'பேடன்ட்' உரிமம் கொண்ட விசேட தொழில்நுட்பச் செயற்பாடு இதில் செயற்படுத்தப்பட்டுள்ளது. இது உணவைப் பாதுகாத்து மேலும் பல்வேறு அனுகூலங்களை வழங்குகிறது.

'இன்வெர்டர் லீனியர் கம்பிரெஸர்' மிக முக்கியமான தொழில்நுட்ப அம்சமாக காணப் படுகிறது. இவை சிலிண்டர் வடிவிலான பிஸ்டனை கொண்டுள்ளதோடு, நேரடியாக ஒரு இடத்தில் மாத்திரமே மோதி உராய்வை ஏற்படுத்துகின்றன. குறைந்த சத்தம் மற்றும் குறைந்த அதிர்வினை ஏற்படுத்தி நீண்ட காலத்துக்கு நீடித்துழைக்கின்றது. இது கொண்டுள்ள எளிய கம்பிரெஸரின் செயற்பாடு பொருள்களை அடுக்கி வைத்துள்ள அளவுகளுக்கு ஏற்பவே குளிர்ச்சியை சரிசெய்து, மின்சாரச்செலவை 42 வீதத்தால் குறைக்கின்றது.

மேலும் இது கொண்டுள்ள குளிர்ச்சியூட்டும் டோர் கூலிங் தொழில்நுட்பமானது 'எல்.ஜி' குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மட்டுமே உரித்தான தனித்துவமான ஒரு விசேட தொழில்நுட்பமாக விளங்குகிறது. இதன் கதவு (Door), பின்புறத்தில் மற்றும் ஒரு புறத்தில் விசேட துளைகளை கொண்டுள்ளதோடு சகல ராக்கைகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டி முழுமையுமாக ஒரே சீரான மற்றும் சம அளவிலான குளிர்ச்சியை பெற்றுத்தருகிறது. இதன் அடிப்படையிலேயே 'இன்வெர்டர் லீனியர் கம்பிரெஸர்' மற்றும் டோர் கூலிங் தொழில்நுட்பம் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது மின்சாரத்தை சேமித்து சிறந்த முறையில் இயங்குகிறது.


உணவு பாதுகாப்பின் போது ஆரோக்கியமான மற்றும் சுத்தமான குளிர்க்காற்றை வெளிப்படுத்துவதே இதன் சிறப்பம்சமாகும். 'எல்.ஜி' இன்வெர்டர் குளிர்சாதனப் பெட்டிகளின் உட்புறத்து வாயுக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக 5 படிமுறைகளைக் கொண்ட வடிகட்டி மூலம் 99.99 வீதமும் வாயுவில் உள்ள நச்சுக்களையும், அசுத்தங்களையும் அழித்து குளிர்சாத னப் பெட்டியின் புத்துணர்வை பேணுகிறது.

மரக்கறி, பழங்கள், மீன், இறைச்சி வகைகள் மற்றும் சமைத்த உணவுகளில் இருந்து வெளியாகும் துர்நாற்றத்தை நீக்குகிறது. 'ஈ-கோலய்' மற்றும் 'செல்மொனெல்லா' போன்ற பக்டீரியாக்களின் உருவாக்கத்தின் மூலம் உணவு கெட்டுப் போவதை தடுக்கின்றது. உணவைப் பாதுகாத்து குடும்பத்தின் ஆரோக்கியத்தை உறுதிசெய்கிறது.

மகிழ்ச்சி நிறைந்த ஆரோக்கியமான இல்லத்தை கட்டியெழுப்பும் போது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'எல்.ஜி' உற்பத்திகள் மிக முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. ஆரோக்கியத்தை உறுதி செய்யும் வகையில் சூழல் நட்புறவுமிக்கமற்றும்மின்சாரத்தை சேமிக்கும் உற்பத்தியாக வீட்டு மின் பாவனைப் பொருள்களை விற்பனை சந்தைக்கு 'எல்.ஜி' அறிமுகம் செய்து வருகிறது.

வேறு உற்பத்திகளைப் போலல்லாமல் 'எல்.ஜி' உற்பத்திகள் நாளுக்கு நாள் தொழில்நுட்பரீதியாகமேம்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்கும் விதமான உற்பத்திகளை வழங்கி வருகிறது" - எனத் தெரிவித்துள்ளது. (ஓ)

## மரண அறிவித்தல்கள்



### தேவராசா பாலகிருஸ்ணன் (பசுபதி)

சாவகச்சேரி, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா பாலகிருஸ்ணன் (பசுபதி) நேற்று முன்தினம் (10.04.2018) செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா மற்றும் பத்மாவதி தம்பதிகளின் மகனும் பஞ்சவர்ணனின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் அம்பிகைஅம்மா காலஞ்சென்ற அருணாசலம் கைராசிப்பிள்ளை ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2018) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெருடாவில், சாவகச்சேரி. (C 6457/15/17) தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
11 . 04 . 1957

ஆண்டவன் அடியில்
24 . 03 . 2017

### திருமதி சறோஜினி பாலகிருஷ்ணன்

திதி : அபரபக்க துவாதசி

முகம் பூத்த புன்னகை முழுமதியின் தண்ணொளியாம்
அவனியிலே எமை ஆக்கிவைத்து
அன்பெனும் சிறகால் அரவணைத்து
புவனம் போற்ற வைத்த எம் அன்புத் தெய்வமே
உம் துணையின்றி துடுப்பிழந்த வள்ளமானோம்
மின்னி முழங்கமுன் எம்மை விட்டு எங்கு சென்றீர்
ஆண்டொன்று போனாலும் அகலாது உம் நினைவு
எம் நெஞ்சோடும் நினைவோடும்
உம்மையே என்றும் நினைந்திருப்போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

21/2, சீனியர்லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம். (CS 15624) (14.17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
19 . 09 . 1934



இறப்பு
09 . 04 . 2018

### திருமதி நாகம்மா செல்லையா

மறுவம்புலோவைப் பிறப்பிடமாகவும் ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா செல்லையா கடந்த (09.04.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதி - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - நாகாத்தை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாதேவி, சாந்திநாதன், இராசேந்திரம் (சின்ராசு), விமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அரியரட்ணம் காலஞ்சென்ற டெய்சிராணி, விஜயகுமாரி, றஞ்சிதமலர், விஜயரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் டினேஸ், வித்தியா (லண்டன்), இந்துஜா (ஜேர்மனி), டிலேனியா நிஷாந்தி, டனுசன், டனுசியா (சுவிஸ்), கன்சிகா, குயின்சன், சலுஜா, வினோஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டார்வின், அஜீஷ், ஆருத், யுகிசனா, வருஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி, கல்வாரி சவக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

56/13, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி அருந்தவநாயகி சிவசுப்பிரமணியம்



கைதடி தெற்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி சிவசுப்பிரமணியம் 10.04.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (குனுக்கர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சேதுலிங்கம், ராசாத்தி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் கணபதிப்பிள்ளை, சேதுகாவலன், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகரன்(ஜேர்மனி), சிறிகரன்(லண்டன்), சிவகௌரி(லண்டன்), சிவாயினி(கைதடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பமிலா(ஜேர்மனி), ஜெனிற்றா(லண்டன்), ஸ்ரீபன்(லண்டன்), கலைச்செல்வன்(கைதடி) ஆகியோரின் அன்பு மாமியும் றோயி, தீபன், பர்சிகன், மிதுசன், லோயன், சுபிதன், லக்ஸ்சிகா, மதுசன், நிலவன், திசேகன், கபிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரிதுஸின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2018) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கைதடி, நுணாவில் குச்சம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி. (CS 15616) (14) தகவல்: குடும்பத்தினர்.

# பச்சை முட்டை சாப்பிடுவது நல்லதா?



கோழி முட்டையில் என்னென்ன இருக்கிறது தெரியுமா? 100 கிராம் கோழி முட்டையில் தண்ணீர் 75 கிராம், 1.12 கிராம், கொழுப்பு 10.6 கிராம், புரதச்சத்து 12.6 கிராம் விற்றமின் ஏ, விற்றமின் டி உள்ளிட்ட பத்து வகை விற்றமின், கல்சியம், இரும்பு உள்ளிட்ட ஏழு வகை தாதுச்சத்துகள், ஒமேகா3 கொழுப்பு அமிலம் எனப் பல சத்துகள் உள்ளன. ஒரு முட்டை சாப்பிட்டால் 155 கலோரி ஆற்றல் கிடைக்கிறது. ஒரு நேரத்தில் இரண்டு முட்டை சாப்பிட்டால் ஒரு சராசரி மனிதருக்குக் காலை உணவுக்குத் தேவையான சக்தி கிடைத்துவிடும். இன்றைய தினம் துரித உணவகங்களில் பல வகை வண்ணச் சுவையூட்டிகளையும் மசாலாக்களையும், எண்ணெய்களையும் கலந்து பலதரப்பட்ட முட்டை உணவுகளைத் தயாரிக்கிறார்கள். முட்டையால் கிடைக்கிற கொலஸ்ட்ரால் ஆபத்தைவிட, இந்தக் கலப்புப் பொருள்களால் குடல் புற்றுநோய் உள்ளிட்ட ஆபத்துகள் வருவதுதான் பெரும் கவலைக்குரிய விஷயம். முட்டையை வேக வைக்காமல், பச்சையாகக் குடித்தால் உடலுக்கு அதிகச் சத்துக் கிடைக்கும்' என்று பொது மக்களிடம் ஒரு நம்பிக்கை உள்ளது. குறிப்பாக, குழந்தைகள், இளம்பெண்கள், தடகள வீரர்கள், உடலுக்கு வலு தரும் உடற்பயிற்சி செய்பவர்கள், விளையாட்டு வீரர்கள், பளு தூக்குபவர்கள் போன்றோர் அதிகச் சத்தைப் பெறுவதற்காகப் பச்சை முட்டையைக் குடிப்பார்கள். இதில் தான் ஆபத்து உள்ளது. பச்சை முட்டையின் வெள்ளைக் கருவில் 'அவிடின்' எனும் புரதச்சத்து உள்ளது. இது முட்டையில் உள்ள பயாட்டின் எனும் விற்றமினுடன் இணையும்போது, பயாட்டின் சத்து சிறுகுடலில் உறிஞ்சப்படுவது தடுக்கப்படுகிறது. அதேநேரத்தில் முட்டையை வேக வைத்துவிட்டால், அந்த வெப்பத்தில் அவிடின் அழிந்துவிடும். இதன் பயனாக, முட்டையில் உள்ள பயோட்டின் முழுமையாக உடலில் சேரும். அவிடின் சத்தைவிட பயாட்டின் தான் எமக்கு முக்கியம். குறிப்பாகக் கூந்தல் வளர்ச்சிக்கு இது தேவை. ஆகவே, வேகவைத்த முட்டையைச் சாப்பிடுவதே எப்போதும் நல்லது.

முட்டையில் 'சால்மோனல்லா' போன்ற பக்டீரியா கிருமிகள் இருக்க வாய்ப்பு உள்ளது. முட்டையை அவிக்கும் போது, அவை இறந்துவிடும் என்பதால் முட்டையின் மூலம் தைபோய்டு, வயிற்றுப்போக்கு போன்ற நோய் தொற்றுகள் ஏற்படுவது தடுக்கப்படும். இப்போது ஹோர்மோன் ஊசி போட்டுத் தான் பெரும்பாலான கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த மருந்துகளின் பாதிப்பு இறைச்சியில் மட்டுமல்லாமல், முட்டையிலும் இருக்கும் சாத்தியம் உள்ளது. முட்டையை வேகவைக்கும்போது இந்தப் பாதிப்புகள் குறைந்துவிடும். இருந்தாலும் நாட்டுக்கோழி முட்டைகளை வாங்கிப் பயன்படுத்துவதே மிகச் சிறந்தது.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 800 | 900 |
| நண்டு | 400 | 500 | 500 | 200 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 650 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 450 | 500 | 500 |
| முரல் | 300 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 300 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | – |
| ஓரா | 300 | 300 | 500 | – |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 300 | 400 | – |
| சூடை | 150 | 180 | 200 | 180 |
| ஒட்டி | 150 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | – |
| மதனம் | 200 | 250 | 300 | – |
| கொய் | 120 | 100 | 50 | 100 |
| பாலை | 150 | 300 | 500 | 300 |
| வாளை | 100 | 350 | 400 | 200 |


**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். நகருக்கு அருகில் 03 அறைகள் 02 ஹோல் இணைந்த குளியலறை ஆகிய சகல வசதிகளுமுள்ள வீடு உடன் வாடகைக்கு உண்டு.

**077 314 4128**

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை.

**தொடர்பு - 077 425 7397**

**வீடு வாடகைக்கு**

வவுனியா தோணிக்கல் பகுதியில் நான்கு அறைகளுடன் கூடிய சகல வசதிகளுடன் உள்ள வீடு வாடகைக்குண்டு.

**024 222 2289/076 322 3687**


# தாய்ப்பால் மிக அவசியம்

குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடையும்போது, அவர்களுக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று பல தாய்மார்கள் எண்ணுவார்கள். அதிலும் குழந்தைக்கு திட உணவுகள் கொடுக்க ஆரம்பித்தவுடன் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விடுவார்கள்.

குழந்தைகளுக்கு குறைந்தது 6 மாதம் தாய்ப்பால் கொடுப்பதால் எண்ணற்ற நன்மைகள் குழந்தைக்கும், தாய்க்கும் கிடைக்கும் என்கின்றனர் மருத்துவர்கள். ஏனெனில் குழந்தையின் முதல் உணவே தாய்ப்பால் தான்.

தாய்ப்பால்தான் குழந்தை வளர்ந்து நோயின்றி ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ மூலாதாரமாக உள்ளது. எனவே தாய்மார்கள் தவறாமல் குறைந்தது 6 மாதமாவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு அவ்வாறு குறைந்தது ஆறு மாதங்கள் தாய்ப்பால் கொடுத்தால், அவர்களுக்கு சுவாசக்குழாயில் நோய்த்தொற்றுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம். குழந்தையின் சுவாசக்குழாயானது மிகவும் மென்மையாக இருப்பதால், அவர்களுக்கு ஆறு மாதத்திற்கு முன் மற்ற உணவுப் பொருள் களைக் கொடுப்பதால், பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாய்ப்பாலானது குழந்தைக்கு வேண்டிய அடிப்படை ஊட்டச்சத்துக்களை கொடுப்பதால், அவற்றை குறைந்தது ஆறு மாதங்களாவது கொடுக்க வேண்டும். ஏனெனில் இவற்றில் விற்றமின்கள் மற்றும் இதர சத்துக்கள் எண்ணற்ற அளவில் உள்ளன. மேலும் குழந்தை யின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருளும் அதிகம் உள்ளன. ஆறு மாதத் துக்கு உட்பட்ட குழந்தைகளை நோய்களானது எளிதில் தொற்றிக்கொள்ளும். ஆகவே அவர்களுக்கு 6 மாதத்துக்கு மேல் தாய்ப்பால் கொடுத்து வந்தால், நோயெதிர்ப்பு சக்தியினால் நோய்கள் அண்டாமல் தடுக்கலாம். குறிப்பாக சளி பிடிப்பது, காது மற்றும் தொண்டையில் தொற்றுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

குழந்தைக்கு ஆறு மாத காலத்துக்கு முன்பே தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி, மாட்டுப்பால் அல்லது சோயா பால் கொடுக்க ஆரம்பித்து, பின் திட உணவுப் பொருள்களைக் கொடுத்தால், சில சமயங்களில் அழற்சியை ஏற்படுத்தும்.


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3019 திகதி:2018.04.11 புதன்கிழமை

ஊதா

01 24 37 60 K 28 38,700,795/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 224

வர்ணம் : பச்சை

சீட்டிழுப்பு திகதி: 2018.04.11

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,261,470/-

வெற்றி இலக்கங்கள்

34 43 58 72 L

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**DLB CAR PLUS**

சீட்டிழுப்பு இலக்கம் 53

சீட்டிழுப்பு திகதி 11.04.2018

வெற்றி இலக்கங்கள்

06 38 40 B ஞாயிறு

- 14 5, 585, 460/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி 11.04.2018 வெற்றி வாரம் 2280 வர்ணம் பச்சை

துலாம்

வெற்றி இலக்கங்கள் 06 29 32 62

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 53, 38, 040/=

2018.04.18 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா ஆறுமுகம்



பொலிகண்டி ஒதியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா ஆறுமுகம் நேற்று (11.04.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் செல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தவனம் ஆறுமுகத்தின் அன்புமனைவியும் கனகலட்சுமி, கிருஷ்ணமூர்த்தி, சீதாலட்சுமி, மனோரஞ்சிதம், சற்குணராசா(Lakeland Inter American School), கைலைநாதன், சர்வேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நமசிவாயம், விமலாதேவி, சுப்பிரமணியம், கோணலிங்கம், பவானி (சட்டத்தரணி), கிரிதா, விலாசினி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியும் பிரதீபா செல்வநாதன் (ஆசிரியை, வல்லை மகளிர் மகாவித்தியாலயம்). சசிதீபா, பிரதீபன் (லண்டன்), லுதீபா, கலைரஞ்சன், அதீபா, ஜனார்த்தனன் காலஞ்சென்ற யகிதா, அபிராமி, பிரதீபன், தர்மிளா, குசாலினி, குருஷோத், ஆர்ணிகன், ஆர்த்திகன், ஆர்ணிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் டினோசா, பவிஷ்கா, பவிஷா ஆகியோரின் அன்புப்பூட்டியும் தம்பையா முருகேசு, விஜயலட்சுமி, குலசிங்கம், கிருஷ்ணவேணி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச்சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2018) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் ஒதியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஒதியடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி இராசரத்தினம்



கரந்தன் நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி இராசரத்தினம் நேற்று (11.04.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (கோப்பாய் கந்தையா) அவர்களின் அன்புமனைவியும் மகேந்திரன், பரமலிங்கம், குலேந்திராசா, ஞானாம்பிகை, கமலாம்பிகை பாலாம்பிகை, பஞ்சலிங்கம் காலஞ்சென்ற தெய்வேந்திரராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் மல்லிகாதேவி, பேரின்பராணி, ஜெயராணி, ஞானாம்பாள், செல்வநாயகி, யோகராசா, கருநேசன் (ஆசிரியர், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு, கரந்தன்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# காயங்களால் இலங்கையின் வீரர்கள் அவதி

இலங்கை கிரிக்கெட் அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அந்த அணிக்கு எதிராக மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. எதிர்வரும் ஜீன் மாதம் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் இலங்கையில் முன்னணி வீரர்கள் பலர் காயம் காரணமாக அவதிப்பட்டு வருகின்றனர்.

இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ் காயம் காரணமாக, இலங்கையில் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முத்தரப்புத் தொடரைத் தவறவிட்டிருந்தார். அவர், காயத்தில் இருந்து தற்போது ஓரளவு நலம்பெற்று வருகிறார் என்று சொல்லப்படுகின்ற போதிலும் இன்னும் பூரண குணமடையவில்லை. இதனால் அவரின் பங்குபற்றலும் தற்போது தொங்கு நிலையிலேயே உள்ளது.

வேகப்பந்து வீச்சாளரான லக்மல், தொடைத்தசைநார் கிழிவு காரணமாக அவதிப்படுகிறார். இதனால், அவர் அணிக்குத் திரும்புதலும் தற்போது கேள்விக்குறியே. கரலில் ஏற்பட்ட காயம் காரணமாக நுவான் பிரதீப் அவதிப்பட்டு வருகிறார். அவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக விளையாட மாட்டார் என்று உறுதிப்பட அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விட இளம் வேகப்பந்து வீச்சாளர் மதுசங்க, துஸ்மிந்த சமீர, குணரட்ன ஆகியோரும் காயம் காரணமாக அவதிப்பட்டு வருகின்றனர். இலங்கையில் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசல் பெரேராவும் காயத்தால் அவதிப்பட்ட வருகிறார். அவரும் இலங்கை அணிக்கு விரைவில் திரும்புவது சந்தேகம்தான்.

ஆகவே அணியின் அரைவாசிக்கும் அதிகமான வீரர்கள் உடற் தகுதியை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் வேகப்பந்து வீச்சாளர்கள். மேற்கிந்தியத் தீவுகளின் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. எனவே அவர்கள் குணமடையாத பட்சத்தில் தீவுகள் இலங்கைக்கு மிகப்பெரும் சவாலாகத் திகழ வாய்ப்புக்கள் மிகவும் அதிகம். (ம)





# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் லியோ. 17ஆவது நிமிடத்தில் ஜீவன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. இரண்டாவது பாதியில் கோல்கள் எதுவும் பதிவாகவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

(ம-422,23)

# வைகறை சம்பியனானது



யாழ்ப்பாணம், ஏப். 12

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில், புதுமடம் வைகறை அணி சம்பியனானது.

நாவலர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)



# சுன்னாகம் ஸ்கந்தா ஸ்டார் ஹாட்லிசை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், ஏப். 12

கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணியை எதிர்த்து ஹாட்லிஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிஸ் அணி 24.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மணிமாறன் 33 ஓட்டங்களையும், பிரதீப் 28 ஓட்டங்களையும், புருசோத்தமன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரசாத் 3 இலக்குகளையும், தேவராஜன் 2 இலக்குகளையும் புருசோத்தமன், சோபிதன், தரணி, அஜிதன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணி 14.5 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக சதீஸ் 60 ஓட்டங்களையும், மிதுசாந் 28 ஓட்டங்களையும், துவாரகன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹாட்லிஸ் அணியின் சார்பில் நிசாந்தன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)

# 10 வாரத்துக்கு இல்லை யாசிர்

இடுப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதையைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளரான யசீர் ஷா, 10 வாரங்களுக்கு ஆட்டங்களில் பங்கேற்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. பாகிஸ்தான் அணியில் அடுத்த அட்டவணைகள், இங்கிலாந்து, அயர்லாந்து அணிகளுக்கு எதிராக உள்ளன. இந்த இரண்டு இரு தரப்புத் தொடர்களிலும் யாசிர் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யாசிர் ஷாவை இளம் சுழற்பந்து வீச்சாளராக சடப்கான், கிசப் பார்டி இருவரில் ஒருவரை வைத்துப் பிரதியீடு செய்யத் திட்டமிட்டுள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

(ம)



# நாடித்துடிப்பு எகிறியது: வெற்றி குறித்து டோனி



கொல்கத்தா அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின்போது. ஆட்டத்தின் திரில் தன்மையால் தன்னுடைய நாடித்துடிப்பு எகிறியது என்று தெரிவித்தார் சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவர் டோனி.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

“"இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்து இங்கு வெற்றி பெறுவது நல்ல உணர்வைத் தருகிறது. சென்னையின் முதலிரு ஆட்டங்களும் சென்னை இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்த ஆட்டங்களே. அனைவருக்குமான உணர்ச்சி மட்டங்கள் உள்ளன. நான் விதிவிலக்கல்லன். என்னுடைய நாடித்துடிப்பும் எகிறியது. அதனால்தான் ஓய்வறை என்ற ஒன்று உள்ளது. என் உணர்வுகளை நான் ஓய்வறையில் மறைவாகவே வெளிப்படுத்துவேன். இங்கு வெளியில் அமரும்போது அவ்வாறு வெளிப்படுத்துவதில்லை. களத்தில் எமது உணர்வுகளை வெட்ட வெளிச்சம் போட்டுக் காட்டினால் வர்ணனையாளர்கள் எம்மைப் பற்றி பேசுவதற்கு இடம்கொடுப்பதாகும். கொல்கத்தா அணியும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரண்டு அணிகளதும் பந்துவீச்சாளர்களுக்கு இந்த ஆட்டம் துர்க்கனவாக அமைந்திருக்கும்" என டோனி மேலும் தெரிவித்தார். (ம)

## நாம் தமிழர் கட்சியினர் என்னை தாக்கினார்கள்

*டோனியின் ரசிகர் குற்றச்சாட்டு*

“நாம் தமிழர் கட்சியினர் என்னைத் தாக்கினார்கள்" என்று குற்றச்சாட்டை முன்வைத்தார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவரான டோனியின் தீவிர ரசிகர்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதின. இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. காவிரி மேலாண்மை அமைப்பதில் புதுடெல்லி அரசு அசமந்தப் போக்கைக் கொண்டிருப்பதால் தமிழகத்தில் கட்சிகள் பலவும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. அவை ஐ.பி.எல். தொடர் தமிழகத்தில் நடத்தப்படக் கூடாது என்றும் வலியுறுத்தின. எதிர்ப்பையும் மீறி நேற்றுமுன்தினம் ஆட்டம் நடத்தப்பட்டது. ஆட்டத்தைக் காணவந்த ரசிகர்கள் சிலர் அரசியல் கட்சிகளின் நபர்களால் தாக்கப்பட்டனர். அவ்வாறு நானும் தாக்கப்பட்டேன் என்று தெரிவித்தார் டோனியின் தீவிர ரசிகர்.

“நாம் தமிழர் கட்சியினரே என்னைத் தாக்கினர். இதற்கு சீமான் பதில் சொல்ல வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (ம)



### தொடர் போராட்டத்தின் எதிரொலி

# தாயக ஆடுகளத்தை இழந்தது சி.எஸ்.கே.



நடப்புவருட ஐ.பி.எல். தொடரில், சென்னை சுப்பர் கிங்ஸின் அடுத்தடுத்த தாயக ஆட்டங்கள் சென்னையில் இடம்பெறாது என்று தெரிவிக்கப்பட்டது. தமிழகத்தில் ஐ.பி.எல். ஆட்டங்கள் வேண்டாம் என்று ஏற்பட்ட எதிர்ப்பை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டை முறைப்படி நடைமுறைப்படுத்தவும், தொடர்ந்து பேணவும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று புதுடெல்லி அரசுக்கு உத்தரவிட்டது இந்திய உச்சநீதிமன்றம். ஆனால், கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிந்த பின்னரும் மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் புதுடெல்லி அரசு களமிறங்கவில்லை. இதைக் கண்டித்து தமிழகக் கட்சிகள் பலவும் தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. ஐ.பி.எல். தொடரும் தற்போது நடைபெற்று வருகிறது. சென்னையில் ஐ.பி.எல். ஆட்டங்கள் நடைபெற்றால், அது மக்களினதும் இளைஞர்களினதும் கவனத்தைத் திசைதிருப்பும் என்பதால் ஆட்டங்கள் எவையும் நடத்தப்படக்கூடாது என்று அந்தக் கட்சிகள் வலியுறுத்தின.

இவ்வாறு எழுந்துள்ள மிகப்பெரும் எதிர்ப்பை அடுத்து, சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற



ஆட்டத்துக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ரசிகர்கள் எவரும் பதாகைகள், கொடிகள், தொப்பிகள், இலத்திரணியல் சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களைக் கொண்டுசெல்லத் தடை விதிக்கப்பட்டது. இது ரசிகர்களிடத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இவ்வளவு தடையையும் மீறி மைதானத்துக்குள் செருப்பு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. சென்னையில் அடுத்தடுத்த ஆட்டங்களும் நடைபெற இடமளிக்கப்பட மாட்டாது என்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அமைப்புக்கள் அறிவித்துள்ளதை அடுத்து, சென்னை அணியின் ஆட்டங்கள் வேறு மாநிலத்துக்கு மாற்றப்படவுள்ளது என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ம)

# குவிகிறது கண்டனம்

ஐ.பி.எல். தொடரில் சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ரசிகர்களால் மைதானத்துக்குள் செருப்பு வீசப்பட்ட சம்பவத்துக்கு சமூக வலைத்தளங்களில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அணியின் வீரர் பிளாசிஸ், செருப்பை எடுத்து ரசிகர்களிடத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் படம் சமூக வலைத்தளங்களில் தற்போது 'ட்ரெண்ட்'. சென்னையில் கடந்த 2015ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, பிளாசிஸ் தனது வருத்தத்தைத் தனது கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். அந்தப் பதிவையும் அவர் செருப்பை அகற்றும் பதிவையும் இணைத்து பல அதிருப்திப் பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

“சென்னையை நேசித்த ஒருவனுக்கு நீங்கள் கொடுத்த பரிசில் இதுதானா?" என்றவாறாக அந்தப் பதிவுகள் அமைந்துள்ளன. (ம)



# சென்னை சேப்பாக்கம் அரங்கில் 'நாம் தமிழர்' கட்சி போராட்டம்

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தின ஆட்டம் நடைபெற்ற சென்னை - சேப்பாக்கம் அரங்கில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரையில் அல்லது அது தொடர்பான அறிவிப்பு வரும் வரையில் தமிழகத்தில் ஐ.பி.எல். ஆட்டங்கள் இடம்பெறக் கூடாது என்று வலியுறுத்திய கட்சிகளில் நாம் தமிழர் கட்சியும் ஒன்று. அந்தக் கட்சியின் மைதானத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தனர். இதன்படியே ஆட்டத்தின்போது நாம் தமிழர் கட்சியினர் சுமார் 50 பேர் ஐ.பி.எல். ஆட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.



“ ஐ.பி.எல். ஆட்டங்கள் இடம்பெறக் கூடாது என்று வலியுறுத்திய கட்சிகளில் நாம் தமிழர் கட்சியும் ஒன்று. அந்தக் கட்சினர் மைதானத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

# உலகக்கிண்ணம் வென்றால் சட்டையில்லாமல் நடப்பேன்

## கோக்லி ருசிகரம்

"இங்கிலாந்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற நாட் வெஸ்ட் தொடரை வென்றபோது கங்குலி சட்டையைக் கழற்றிச் சுற்றினார். அங்கு அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரை வென்றால் ஒக்ஸ்பேர்ட் தெருவில் சட்டை இல்லாமல் நடப்பேன்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. கொல்கத்தாவில் அண்மையில் நடைபெற்ற புத்தக வெளியீடு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.



"இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடக்கும் உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றினால் சட்டையைக் கழற்றி நிச்சயம் ஒக்ஸ்பேர்ட் தெருவில் வலம் வருவேன். ஆனால் என்னுடன், ஹர்திக் பாண்டியா, ஜஸ்பிர்த் பும்ராவும் உடன் வருவார்கள். நான் மட்டும் தனியாக வலம் வருவேன் என்று நினைக்கவில்லை. நிச்சயம் ஹர்திக் பாண்டியா என்னுடன் வருவார் என்பதற்கு 120 சதவீதம் உறுதி. உடலில் சிக்ஸ் பேக்ஸ் வைத்துள்ள பும்ராவும் உடன் வருவார் என்பதில் சந்தேகமில்லை" என்று கோக்லி தெரிவித்தார்.

கங்குலியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். "ஆம் நிச்சயமாக இது நடக்கக்கூடிய விடயம்தான்" என்றார் அவர். (ம)

# வோர்ணர் இல்லாவிடினும் ஹைதராபாத் வலுவானது



"வோர்ணர் இல்லாத நிலையிலும் ஹைதராபாத் அணி வலுவாகத்தான் உள்ளது" என்று தெரிவித்தார் ஹைதராபாத் அணியின் பயிற்சியாளர் மூடி.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்ரியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மூடி இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் சமநிலைத் தன்மையுடனேயே வீரர்களைக் கொண்டுள்ளோம். மாறுபட்ட திறமை படைத்த ஏராளமான வீரர்கள் உள்ளனர். அணியை அவர்களைக் கொண்டு நிரப்ப முடியும். வோர்ணர் தற்போது இல்லை. அவருக்குப் பதில் வீரராக வில்லியம்சனை அடையாளம் கண்டுள்ளோம். வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்மாயின் வோர்ணரின் நிலை குறித்து நாங்கள் யோசித்துக் கொண்டிருக்க ஒன்றுமில்லை. அந்த இடத்தில் இருந்து நாங்கள் நகர்ந்து விட்டோம்" என மூடி மேலும் தெரிவித்தார். (ம)

# ராஜஸ்தான்- டெல்லி ஆட்டத்தில் மழை

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ராஜஸ்தான், டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மழை குறுக்கிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 17.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. பத்திரிகை அச்சுக்குப் போகும் வரையில் ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. (ம)






# தடையால் அதிகம் உடைந்தேன்

## ரசல் உருக்கம்

"எனக்கு விதிக்கப்பட்ட தடையால் அதிகம் உடைந்தேன். ஆனால், அந்தத் தடை என்னை மிகவும் வலுப்படுத்தியுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை" என்று தெரிவித்தார் ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வருபவரான மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரர் ரசல்.

"ஊக்கமருந்து சோதனையில் சிக்கி எனக்கு ஓர் ஆண்டு தடைவிதிக்கப்பட்டது. இந்த ஓர் ஆண்டு தடைதான் என் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தையும், பணிவையும் ஏற்படுத்தியது. என் அகங்காரத்தையும், ஆக்ரோசத்தையும் இந்த ஊக்கமருந்து தடைதான் உடைத்தது. இந்த ஒரு வருடத்தில் நான் பல்வேறு இழப்புகளைச் சந்தித்தேன்" என ரசல் மேலும் தெரிவித்தார். (ம)

# டோனி மட்டுமே 'கப்டன் கூல்' அவர் இடத்துக்கு எவருமிலர்

## பில்லிங்ஸ் வெளிப்படை



"டோனி ஒருவரே கப்டன் கூல். அவர் போன்று களத்தில் அமைதியைக் கடைப்பிடிக்கக்கூடிய வீரர்கள் எவருமில்லை" என்று தெரிவித்தார் சென்னை அணியின் நட்சத்திர வீரர் சாம் பில்லிங்ஸ். சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை அணி போராடி வெற்றிபெற்றது. பில்லிங்ஸின் இன்னிங்ஸ், மிகச் சிறப்பாக அமைந்தது. ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே பில்லிங்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் முதல் முறையாக இடம்பெற்று, அதிலும் உலகின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான மகேந்திர சிங் டோனியுடன் இணைந்து முதல் முறையாக விளையாடினேன். களத்தில் டோனி பொறுமையாக, அமைதியாக, கூலாக இருப்பதைப்போல், வேறு எந்த வீரராலும் இருக்க முடியாது. அவருடன் இணைந்து விளையாடியதால் என்னவோ அவரின் குணாங்கள் எனக்கும் அந்த நேரத்தில் பரவிவிட்டது. நான் அடித்து விளையாடும்போது, டோனி என்னை ஊக்கப்படுத்திக்கொண்டே இருந்தார். அவர் அற்புதமாக தலைவர், வீரர், மனிதர்" என பில்லிங்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

**விசேட வழிகாட்டல் வகுப்பு**

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இற்கான தடைகாண் பரீட்சைக்கான வழிகாட்டல் நிகழ்கால நிர்வாகத்தையும் வினாக்களையும் உள்ளடக்கிய சிறந்த வழிகாட்டலாக அமையும்.

2018.04.13 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி

DCM கல்வி நிலையம்
(யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)
வளவாளர் - ஆ. சத்தியமூர்த்தி
T. P: 077 1676 457

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32, 34 வயதுகளுடைய மகம் மற்றும் உத்தரம் நட்சத்திரங்களில் பிறந்த பொறியியலாளர் ஒருவருக்கும், சட்டத்தரணி ஒருவருக்கும், அழகிய, படித்த, நற்குணமுடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்கின்றனர்.

தொடர்பு - 077 487 9494

**Vacancies for Assistant Accountants, Accountants & Internal Audit Officer**

We are looking for a dynamic and Professionally qualified person who is seeking a challenging career in Assistant Accountants, Accountants & internal auditor to join the Northern Central hospital (Private) Limited.

**Ideal candidate should possess following qualifications.**

- Business level of ICASL or skills level of ACCA or
- HNDA, BBA, B.Com, AAT Completed with At - least two years of experience in a reputed commercial establishment.
- Previous experience in health care sector would be a definite advantage.
- Age should be below 35 years.
- Good command in English both verbal and written communication
- Proficiency in MS office a Accounting software package (Tally)

If you are really interested, Please send your CV on or before 25th April, by E mail or post or deliver to the Receptionist Counter.

Human Resources Manager
Northern Central Hospitals (Private) Limited
No. 342, Palaly Road, Jaffna.
Contact No.: 077 773 2892, 021 721 7324, 021 221 9988
E-mail : northernhrm@gmil.com
(IN 6455/15/17)

**வட மாகாண பரீட்சைக்கான வகுப்புக்கள்**

சாரதி தெரிவு, முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
வெள்ளி, ஞாயிறு
10.00 - 3.00

முகாமைத்துவ உதவியாளர்
ஞாயிறு
10.00 - 3.00

D.M.I வெலிங்டன் சந்தி, SDB வங்கி எதிரில் டானியல் கட்டடம் 2 ஆம் மாடி.
021 222 3382

**New Sky Computer TRAINING CENTRE**

சிங்களம் பாடசாலை மாணவர்களிற்கானது அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

கணினி
MS Office 2016, Internet & E-mail, Graphic Design, DTP, Kids Pro, Web Design.

021-221-5992
நல்லூர், யாழ்ப்பாணம்

**விசேட வழிகாட்டல் வகுப்பு**

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் II இற்கான தடைகாண் பரீட்சைக்கான வழிகாட்டல் நிகழ்கால நிர்வாகத்தையும் வினாக்களையும் உள்ளடக்கிய சிறந்த வழிகாட்டலாக அமையும்.

2018.04.13 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி

DCM கல்வி நிலையம்
(யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)
வளவாளர் - ஆ. சத்தியமூர்த்தி
T. P: 077 1676 457

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.